ரியீடு — சகா.

16672

672

# இளவரசன்
# தற்குலோத்துங்கன்

தமிழாசிரியர்

ஜ. இராஜு முதலியார்

எழுதியது

முக வெளியீடு—சக்கு

# இளவரசன் முதற் குலோத்துங்கன்

(ஒரு நாடகம்)

பூவிருந்தவல்லி, போர்டு
உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர்
ஜ. இராஜு முதலியார்
எழுதியது.

UNIVERSITY EXTENSION LIBRARY
7 DEC 1961
MADURAI

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி :: சென்னை.

First Edition May, 1946

(Copy-right)

*Published by*:
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
TIRUNELVELI & MADRAS

16672

T V. C. Press, G. T. Madras For Q. H.M.S. 95-B.5-'46 1000C.,

# இளவரசன் - முதற் குலோத்துங்கன்

## முன்னுரை

—:—

அமிழ்தினு மினிய நந்தமிழ் மொழியிலே பல்லாயிரக்கணக்கான நூல்கள் வெளிவருகின்றன. எனினும், அவற்றுள் மாணவர்கட்குப் பயன்படும் முறையில் வெளிவந்தவை சிலவே. சென்ற ஆண்டு முதலாகத் துணைப் பாடங்களும் உயர்நிலைப் பள்ளிகட்கு வேண்டுமெனக் கல்வித்துறையார் கட்டளையிட்டுள்ளனர். துணைப் பாடமாக ஆங்கிலத்திலே அமைந்திருப்பவை போலத் தமிழிலே சிறந்த முறையில் மிகுதியாக இல்லையென யாவரும் அறிவர்.

தமிழ் கற்கும் மாணவர்கள் தாங்களாகவே பயின்றுகொள்ளத்தக்கதாய், நல்ல தமிழ் நடையுடையதாய், விருப்பமூட்டத்தக்கதாய், நாட்டுப் பற்றையும் மொழிப் பற்றையும் வளர்க்கக்கூடியதாய்த் துணைப் பாடச் சுவடியிருத்தல் வேண்டும்.

இளவரசன் — முதற் குலோத்துங்கன் என்னும் இச்சுவடியில் என்னால் இயன்றவரையில் மாணவர்கட்கு நலம்பயக்க முயன்றுளேன். அது நிறைவேறுமேல் என்னோக்கம் நிறைவேறும்.

முதற் குலோத்துங்கன் கி. பி. 1043 முதல் 1120 வரையில் தமிழ் நாட்டில் வாழ்ந்த ஒரு சிறந்த பேரரசன். இவன் தந்தை கீழைச் சாளுக்கியனான இராசராச நரேந்திரன், தாய் இராஜேந்திர சோழன் மகளான அம்மங்கை தேவி.

இராசராச சோழனும் அவன் மகன் இராஜேந்திர சோழனும் எவ்வாறு சிறப்புற்றார்களோ அவ்வாறே இவனும் சிறப்புற்றான்; கலிங்கப் போரிலே வெற்றிகொண்டு சயங்கொண்டார் என்னும் புலவர் பெருமானால் வாழ்த்தப்பெற்றான். அப்போரின் வெற்றிச் சின்னமே 'கலிங்கத்துப் பரணி' கலிங்கத்துப் பரணியே பரணி நூல்களிற் சிறந்தது. "பரணிக்கோ சயங்கொண்டான்" எனச் சயங்கொண்டாருக்குப் புகழ் வளரச் செய்தது இந்தக் கலிங்கத்துப் பரணியே.

கங்கைகொண்ட சோழனான இராசேந்திர சோழன் மக்களில் வீர ராசேந்திர சோழன் மகன் அதிராசேந்திரன் உள்நாட்டுக் குழப்பத்திற் கொலையுண்டதனால், வேங்கிநாட்டரசனான இவன் சோழ நாட்டுக்குத் தோன்றலானானெனச் சூழ்ந்துரைக்கின்றனர். எனவே, அதிராசேந்திரனுடன் சோழர் குடி முடிவடைந்ததெனச்

சொல்லலாம். சாளுக்கியனான இவன் உபய குலோத்துங்கனா னன். மேலும், இவன் அம்மான் வீரராசேந்திரன் உயிருட னிருக்கும்போதே இவனைச் சோழநாட் டிளவரசனாக ஆக்கியுள் ளான். அதிராசேந்திரன் பட்டத்தரசியின் மகனல்லாததாலும் ஆளுந் திறனும் அறிவு மில்லாதவனாதலாலுமே அங்ஙனம் நேர்ந்த தென்கின்றனர்.

இந்த நாடகம் முதற் குலோத்துங்கன் சோழ நாட்டைப் பெற் றதைத் தழுவி யெழுதப்பெற்றது. வரலாற்றிலே அதிராசேந் திரன் உள்நாட்டுக் குழப்பத்திற் கொலையுண்டதாகக் கூறப்பெற் றுளது. இந்த நாடகத்திலே தற்கொலை செய்துகொண்டதாகச் சாற்றியுள்ளேன். அதிராசேந்திரன் முதற் குலோத்துங்கனுக்கு நஞ்சிட்டுக் கொல்ல முயன்றதாக வருவது கற்பனையே. ஆறும் விக்கிரமாதித்தன் இளவலாகிய சயசிம்மன் மதுராந்தகியைக் காதலித்ததாகவும் அதனை நிறைவேற்றப் பல சூழ்ச்சிகள் செய்த தாகவும் அமைத்திருப்பதுவுங் கற்பனையே. நாடகத்திலே வரும் வீரவேள், அதிகன், கமலை, விமலை, ஆறு முரடர்கள், ஒரு வீரன் ஆகியோர் கற்பனைப் படைப்பாளர்கள். குலோத்துங்கனுடைய வாழ்க்கையில் இடையிலே கலக்கின்ற சயங்கொண்டார் இந்த நாடகத்திலே இளவரசனாக இருக்கும்போதே கலந்து விடுகிறார் சில நிகழ்ச்சிகளும் முன்பின்னாக மாறுகின்றன.

இந்த நாடகம் சென்ற ஆண்டிலே பூவிருந்தவல்லி உயர்நிலைப் பள்ளியிலே மாணவர்களால் நடிக்கப்பெற்றது. நடையிலுங் கதைப் போக்கிலும் சில மாறுதல்களுடன் துணைப்பாடச் சுவடி யாக இப்போது வெளியாகிறது.

இதனைத் தமிழன்னையின் மலரடியிலே ஓர் மலராக இட ஒப் புக்கொண்ட தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தார்க்கு மிகவும் நன்றியறிவுடையேன். இக்கழகமே இப்போது தமிழ் நூல்களை நன்முறையில் வெளியிடுவதில் தலைசிறந்து நிற் கிறது. இக்கழகத்தின் தமிழ்ப்பணி வாழ்வதாக!

கல்வித் துறையாளர்களும் ஆசிரியர்களும் இச்சிறு நூலை யேற்று மேன்மேலுந் தமிழ்ப் பணியில் ஊக்கமூட்டுவார்களென நம்புகிறேன்.

பூவிருந்தவல்லி }
10–5–46 }

இங்ஙனம்,
ஆக்கியோன்.

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# இளவரசன் - முதற் குலோத்துங்கன்

## நாடகச் சுருக்கம்

---

சோழ மன்னர்களிற் பிற்காலத்தவர்களிற் சிறப்புற்றவன் இராசேந்திர சோழன் என்பவன். அவனே கங்கைகொண்ட சோழன். கங்கைகொண்ட சோழபுரம் அவன் வடநாட்டு வெற்றியைக் குறிக்கின்றது. அதுவே பிற்காலச் சோழர்களின் தலைநகர்களில் ஒன்ருகவு மிருந்தது.

ஏறக்குறைய கி. பி. 1062-ஆம் ஆண்டில் ஒருநாட் காலை நம் நாடகம் தொடங்குகிறது.

கங்கைகொண்ட சோழபுரத்தின் அரண்மனைப் பூங்காவிலே ஓரிளவல் சிந்தனையோடு உலாவிக்கொண்டிருக்கிருன். அவன் அழகினும் ஆண்மையினும் அறிவினுஞ் சிறந்து காணப்பெற்ருன். எனினும், அவன் சிந்தனை அவனைத் தளர்ந்த களிறெனக் காட்டியது. அக்காலைப் போதினும் நெற்றியிலே வியர்வை துளித் துளியாக அரும்பியது. அவனே பிற்காலத்திற் கலிங்கத்தை வென்று பரணிகொண்ட முதற் குலோத்துங்கன்! அவன் சிந்தனையிலே தேங்கியிருப்பதை அவனைக் காணவந்த அவன் நண்பர் சயங்கொண்டார் என்னும் புலவர் பெருமானுர் வினவினர். அவன் கூறியது :

"நான் சோழர் சோற்றை யுண்டு வளர்கிறேன். இங்கேயே கல்வி கற்றேன். அன்புடனும் ஆதரவுடனும் வாழ்கிறேன். எனினும் என் பாட்டனுர் காலமுதல் சோழர்கள் அருளாலேயே அவர்களின் கீழ்ச் சிற்றரசர்களாகவே வாழ்கிருேம். தன் மதிப்பற்ற அடிமைத்தனம் இது. இதுவே என்னை வாட்டுகிறது."

புலவர் கூறிய பொருள் பொதிந்த விடை :—

"வாழ்வும் தாழ்வும் மாறிமாறி வரும். அதிராசேந்திரன் ஆளுந் திறனற்றவன். அவன் தமக்கையின் கணவன் ஆரும்

விக்கிரமாதித்தனிருப்பினும் தாங்களே அரசராக முடியும். காற்றும் நெருப்பும் போலக் கருணாகரத் தொண்டைமானும் மதுராந்தகனும் உள்ளனர் தங்களுக்குப் பணி புரிய. மேலும், தங்கள் அம்மான் வீரராசேந்திரரும் தங்களையே விரும்புகிறார்.''

இந்தத் தேற்றவுரையால் மகிழ்ந்த குலோத்துங்கன் அவருடைய நுண்ணறிவைப் புகழ்ந்து அவருடன் அரண்மனையினுட் புகுந்தான்.

அவர்கள் சென்றவுடன் ஓர் பூஞ்செடியின் மறைவிலிருந்து அதிராசேந்திரன் வெளிவந்தான். பெருமூச்செறிந்தான்; சீற்றம் மேலெழக் குலோத்துங்கனை வைதான். தன் தோழர்களை நாடிச் சென்றான்.

அவன் தோழர்களில் ஒருவன் வீரவேள் எனும் பெயரினன்; நற்பண்புடையோன். மற்றையோன் குற்றமே வடிவான கோழை; அதிகனெனும் பெயரினன். வீரவேள் குலோத்துங்கனைப் புகழ்ந்தான். அவனை ஒழிக்க முடியாதெனவும் உரைத்தான். குலோத்துங்கனை யாவரும் புகழ்வதையும் அதிராசேந்திரன் தந்தையே குலோத்துங்கனைக் கொண்டாடுவதையும் அதிகன் எடுத்துக் காட்டி அத்தகைய எதிரியை அழிப்பதே அறிவுடைமை யென்றான். எனினும், அவனும் குலோத்துங்கனை அழிப்பது அருமையென்பதை ஒப்புக்கொண்டான். மறுநாள் ஆராய்ந்து விடை கூறுவதாக இரு நண்பர்களும் ஏகிவிட்டனர்... ...அதிராசேந்திரன் அவர்களாற் பயனில்லையென அறிந்து தானே கெடுக்க எண்ணங்கொண்டான்.

அன்றிரவு கனவிலே வீரவேள் பிதற்றுவதைக் கொண்டு அவன் மனைவி விமலை குலோத்துங்கனுக்குக் கெடுதி நேர இருப்பதை அறிந்துகொண்டாள். விமலையுங் கமலையும் மதுராந்தகியின் ஆருயிர்த் தோழிகள். மதுராந்தகி வீரராசேந்திரன் தமயனை விசயராசேந்திரன் மகள்; குலோத்துங்கன்மேற் பெருங் காதல் கொண்டவள்; அழகிலும் பண்பிலும் சிறப்புற்றவள்; சோழர் குலக்கொடி.

மறு நாள் மதுராந்தகியும் விமலையுங் கமலையும் கூடிப் பேசிக்கொண்டிருக்கும்போது அதிராசேந்திரன் மதுராந்தகியை அழைத்

துச் சென்றான். அப்போது அதிராசேந்திரனைக் கண்டவுடன் விமலைக்கு அவனுடைய கெடுமதி தோன்றியது. அதைக் கமலைக்குக் கூறிக் குலோத்துங்கனைக் காக்க அவளைக் கேட்டுக்கொண்டாள். கமலை அரண்மனையிலேயே யிருப்பவளாதலால் ஒப்புக்கொண்டாள்.

அன்றைய இரவு அதிராஜேந்திரன் குலோத்துங்கன் விடுதிக்குச் சென்று நெடும்போது பேசிக்கொண்டிருந்தான். அப்போது வேலைக்காரன் இருவருக்கும் பால் கொணர்ந்து வைத்துச் சென்றான். அதிராசேந்திரன் தனக்குப் பால் வேண்டாமென்று கூறி வெந்நீர் மட்டும் விரும்பினான். குலோத்துங்கன் வெந்நீர் கொணர உள்ளே சென்றான். அப்போது அங்கே வைத்திருந்த பாலில் அதிராஜேந்திரன் தான் மறைத்து வைத்திருந்த நச்சுப் பொடியையிட்டான், அதை மறைந்திருந்த கமலை கண்டு நடுங்கினாள். வெந்நீர் கொண்டுவந்தான் குலோத்துங்கன். அதைப் பருகிவிட்டு அதிராசேந்திரன் சென்றுவிட்டான். குலோத்துங்கன் பாலைப் பருகு முன்னமே கமலை நிகழ்ந்ததைக் கூறினாள். பூனை ஒன்றைப் பிடித்துப் பாலை யூற்றிப் பார்த்தனர்; நஞ்சென்றறிந்தனர்.

மறுநாட் காலை, கமலை மதுராந்தகியுடன் உரையாடிக்கொண்டிருக்கும்போது அதிராசேந்திரன் அங்கு வந்தான். கமலை இரவு நடந்ததைப் பாம்பு பாலில் நஞ்சைக் கக்கியதாகத் திரித்துக் கூறினாள். அதிராஜேந்திரன் தன் முயற்சி தடையுற்றதையும் ஆனால், அது வேறுவிதமாக மாறியதையும் நினைந்து வெட்கிச் சென்றான்.

அதே காலத்தில் குலோத்துங்கன் தன் நண்பன் கருணாகரத் தொண்டைமானுடன் பூங்காவிலே உரையாடிக் கொண்டிருந்தான். தன் நிலையை விளக்கிக் கூறினான். அதிராசேந்திரன் இனியும் ஏதாவது சூழ்ச்சி செய்யலாமாகையால், எச்சரிக்கையுடனிருக்க அவ்விருவரும் முடிவு செய்தனர். அப்போது மதுராந்தகி வருவதையறிந்த கருணாகரத் தொண்டைமான் விடைபெற்றுச் சென்றான்.

மதுராந்தகி குலோத்துங்கன் பாலில் பாம்பு நஞ்சைக் கக்கியதாகத் துக்கப்பட்டாள். அவன் வாய் மொழியிற் கேட்டு ஆறுதலடைய விரும்பினள். குலோத்துங்கன் அவளுடைய காதலின் வன்மையை அறிந்து மகிழ்ந்து ஆறுதல் கூறினன். இருவரும் மணம்புரிந்துகொள்வதாக உறுதிகொண்டனர்.

வீரராசேந்திரன் தன் மகன் அதிராசேந்திரனுக்கு நற்பண்புகள் நவின்று தெருட்டுகிறான். அப்போது குலோத்துங்கன் தன் தந்தையின் கவலைக்கிடமான நோய் நிலையைக் கொண்டு வந்த முடங்கலுடன் வந்து அம்மான் ஆணையுடன் காலையில் வேங்கி செல்லப் புறப்பட முடிவு செய்தான்.

அதிராஜேந்திரனும் அதிகனும் அன்றே கூடி உரையாடிக் கொண்டிருக்கையில் இரட்டபாடியரசன் தம்பி சயசிம்மன் மாறுவேடத்துடன் வந்து, சூழ்ச்சி செய்து தானே குலோத்துங்கனைத் தொலைத்துவிடுவதாகவும் அதற்குக் கைம்மாறாக மதுராந்தகியைத் தனக்கு மணம் புரிவிக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டு சென்றான்.

குலோத்துங்கன் தன் நண்பர்களுடன் வேங்கியை நோக்கிச் செல்கையில், சயசிம்மன் ஆணையின்படித் தாக்கிய ஆறு முரடர்களைக் கொன்று சென்றான். சயசிம்மனும் மறைந்திருந்து அப் போரைக் கண்டு அஞ்சிச் சென்றுவிட்டான்.

வேங்கியில் இராசராச நரேந்திரன் இறந்துவிட்டதனால், அவன் தம்பி விசயாதித்தன் குலோத்துங்கனையே அரசனாக முடி சூட்டினன். அப்போது வீரராசேந்திரன் சோழ நாட்டை அதிராசேந்திரனிடம் ஒப்பித்துவிட்டு வந்து சேர்ந்தான்.

இரட்டபாடியில் இருந்த விக்கிரமாதித்தன் இராசராச நரேந்திரன் இறந்ததை யறிந்து படைத் தலைவன் சாமுண்டராயனுடன் வேங்கியின்மேற் படையெடுத்தான். சயசிம்மன் கங்கைகொண்ட சோழபுரத்தின்மேற் கதித்தெழுந்தான். இப்போரிலே சாமுண்டராயன் இறந்தான். விக்கிரமாதித்தன் தன் பகைவனும் மாமனுமான வீரராசேந்திரனால் முறியடிக்கப்பெற்று இரட்டபாடி படைந்தான். சயசிம்மன் கருணாகரத் தொண்டைமானாற் கதி கலங்கி அபசயசிம்மனாகத் திரும்பினன்.

இப்போர் முடிந்தவுடன் தாராவர்ஷன் என்னும் சக்கரக் கோட்ட மண்டலத்தரசன்மேற் குலோத்துங்கன் போருக்குச் சென்றான். வேங்கியில் விசயாதித்தனை வைத்து விட்டு வீரராசேந்தின் கங்கைகொண்ட சோழபுரம் திரும்பினான்.

தனக்கு முடிவு நெருங்குவதை யறிந்த வீரராசேந்திரன் தன் மகன் அதிராஜேந்திரனை அழைத்துக் குலோத்துங்கனிடம் அரசை ஒப்புவித்து மதுராந்தகியையும் மணம் புரிந்து வைக்கும்படிக் கூறியிறந்தான். ஆனால், அதிராசேந்திரன் அவ்வாறு செய்வது தன் மதிப்புக்குக் குறைவாகுமென்று எண்ணினான். எனினும், தந்தையின் கருத்துப்படியே குலோத்துங்கன் அரசாள்வதற்குத் தான் தடையாயிருக்கக் கூடாதெனத் தற்கொலை செய்து கொண்டான்.

அதிராசேந்திரன் இறக்கும்போது கூறிய மொழியால், வீரவேள் சிறையிலிருப்பதை அறிந்து, அவனைச் சயங்கொண்டார் விடுவித்து, மதுராந்தகியின் ஆணைப்படிக் குலோத்துங்கனுக்குச் சோழநாட்டின் நிலையை அவன் மூலம் அறிவித்தார்.

சயசிம்மன் வீரராசேந்திரனும் அதிராசேந்திரனும் இறந்ததை யறிந்து துறவிபோல் வேடந்தாங்கி மதுராந்தகியைச் சந்தித்துத் தன் காதலை வெளியிட்டு அவளுடைய உள்ள உறுதியை மாற்ற முடியாமல் உளமுடைந்து திரும்பினான். அவன் காதல் தூய தாகையால் மதுராந்தகிக்கு எவ்வித இன்னலு மிழைக்க எண்ண வில்லை.

சக்கரக் கோட்ட மண்டலத்திற் பாசறையிலிருந்த குலோத்துங்கன் வீரவேளின் மூலம் சோழ நாட்டின் நிலையை அறிந்து விரைந்து வந்து மதுராந்தகியின் தனிமையைத் தவிர்த்தான். பிறகு, அவள் வேண்டுகோளின்படிக் குடிகளின் முழுமனத்தைப் பெற்றுச் சோழநாட்டையும் மதுராந்தகியையும் மணந்து இனிது வாழ்ந்தான்.

# நாடக உறுப்பினர்

1. **குலோத்துங்கன்** - வேங்கி நாட்டிளவரசன் (நாடகத் தலைவன்)
2. **வீரராஜேந்திரன்** - சோழநாட் டரசன்; குலோத்துங்கனுக்கு அம்மான்.
3. **இராஜ ராஜ நரேந்திரன்** - வேங்கி யரசன்; குலோத்துங்கன் தந்தை.
4. **விஜயாதித்தன்** - வேங்கியரசன் தம்பி.
5. **அதிராஜேந்திரன்** - வீரராஜேந்திரன் மகன்; சோழ இளவரசன்.
6. **விக்கிரமாதித்தன்** - இரட்டபாடி யரசன்.
7. **ஜெயசிங்கன்** - விக்கிரமாதித்தன் தம்பி.
8. **ஜெயங்கொண்டார்** - புலவர்; குலோத்துங்கன் நண்பர்.
9. **கருணாகரத் தொண்டைமான்**
10. **மதுராந்தகன்**
} குலோத்துங்கன் நண்பர்கள்.
11. **வீரவேள்**
12. **அதிகன்**
} அதிராஜேந்திரன் நண்பர்கள்.
13. **சாமுண்டராயன்** - இரட்டபாடித் தண்டநாயகன்.
14. **மதுராந்தகி** - சோழநாட் டிளவரசி. (நாடகத் தலைவி)
15. **விமலை** - வீரவேள் மனைவி.
16. **கமலை** - மதுராந்தகியின் தோழி.

மற்றும் ஆறு முரடர்கள், தூதன், ஒற்றன், காவலன் வேலைக்காரி, சோழ நாட்டுக் குடிகள்.

நாடகம் நிகழுமிடங்கள்: கங்கைகொண்ட சோழபுரம், வேங்கி, இரட்டபாடி, பாலாற்றங்கரைப் பள்ளத்தாக்கு, சக்கரக் கோட்ட மண்டலப் பாசறை.

# இளவரசன் - முதற் குலோத்துங்கன்.

ஒரு நாடகம்.

(வரலாற்றை ஒட்டியது)

## முதற் காட்சி

**இடம் :** கங்கை கொண்ட சோழ புரத்தில் அரண்மனையைச் சார்ந்த ஒரு பொழில்.

**காலம் :** காலை.

(குலோத்துங்கன் சிந்தனையுடன் உலாவிக் கொண்டிருக்கிறான் ஜெயங் கொண்டார் வருகிறார்.)

ஜெயங் : என்ன இளவரசே! ஏதோ கவலையோடு உலாவிக் கொண்டிருக்கிறீர்களே!

குலோத் : (தலை நிமிர்ந்து) ஓ! புலவரா! வாரும் வாரும்! இப்படி அமரும். (இருவரும் புல் தரையில் அமர்தல்)

ஜெயங் : நான் வினவினதற்கு விடை யில்லையே!

குலோத் : என்ன வினவினீர்?

ஜெயங் : கவலை யென்ன வென வினவினேன்!

குலோத் : (புன் முறுவலுடன்) எனக்கா? கவலையா? ஒன்று மில்லையே!

ஜெயங் : ஏன் மறைக்கிறீர்கள்? தங்கள் முகத்தில் கவலையின் சாயை படர்ந்திருக்கிறதே!

குலோத் : (புலவரின் கையைப் பற்றிக்கொண்டு) நண்பரே! நான் தனிமையிலிருக்கும் போதெல்லாம் இதே

கவலை தான்! இதற்கு வழி தேடவேண்டும். உம்மால் அதற்கு ஏதாவது கூற முடியுமா?

ஜெயங் : (அன்புடன்) தாங்கள் இன்ன தென்று முதலிற் கூறுங்கள்! என் உடல் பொருள் ஆவி யெல்லாம் தங்களுக்கே!

குலோத் : (தரையை நோக்கிய வண்ணம்) எங்கள் குடும்பத்திற்கு உண்டான குறை என்று ஒழியுமோ?

ஜெயங் : (வியப்புடன்) என்ன குறை?

குலோத் : என்ன குறையா? என் பாட்டனர் விமலாதித்தரை இராஜேந்திர சோழர் சிறை பிடித்ததிலிருந்து (கண்ணிலிருந்து நீர் துளிக்கிறது) எங்கள் நாடும் குடும்பமும் இந்தச் சோழர்கள் கொடுத்த பிச்சைதானே? இது தங்களுக்குத் தெரியாததா?

ஜெயங் : (அன்புடன்) அன்பரே! வருந்தாதீர்கள்! வாழ்வு ஒரு காலம்! தாழ்வு ஒரு காலம்! இனிமேல் தாழ்வு நீங்க வழி பிறக்கும்.

குலோத் : (ஏளனமாக) எப்படி?

ஜெயங் : தாங்கள் அறிவீர்கள்! இனி, இச் சோழ நாடே தங்களுக்குக் கிடைக்கலாம்.

குலோத் : (நகைத்து) என்னமோ கூறுவீர்களென நினைத்தேன். என்மேல் உள்ள அன்பினால் ஏதோ கூறுகிறீர்கள்!

ஜெயங் : இவ்வளவு காலம் என்னுடன் பழகியும் என் பேச்சில் நம்பிக்கை யில்லையா?

குலோத் : வானத்துலாவும் அம்புலியைப் பிடித்துத் தருகிறீர்களா?

ஜெயங் : வானத்து வாண் மதியன்று இஃது! தங்கள் காலடியில் விழும் பெருஞ் செல்வம்.

"மடியிலான் - தாளுளாள் தாமரையினுள்"

குலோத் : என்ன இயம்புகிறீர் புலவரே! இதுவா நட்புக் கழகு?

ஜெயங் : (நகைத்து) விளங்க வில்லையா தங்களுக்கு? இதுவரையில் சோழர் ஆட்சி சோராதிருந்ததற்கு ஆள்பவரின் ஆண்மையும் அரிய ஒழுக்கமுமே காரணம்.

குலோத் : உண்மையே. அப்புறம்?

ஜெயங் : இனி அத்தகைய அரசர் யார்?

குலோத் : (வியப்புடன்) அதிராஜேந்திரனைத் தகுதியற்றவனென்றோ கூறுகிறீர்?

ஜெயங் : நானா கூறுகிறேன்? நாடு நவில்கிறதே! மேலும்-

குலோத் : மேலும் என்ன?

ஜெயங் : வீண் புகழ்ச்சி யன்று! தங்களையே தக்க அரசரெனச் சகலரும் சாற்றுகிறார்கள்.

குலோத் : (வெட்கத்துடன்) ஏன் தாங்களும் சாற்றுகிறீர்கள்! இந்தச் சார்புரையால் சார்வது என்ன?

ஜெயங் : (புன் முறுவலுடன்) இது வரை இச்சோழர்களின் இன்னருளை வேண்டியிருந்த தங்கள் நாடும் குடும்பமும் தாழ்வு நீங்கி உயர்வு பெறும்! தாங்களே இரு நாட்டுக்கும் இணையற்ற ஏந்தலாவீர்கள்!

குலோத் : (கவலையுடன்) அஃது எங்ஙனம் அமையும்? அதிராஜேந்திரனும் அவன் தமக்கை கணவன் விக்கிரமாதித்தனும் விட்டு விடுவார்களா?

ஜெயங்: தங்கள் ஆற்றலில் தங்களுக்கு நம்பிக்கை யில்லையா? கருணாகரத் தொண்டைமான், மதுராந்தகன் ஆகிய இணையற்ற இருவீரர்களும் இவ்வுலகையே தங்கள் இணைமலரடியில் இனிதுறச் செய்வார்களே! "ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்-தாழாது உஞற்றுபவர்"—என்றார் நம் வள்ளுவர்.

குலோத்: (மகிழ்ச்சியுடன்) உழுவலன்பரே! இது தான் தங்கள் நட்பின் நயத்தை நன்கு காட்டுகிறது! கலங்கிக் கிடந்த வுள்ளத்தை நலங்கிளரக் கிளர்ச்சியுடன் எழச் செய்தீர்கள்! ஆம்! தோள்வலியால் என் குடும்பத்தின் களங்கத்தைக் குலைப்பேன்.

(அரண்மனையிலிருந்து மணியோசை கேட்கிறது)

ஜெயங்: அதோ கேளுங்கள் அணி மணி யோசையை! இராஜேந்திர சோழர் பெயரைத் தாங்கள் கொண்டதற்குக் குறைவின்றித் தென்னாடு மட்டு மன்றி வட நாடும் தங்கள் ஆட்சியில் தங்கும். அப்புகழை இணையற்ற தமிழ் மணிகளால் இழைத்து உலகமெங்கும் ஒளிரச் செய்வேன்.

குலோத்: தாங்கள் தெய்வப் புலவரா யிருக்கும் போது தங்கள் ஆசி பொய்க்குமா? வாருங்கள் அரண்மனைக்குப் போவோம்.

(இருவரும் செல்கிறார்கள். அருகிலிருந்த புதரின் பக்கத்திலிருந்து அதிராஜேந்திரன் வெளி வருகிறான்)

அதிராஜேங்: (சினத்துடன் தனக்குத்தானே) தெய்வப் புலவர் உய்வைத்தேடிக் கூறுகிறார் உற்ற தோழருக்கு! சாளுக்கியஇராஜேந்திரன் சோழ இராஜேந்திரனாவான்! உலகமெல்லாம் ஒரு குடை நிழலில் ஆளும் ஒப்பற்ற

தறுகண்மைமிக்க - சால்புடைய பேரரசனுவான் இப் பேடிப் பயல்!—என்ன துணிவு!....எங்கேயோ வேங்கி நாட்டிற் கிடக்க வேண்டிய வீணன் - எங்களால் வாழ்வை நடத்தி வரும் மக்கட் பதர் - சோழ நாட்டை ஆளப்போகிறுனும்! அடே! சாளுக்கிய நாயே! எச்சில் தின்ன வந்த உனக்கா ஆட்சி?........'நாய்க்கு முத்தங் கொடுத்தால் நன்ருய் இதழைக் கடிக்கும்!'.... இவனை வைது என்ன பயன்? என் தந்தை வீரராஜேந்திரரை யல்லவா நோவ வேண்டும்!....இனி அதை இயம்பிப் பயனென்ன? இந்த வெண்ணெய் வெட்டி வீரர்கள் என்ன இயற்றுகிருர்களெனப் பார்ப்போம். (போகிருன்)

---

## காட்சி 2

**இடம்** : அதிராஜேந்திரன் அரண்மனே.

**காலம்** : இரவு.

(வீரவேளும் அதிகனும் இருக்கையில் இருக்கின்றனர். அதிராஜேந்திரன் அமைதியின்றியுலவுகிருன்-)

அதிராஜேந் : சோழராட்சியில் இது வரையில் ஒரு காகமாவது குறுக்கே ஓடி யிருக்குமா?........மேலும் சோழர்கள் வட நாட்டினையும் வளைத்தாண்டனர்! இமய மலையிலே இணையிலாது பறந்தது எங்கள் புலிக் கொடி! ....வட நாட்டரசன் மகிபாலன் தலையிலே வட நாட்டுக கங்கையை மாண்புடன் கொண்டுவந்தனர்! 'கங்கை கொண்ட சோழர்' என்ற பெயரும் பெற்றனர்!

வீரவேள் : (மகிழ்வுடன்) நாங்கள் இயற்றிய நல்வினை! வீரராட்சியில் மிளிர்கிறோம்!

அதிகன் : இக் காலையிலேயும் எக் காகம் இந் நாட்டிற் பறக்கும்?

அதிரா : (சினத்துடன்) பறக்காதுதான்! குழந்தையின் கையில் உள்ள பண்டமாகத் தான் நினைக்கிறது இந் நாட்டை!

அதிகன் : என்ன என்ன! தெளிவாகச் செப்புங்கள்! காகம் கோடி கூடினுங் கல்லொன்றுக்கு எதிர் நிற்குமோ?

வீரவேள் : தாங்கள் இப்படி அமர்ந்து அமைதியாக உரையுங்கள்!

அதிராஜேந் : (நடந்து கொண்டே) வேங்கி நாட்டு விமலாதித்தனை ஏங்கச் செய்து சிறை பிடித்தனர்! அப்புறம் அவன் வேண்டிக் கொண்டதனால் விடுத்துப் பெண்ணையுங் கொடுத்து அவன் நாட்டையுங் கொடுத்தனர் திருப்பி.

வீரவேள் : அதுதான் சோழர்களின் உயர் பண்பு! இப்போது கூடப் பாருங்கள்! விக்கிரமாதித்தருக்கும் விழைந்து ஒரு பெண்ணைக் கொடுத்தனர் உம் தந்தையார்!

அதிராஜேந் : (நின்று) அது என்ன பண்பு என்கிறீர்?

வீரவேள் : ஏன் ! அது உயர் பண்பு என்கிறேன்!

அதிராஜேந் : (அமர்ந்து) வெளுத்த தெல்லாம் பாலென்கிறீர்!

அதிகன் : நன்று கூறினீர்கள்! நண்பர் வீர வேளின் பண்பு அத்தகையதுதான்! எல்லோரும் வெள்ளை இவருக்கு!

அதிராஜேந் : வீரவேள் அதை உயர் குணம் என விளம்பட்டும்! நான் அதைப் பாம்பிற்குப் பால் வார்க்குங் குணம் எனப் பகர்கிறேன். காட்டிற் கிடக்குங் கடு முள்ளைக் காலிற் றைக்கும் வண்ணம் வழியில் வாரியிடுவது என்கிறேன்.

வீரவேள் : அங்ஙன மன்று! மன்னித்து நன்மை செய்வதே மாண்பு. "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்—என்ன பயத்ததோ சால்பு"—என்றார் வள்ளுவர்.

அதிராஜேந் : (நகைத்து) அந்தச் சால்பை அங்ஙனமே கூறுகிறேன் கேளும்! விமலாதித்தனுக்கு இராஜராஜ சோழர் தம்மகள் குந்தவையைக் கொடுத்தார். விமலாதித்தன் மகன் இராஜராஜ நரேந்திரனுக்கு இராஜேந்திர சோழர் தம் மகள் அம்மங்கா தேவியை அணி மணம் புரிவித்தார். இப்போது இராஜ ராஜ நரேந்திரன் மகன் குலோத்துங்கன் இங்கே இனிது வாழ்கிறான்.

வீரவேள் : நன்று! அதனால் இரண்டு குடும்பங்களும் சேர்ந்து வாழ்கின்றன! பகைவரெல்லாம் பதுங்குகின்றனர்!

அதிராஜேந் : போமையா! பொல்லாத சேர்ந்து வாழும் புதுமையைக் கண்டு விட்டீர்! ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியாகப் பார்ப்பதை உன்னவில்லையே!

வீரவேள் : (முகம் வாடி) அப்படி யொன்று மிராது. குலோத்துங்கருடைய குண மென்ன! வீர மென்ன!

அதிராஜேந் : குணமும் வீரமும்! நெற் பயிரில் உண்டாகும் சேளங் கூட அழகாயும் செழிப்பாயும் அணி செய்கிறது. அதை அப்படியே விடுவார்களா?

அதிகன் : உண்மையுரை!

வீரவேள் : இது வரை யில்லாமல் இப்போது மட்டுங் களையாய் விட்டாரா அவர்?

அதிராஜேந் : அறியேன் இதுவரை அழகிய பாம்பிடம் பழகிய நஞ்சு இருப்பதை! இப்போதுதான் அறிந்தேன்.

வீரவேள் : (வியப்புடன்) எங்ஙன்?

அதிராஜேந் : நானும் இதுவரை குலோத்துங்கனைக் கொடியவனென நினைக்கவில்லை. இன்று காலை நம் பூங்காவில் அந்தச் சாளுக்கியனுங் கவியுமாகப் பேசிக் கொண்டதிலிருந்து இந்நாட்டை யடைய உறுவழி தேடுவார்களென உறுதியாயிற்று.

வீரவேள் : (பரபரப்புடன்) என்ன ! என்ன ! இந்நாட்டை யடையும் சூழ்ச்சியா ?

அதிராஜேந் : ஆமையா ! ஆம்! பாடிப் பாடிக் குற்றினு லும் பதரெங்கே பண்புடைய அரிசியாகும்? பதரை நீக்கவேண்டும் !

அதிகன் : அதுதான் தக்கது. 'தன்னைக் கொல்லவந்த பசுவையுங் கொல்லலாம்.' தம்மை நாட்டிலுள்ளோர் புகழ்வதைத் தப்பாக நினைத்தனர் போலும் அச் சாளுக்கியர் !

அதிராஜேந் : நன்று கூறினீர்.

அதிகன் : அவரைச் சார்ந்தவர்களெல்லாம் அவரை இங்கே வேர்கொள்ளத் தக்க முயற்சியுடன் குடிக ளிடம் குலோத்துங்கர் புகழைக் கூறி வருகிறார்கள். அதிராஜேந்திரரின் அருமை நண்பர்கள்கூடக் குலோத் துங்கரையே கூசாமற் புகழ்கிறார்கள் ! (வீரவேள் முகம் வாடுகிறது.)

அதிராஜேந் : அப்படியா ! குலோத்துங்கரைக் குடிகள் விரும்புகிறார்களா !

அதிகன் : மன்னிக்கவேண்டும். தங்கள் தந்தையாரும் குலோத்துங்கரை மதிப்புடன் நடத்துகிறார்; யாரிட முங் கூறுகிறார்.

வீரவேள்: (வருத்தத்துடன்) அதிகருக்குப் பேச்சின் அளவும் அதிகமாகிறது போலும்!

அதிராஜேந்: (அதிகனை நோக்கிய வண்ணம்) ஆகவே, எல்லோரும் சேர்ந்து சொன்ன சார்புரையால் குலோத்துங்கனைக் கொடும் பேராசைப் பேய் பிடித்தாட்டுகிறது!

அதிகன்: நன்றாகக் கூறினீர்கள்!

வீரவேள்: நல்லோரை நானிலமும் நயந்து புகழும்!

அதிராஜேந். (வெறுப்புடன்) சேச்சே! நீர் அதிகமாகப் போகிறீர்! சோழநாட்டை அந்த உண்டவீட்டுக் கிரண்டகம் புரியும் சாளுக்கியன் ஆளப் பார்க்கிறான்! அவனை நானிலமும் புகழுமாம்! இவரும் என் எதிரில் இசையோடு இசைப்பாராம் அவன் மெய்க்கீர்த்தியை. அதிகரே! குலோத்துங்கனை இனி உலவாவண்ணம் ஒழிக்க முடிவு செய்தேன்.

அதிகன்: நல்லது! நான் இதற்குத் துணை புரிவேன்.

வீரவேள்: (நடுக்கத்துடன்) அது அத்துணை எளிதா?

அதிராஜேந்: அரிதானால் அவனை ஆளும்படி விட்டுவிட்டுத் துறவியாகத் தொலையவேண்டுமோ? உம் கருத்துத் தான் என்ன?

வீரவேள்: (சிந்தனையுடன்) ஏன் அவ்வாறு வினவுகிறீர்கள்? தங்கள் கருத்தின் வண்ணம் திருத்தமாக நடப்பேன்.

அதிகன்: பின் ஏன் இந்தக் கோணல் கழி வெட்டுங் குறுக்குவழி?

வீரவேள்: எதைக் கூறினும் ஆம் ஆம் என்று தலை யாட்டுவதா அறிவுடைமை? அதுவா உண்மை நட்பு?

அதிகன்: மறுத்து மறுத்துக் கூறுவதுதான் மாண்புடை மையா?

அதிராஜேந்: வாது வேண்டாம். இப்போது உங்களை வரவழைத்தது இதற்கு ஒரு வழி தேடவே.

வீரவேள்: தங்கள் எதிரியின் நிலையை எண்ணிப் பாருங் கள்.

அதிகன்: ஆம் அரசே! கருணாகரத் தொண்டைமானும் மதுராந்தகனும் இருக்கிறார்கள்!

அதிராஜேந்: அறிவேன் அவர்களை! உங்களை அழைத்தது உறுதி தேடவே; உள்ளங் கலங்க வன்று.

அதிகன்: தகாத நெறியாயினுந் தளராமற் செய்துமுடிக்க வேண்டும்.

வீரவேள்: தகாத வழியிலா?

அதிராஜேந்: எந்த வழியாயினுமென்? இயன்ற வழியே தேடவேண்டும். நன்றாகச் சூழ்ந்து சொல்லுங்கள்.

அதிகன்: நாளை நவில்கிறேன் நன்கு சூழ்ந்து.

வீரவேள்: நானும் நாளையே.

அதிராஜேந்: நன்று! சென்று வாருங்கள் (செல்கிறார்கள்) (தனக்குத் தானே) நல்ல நண்பர்கள்! இவர்களின் துணையால் ஏழுலகையும் பிடிக்கலாம்! (நகைக்கிறான்) அதிகன் மதுவை மாந்தவே வல்லவன்! வீரவேள் சாரமற்ற கோழை! இனி இவர்களை நம்ப இயலாது.

———

## காட்சி 3

**இடம் :** கங்கைகொண்ட சோழபுரம். அரண்மனைப் பூங்கா.

**காலம் :** மாலை.

மதுராந்தகி, கமலை, விமலை, செய்குன்றில் அமர்ந்திருக்கிறார்கள். விமலை தமிழ் வாழ்த்துப் பாடுகிறாள்.

மதுராந்தகி: இசையின் இனிமையோ! பாட்டின்கண் பதிந்த பொருளின் பொருத்தமோ! இப்பாட்டினால் என் உள்ளம் கனிந்து நிற்பதை என்னென்றிசைப்பேன்! இப்பாட்டைப் பாடிய விமலைக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்! (தன் கழுத்திலிருந்த ஒரு முத்து மாலையை எடுத்து அவள் கழுத்தில் இட்டுத் தழுவிக்கொள்கிறாள்.)

விமலை: (வெட்கத்துடன்) இனி நான் பாடமாட்டேன் இப்படிப் புகழ்ந்தால்!

கமலை: இதிற் புகழ்ச்சியென்ன விமலா! அவ்வளவு இனிமையாகத்தான் இருந்தது. தமிழே இனிமை! அதுவும் இசையோடு கூடினாற் கேட்க வேண்டுமா?

விமலை: நீங்கள் கூறுவதைவிட இப்பாட்டில் நல்ல பொருளிருப்பதே கவர்ச்சிக்குக் காரணமென நினைக்கிறேன்.

கமலை: இசைக்குப் பொருள் வேண்டுமா என்ன? இசையால் இளகாத உள்ளம் பொருளான் மட்டும் இளகுமா? திருவள்ளுவர் கூறியிருப்பதைச் சிந்தித்துப் பார்.

மதுராந்: என்ன அது?

கமலை: அதுதான்! குழலையும் யாழையும் பற்றிக் கூறுகிறாரே அப்பாட்டு. (சிந்திக்கிறாள்)

விமலை: "குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்" என்பது தானே?

கமலை: ஆமாம்! அதுதான்!

விமலை: (நகைத்து) நன்று! கொஞ்சமும் ஆராயாமலே ஒப்புக் கொண்டாயே! இப்பாட்டின் பொருள் என்ன?

கமலை: (ஏளனமாக நகைத்து) பொருளுக்கென்ன? யாவருக்குந் தெரியுமே! நீதான் சொல்லேன்.

விமலை: குழலின் இசை, யாழின் இசை இவைகளைக் காட்டிலும் தங்களுடைய குழந்தைகளின் மழலைச் சொற்களே பெற்றோர்க்குப் பேரின்பந்தரும் என்பது தானே இதன் கருத்து?

கமலை: ஆமாம். அதனால் என்ன தெரிந்து கொண்டனை?

விமலை: என்னவா? குழந்தைகளின் பேச்சிலுள்ள பொருளுக்குத் தானே பெற்றோர்கள் மகிழ்கிறார்கள்? அப்படியிருக்க—

கமலை: என்னடி அப்படியிருக்க? பொருளுக்காக மகிழ்வதானால், நீ அக்குதலை வாய்க் குழவிகளை விட எவ்வளவோ நன்கு பொருள் விளங்க மிழற்றுவாயே; அதற்கல்லவோ மகிழவேண்டும்? மேலும் மழலை என்பது என்ன?

விமலை: மழலையென்பது திருந்தாத மொழியே. இருந்தாலும் அம்மொழிகள் அவர்களுடைய வாயிலிருந்து அரைகுறையாக வருவதைக் கேட்கவே பெற்றோர்கள் மகிழ்கிறார்கள். மதுராந்தகி! உன் கருத்தையுரைக்கவில்லையே!

மதுராந்: நான்மட்டும் என்ன நவில்வேன்? தனியிசையே நம் உள்ளத்தைத் தன்வயப்படுத்துமென்பது சரிதான்.

உள்ளமென்ன! கல்லுங் கனியும்! படமெடுத்தாடுங் கடு நாகமும் இசைக்கு வசப்படும்! கொடுவரி வேங்கையை யும் அடுகளிற்றையும் அரிமாவையும் அமுத இசையால் அமைதியுறச் செய்யலாம்! பட்ட மரமுந் தளிர்க்கும்! மற்றும் அவ்விசை பொருளோடு கூடிவிட்டாற் கேட்க வேண்டுமா? பொன் மலர்க்கு வாசனை வந்தது போலத் தான். அதற்குச் சான்று இப்போது விமலை பாடிய பாட்டுத்தான்.

விமலை: எனவே தனி யிசையைவிடப் பொருளோடு கூடிய இசையே இன்பந்தருவது என்பதுதானே நின் கருத்து?

கமலை: நீங்கள் இருவரும் இயம்பியதிலிருந்து என் பிடி சிறிது தளர்கிறது! எனினும், என் உள்ளம் இன்னும் தெளியவில்லை. பொருளின் இனிமையால் தான் இசையை விரும்புகின்றோமெனில், இசைக்குச் சற்றும் இசையே இசையாமற் போய்விடுமே!

மதுராந்: அவ்வாறன்று அதன் கருத்து! இசைக்குரிய இனிமையால்தான் அப்பாட்டிலுள்ள பொருள் மக்கள் மனத்திற் பதிகிறது; ஆர்வத்தையும் சேர்க்கின்றது.

(அதிராஜேந்திரன் வருகிறான்)

கமலை: மதுராந்தகி! உன் தமயனார் வருகிறார் (மூவரும் எழுதல்)

அதிராஜேந்: மதுராந்தகி! நான் உன்னுடன் சிறிது பேச வேண்டும். அரண்மனைக்கு வா. (அதிராஜேந்திரனும் மதுராந்தகியும் செல்கிறார்கள்)

விமலை: கமலா! இளவரசர் நிலை இப்போது என்ன வென்று தெரியுமா?

கமலே : என்னடி அது ?

விமலே : எனக்குச் சிறிது தெரியும். (அச்சத்துடன்) ஐயையோ! (வாயை மூடிக் கொள்கிருள்)

கமலே : (பரபரப்புடன்) என்னடி, ஐயையோ!

விமலே: நம் மதுராந்தகியைக் குலோத்துங்கருக்குத் தானே கொடுக்கப் போகிருர்கள்?

கமலே : இது பலரறிந்த பண்புடைய மறையாயிற்றே! இதற்குத் தாஞ வாயை மூடிக்கொண்டாய்?

விமலே : (சுற்றுமுற்றும் நோக்கி) அரண்மனையிலே இப்போது அடாத செயல்கள் அடுக்கின்றன! நாம் அதற்குச் செய்வதென்ன?

கமலே : (வியப்புடன்) என்னடி நடக்கிறது?

விமலே : (நடுக்கத்துடன்) இந்த இளவரசர் அந்தக் குலோத்துங்கரை அழிக்க வழி தேடுகிருரடி!

கமலே : (பரபரப்பாக) என்ன என்ன ! ஏன் அந்த எண்ணம் ?

விமலே : அதுதான் எனக்கும் எட்டவில்லே ? ஐயோ! நம் மதுராந்தகி இதை அறிந்தால்....

கமலே : (இரக்கத்துடன்) மிகவும் வருந்துவாளே!

விமலே : அவளே முன்னிட்டாவது குலோத்துங்கருக்கு உதவவேண்டும். அந்த உறுதுணையும் உன்ஞல்தான் ஆகவேண்டும். நீதானே அரண்மனையிலிருக்கிருய்?

கமலே : என்ஞல் என்னடி இயலும்?

விமலே : குலோத்துங்கரை அடிக்கடி பார்த்துக்கொள்ள வேண்டும். ஏதாவது நேருமாஞல் எச்சரிக்கவேண்டும்.

**கமலே :** (உறுதியாக) அப்படியே பார்த்துக்கொள்கிறேன். வேறு எவருக்கும் இது தெரியாதே?

விமலே : ஒருவருக்குந் தெரியாது. நீயும் வெளியிடாதே. மதுராந்தகிக்குந் தெரியலாகாது. தெரிந்தால் ஒரேயடியாய்க் கவலேப்படுவாள்.

**கமலே :** உண்மையே. நாமென்ன, கோழைப் பெண்கள்! இறைவன்தான் நமக்குத் துணைபுரியவேண்டும்.

(போகிருர்கள்)

---

## காட்சி 4

**இடம் :** கங்கை கொண்ட சோழபுரம்: குலோத்துங்கன் அரண்மனே.

**காலம் :** முன்னிரவு.

குலோத்துங்கனும் அதிராஜேந்திரனும் உரையாடல்.

குலோத் : நெடுநாளாய் ஒன்றுரைக்க வேண்டுமென்றுன்னினேன்.

அதிராஜேந் : என்ன அது?

குலோத் : உன் நலத்திணையொட்டியது.

அதிராஜேந் : நன்று.

குலோத் : குற்றமாகக் கொள்ளாதே.

அதிராஜேந் : அடடா! முன்னுரை வேண்டாம்.

குலோத் : (கவலேயுடன்) உன்னேக் குடிகள் வெறுக்கிருர்கள்.

அதிராஜேந் : (ஏளனமாக நகைத்து) அப்படியா? முன்னுரையால் முடிந்தது இதுதானு?

குலோத் : நகைத்துவிடக் கூடியதா இது?

அதிராஜேந் : பின் என்ன அப்பா! வேறு ஏதாவது உண்டா?

குலோத் : நல்ல நட்பும் இல்லை.

அதிராஜேந் : சான்ற அறிவுரை ! என் நண்பர்களின் இயலை நீ எங்ஙனம் அறிவாய்? அறிந்தாலும் அவர்களைப்பற்றி என்னிடமே இகழ்ந்து கூறல் அறிவுக்குறையன்றோ?

குலோத் : (நகைத்து) அப்படியா? அவர்கள் நல்லவர்களாக—உன் நலத்தை நாடுகிறவர்களாக—இருந்தால் நல்லதே.

அதிராஜேந் : அதை அறிவேன் அடியேன்! வேறு ?

குலோத் : வேறு என்ன? நலமென நாடியதை நவின்றேன். குடிகளின் உள்ளங் குறைபட நடக்கிறாய். அவர்களை மதிப்புக் குறைவாக நடத்துகிறாய்? நீ புரியும் அடாத செலவுகளுக்கெல்லாம் உரிய எடுப்பு அவர்களுடைய வரிப் பணத்தால்தானே?

அதிராஜேந் : (நகைத்து) நீ எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்கிறாய்? அதையும் அறைந்து விடு.

குலோத் : நான் நவில்வது நன்மையே. குற்றமாகக் கொள்ளாதே. நாம் குடிகளை அன்புடன் நடத்தவேண்டும். அவர்களுடைய அன்பே நம் உயரிய இருக்கை; கூரிய படை; நல்ல செல்வம்.

அதிராஜேந் : ஒன்றுக்கும் உதவாத உன் மொழிகளைப் பற்றி நான் நகைத்து விடலே சாலும்! எனினும் என் மொழிகளையும் எண்ணிப்பார். நாம் அரசர்கள். அர

சர்களுக்கேற்ற மதிப்புடன் ஆளவேண்டும். வளநிதி படைத்தோருடன் அளவளாவல் வேண்டும். அடிக்கடி ஆடல் பாடலுடன் அழகிய விருந்துகள் நடத்த வேண்டும். ஆனால், மற்றக் குடிகளை முற்ற நெருங்கா வண்ணம் விரட்டல் வேண்டும். அங்ஙனம் நெருங்க விட்டாலும் மதிப்புடன் நடக்கும் மாண்பு அவர்கட்கில்லையே! 'நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தாலும்' நன்றாக இருக்குமா அது? அவரவர்கட்கு ஏற்ற இடத்திலேதான் இருக்கவேண்டும். மேலும், அரசர்களின் செலவு ஆடம்பரமாகத்தானே இருக்கும்? இன்னுங்கேள்! இந்தக் 'குடிகள்' நாம் என்ன நன்மை நாடிச் செயினும் கூடிக் கூடிக் குறைகளையே கூறிக்கொண்டிருப்பார்கள்! என்ன கொடுத்தாலும் இன்னும் கொடுக்கவேண்டும் என்பார்கள்!

குலோத் : (வருத்தத்துடன்) போதும் நிறுத்து! குடிகளுக்கு எவ்வளவு கொடுத்தாலும் இன்னுங் கொடுக்க வேண்டு மென்பார்களாம்! குடிகள் கொடுக்கும் வரிப் பணந்தானே மன்னனின் மாண்பிலாச் செலவுக்கும் வகை செய்கிறது? அரை வயிறும் கால் வயிறுமாகக் கஞ்சி பருகிக்கொண்டு அன்றாடம் வெயிலில் உடலை வருத்தி உழைத்து உழைத்துத் தரும் இவ்வரிப் பணமே ஏந்தலின் இதமிலாச் செலவிற்குப் பதமாகிறது! குடிகளின் பணத்தைத்தான் அரசர்கள் குடிகளுக்குக் கொடுக்கிறார்கள் என்பதைக் கொஞ்சமேனும் நெஞ்சில் நினைத்தாயா?

அதிராஜேந்: (நகைத்து) ஏதேது! நீ கூறுவதை நினைக்கும் அரசன் எவனும் இந்நிலவுலகத்தை ஆள நினையான். குடிகள் வரி கொடுப்பதற்காகத்தான் அவர்களுக்குள்

குழப்பமின்றி ஒத்து வாழும் வகையில் அரசன் ஆள்கிறான். இவர்களுக்காகத் தன் மதிப்புக்கும் இன்பத்திற்கும் ஏற்ற செலவை எப்படி விடுவான்?

மேலும், அரசு கைக்கு வந்த பிறகன்றோ இந்த மனக் கோட்டை யெல்லாம்?

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

என்பதை அறிவாயே.

(வேலைக்காரன் பால் கொண்டுவந்து வைத்துச் செல்கிறான்)

குலோத் : உண்மைதான்! நீரில் எழுதிய எழுத்தைப் போன்றதுதான் வாழ்க்கை! அதனால்தான் எப்போதும் நல்லதே செய்யவேண்டும்.

அதிராஜேந் : நன்றிது. தீதிது என நவில்வது இயலாது. யாவும் அவரவர் உள்ளத்தின் தெள்ளிய நினைவைப் பொறுத்தது. எனக்கு நல்லதா யிருப்பது உனக்குக் கெட்டதா யிருக்கிறதே. அதுவும் உள்ளத்தின் உறு நிலைதான். (கொட்டாவி விடுகிறான்) உறக்கம் உறுகிறது. சென்று வருகிறேன் (எழுகிறான்)

குலோத்: எங்கே வந்தாய்? வந்ததைக் கூறாமல் வாய்க்கேற்றவண்ணம் பேசிக்கொண்டிருந்துவிட்டாய். இதோ இப்பாலைப் பருகு! (பாலை எடுத்துக் கொடுக்கிறான்)

அதிராஜேந் : சற்று மன்னித்துக்கொள். என் உடல் நன்றாயில்லை. ஆகையால், பால் பருக வியலாது. முடியுமானாற் கொஞ்சம் வெந்நீர் கொண்டுவரச் சொல்.

குலோத் : இதோ நானே கொண்டுவருகிறேன். (உள்ளே செல்கிறான். அங்கு வைத்திருந்த பாலில் அதிராஜேந்திரன் ஏதோ ஒரு பொடியைப் போடுகிறான். சிறிது நேரங் கழித்துக் குலோத்துங்கன் வெந்நீருடன் வருகிறான்)

அதிராஜேந் : (வெந்நீரை வாங்கிப் பருகிவிட்டு) வருகிறேன்.

குலோத் : என்ன வேலையாக வந்தாயென்றிசைக்க வில்லையே!

அதிராஜேந் : வாளா வந்தேன்! (செல்கிறான். அவன் போனவுடன் நடுக்கத்துடன் கமலை வருகிறாள்)

குலோத் : (வியப்புடன்) ஏது கமலா இந்நேரத்தில்?

கமலை : இளவரசே! மன்னிக்க வேண்டும். தாங்கள் இப் பாலைப் பருகவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குலோத் : ஏன்?

கமலை : எனக்குக் கொஞ்சம் ஐயம்! (அங்கே வந்த ஒரு பூனையைப் பிடித்து அதற்குக் கொஞ்சம் பால் வார்க்கிறாள். அது பருகிவிட்டுச் சிறிது தூரம் சென்று மயங்கி வீழ்ந்து மாள்கிறது.)

குலோத் ; என்ன இது! நஞ்சு கலந்த பால்! அதுவும் பணியாளன் கொண்டு வந்த பால்!

கமலை : (நடுக்கத்துடன்) வேலையாளுக்கு ஒன்றுந் தெரியாது. நான் தற்செயலாக இங்கு வந்தேன். தாங்கள் இல்லை. இளவரசர்—அதிராஜேந்திரர் இதில் ஏதோ ஒரு பொடியை இட்டனர். நல்லூழால் தாங்கள் தப்பி

னீர்கள். இனிமேற் சற்று விழிப்புடன் இருக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

குலோத் : (நன்றியறிதலுடன்) கமலா! உனக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்! இதனை வெளியிடாதே! இப்பாலை ஊற்றிவிடு!

கமலை : (பணிவுடன்) என் கடமை இது. எதையும் வெளியிடேன்.

(பாலை எடுத்துக்கொண்டு செல்கிறாள்.)

குலோத் : (தனக்குத் தானே) ஆகா! இதனை என்னென்பது! கமலை வடிவமாக இறைவனே நம்மைக் காப்பாற்றினான்!....அதுதான் அதிராஜேந்திரன் வாழ்க்கை நிலையாமையின் மாண்பைப் பேசினானோ?....அதிராஜேந்திரா! என்ன பேடித் தன்மையடா இது? சோழர் மரபிற்குக் குறைபாடு சூழ்ந்தனையே!.......இன்னும் என்ன செய்வாயோ பார்ப்போம்.

---

## காட்சி 5

**இடம் :** கங்கைகொண்ட சோழபுரம் : அந்தப்புரம்.

**காலம் :** காலை.

மதுராந்தகியும் கமலையும் உரையாடிக் கொண்டிருக்கின்றனர். அதிராஜேந்திரன் வருகிறான்.

மதுராந் : வாருங்கள் அண்ணா! இங்கு அமருங்கள் (ஒரு இருக்கையில் அமர்கிறான்) கேட்டீர்களா நேற்றிரவு நிகழ்ந்ததை?

அதிராஜேந் : (முகம் வேறுபட) எங்கே ?

மதுராங் : இன்னுந் தங்களுக்குத் தெரியாதா இது?

அதிராஜேந் : எதுவுந் தெரியாதே !

கமலே : (வியப்புடன்) ஒகோ !

மதுராங் : நம் அத்தான் கடவுளருளாற் பிழைத்தார்.

அதிராஜேந் : (நடுங்கி) என்ன ?

மதுராங் : அவருக்கு வைத்திருந்த பாலில் அரவம் வாயை வைத்துவிட்டது !

அதிராஜேந் : ஐயோ! அதைப் பார்த்தவர் யார் ?

கமலே : நான் தற்செயலாய் அங்குப் போனேன். அதைப் பார்த்துவிட்டேன்.

அதிராஜேந் : குலோத்துங்கன் அங்கில்லையா ?

கமலே : அவர் ஏதோ வேலையாக உள்ளே போனர் போலும் !

அதிராஜேந் : (சிந்தனையுடன்) அப்புறம்?

கமலே : அந்தப் பாம்பைப் பார்த்து நான் நடுங்கியே போய் விட்டேன் ! ஐயோ ! அம்மாடி! இது இப்போதும் என் கண் முன்னே இருக்கிறதே !

அதிராஜேந் : (முகத்தைச் சுளித்து) ஏன் அப்படி அஞ்சி நடுங்குகிருய்? அத்துணைப் பெரிதோ அவ்வரவு ?

கமலே : அத்துணைப் பெரிதா ! என் ஆயுளில் நான் இத்துணைக் கொடிய அரவை எங்குங் கண்டதேயில்லை. அது எங்ஙனம் இந்த அரண்மனையில் வந்ததோ ?

அதிராஜேந் : (நகைத்து) பெரிய கோழையாக இருக்கிருயே! பாம்பு வருவதற்கு வழியா இல்லை? அப்புறம் என்ன நடந்தது ?

கமலே : அது பாலில் வாயை வைத்ததை நான் பார்த்ததும் உளறிக் கூவினேன். அது ஓடிவிட்டது. குலோத்துங்கரும் வந்தார்; வேலைக்காரரும் வந்தனர்; தேடிஞர்கள்; கிடைக்கவில்லை அந்தக் கொடிய பாம்பு!

அதிராஜேந் : அந்தப் பாலில் நஞ்சு கலந்து விட்டதா என்ன ?

கமலே : ஆம்; ஒரு பூனைக்கு வார்த்தேன். பாவம்! அது இறந்து விட்டது!

மதுராந் : எனக்கு இது இப்போதுதான் தெரியும்! கேட்டது முதல் ஒரே நடுக்கமாக இருக்கிறது. ஏதோ கெட்ட காலந்தான் அத்தானுக்கு !

கமலே : கெட்ட காலமாவது! நல்ல காலமென நவிலுதல் வேண்டும். இன்றேல் நான் தற்செயலாக அங்குச் செல்வேனே ?

மதுராந் : எனக்கு என்னமோ கெட்ட காலமென்றுதான் படுகிறது. நல்ல காலமானுற் பொல்லாத நாகம் அங்கேன் வருகிறது ?

அதிராஜேந் : கெட்ட காலந்தான். ஏதோ சிறிது நல்லூழுமிருந்தது ! இன்றேல் கமலே கண்டிருக்க மாட்டாள். நான் சென்று வருகிறேன். (எழுகிறுன்.)

மதுராந் : எங்கே வந்தீர்கள் அண்ணு !

அதிராஜேந் : சும்மா வந்தேன். (போகிறுன். அவனைக் கமலே கண்கொட்டாமல் நோக்குகிறுள்.)

மதுராந் : என்ன கமலா !

கமலே : ஒன்றுமில்லையே.

மதுராந் : இளவரசரை ஏன் அங்ஙனம் இமையாமல் நோக்கினை ?

கமலை : (புன்முறுவலுடன்) இளவரசரைப் பார்க்கவில்லை மதுராந்தகி! எங்கோ என் சிந்தனை இழைந்தது. நானும் போய் வருகிறேன்.

மதுராந் : நன்று. சென்று வா ! இப்பாம்பு வந்தது என்னமோ எனக்குப் பிடிக்கவேயில்லை.

கமலை : வருவது வந்துதான் தீரும். இருந்தாலும் இறைவன் குலோத்துங்கருக்கு எக்கெடுதியும் இசைய விடான். (சிறிது சென்று திரும்புகிருள்.)

மதுராந் : என்ன கமலா!

கமலை : ஒன்று கேட்க மறந்தேன். நேற்று மாலை உன்னை இளவரசர் இட்டுவந்தனரே;எதற்கென வினவலாமா?

மதுராந் : அதுவா? அது ஒரு வெட்கக் கேடு. விக்கிரமாதித்தர் தம்பி ஜயசிங்கரை நான் மணந்துகொள்ள வேண்டுமாம்?

கமலை : நீ என்ன இசைத்தாய்?

மதுராந் : இசைப்பதாவது! முடியாதென்றே மொழிந்து விட்டேன். என் அத்தானைக் கண்ட கண்களால் வேறொருவரைக் காண விரும்புவேனே? புலி பசித்தால் புல்லையா தின்னும்? என் அத்தானே என் உள்ளத்தில் உறையும் இனிய அமுத எழில் வடிவினர்! அவருடைய அழகிலேயே என் விழிகள் சுற்றிச் சுற்றி நடனமிடும்! அவருடைய வீரத் தோள்களிலேயே என் உள்ளம்

தவழ்ந்து விளையாடும்! அவருடைய அருள்கனிந்தநோக்கிற்கே என் உளங்கனிந்து நிற்கும்! எப்போதும் அவருடைய அழகிய புன்முறுவலிலே என் அறிவு திறையாகப் போய் விழும்............

கமலே: (புன்முறுவலுடன்) அப்புறம்! ஏது பெரிய கவியாக மாறிவிட்டாயே உன் அத்தான் பேச்சு வந்ததும்!

மதுராங்: (நாணத்துடன்) அடி கமலா! நீ எப்படித்தான் நகையாடினாலும் அவர் பேச்சென்றால் தனியாக அப்படித்தானடி!

கமலே: அதுவரையில் உன் அத்தான் பெரிய புண்ணியம் செய்தவரென்றே சொல்லலாம். வீரமங்கை வீர ஆடவரை விரும்புவது இயற்கைதானே. நான் போய் வருகிறேன்.

மதுராங்: போய் வா. (வெட்கத்துடன்) இதனை எவர்க்கும் இசைத்தல் நல்லதில்லை.

கமலே: (நகைத்து) இல்லை அந்தத் தொல்லை. (போகிறாள்.)

---

## காட்சி 6

இடம்: கங்கை கொண்ட சோழபுரம்; அரண்மனைப் பூங்கா.

காலம்: அதே காலை.

குலோத்துங்கன் தனியே உலாவிக் கொண்டிருக்கிறான்.

குலோத்: (தனிமை) என்ன என் கெட்ட காலம்! எங்கள் மரபே இச் சோழர்கள் கையில் அகப்பட்டுத்தானு விழிக்கவேண்டும்! அதிராஜேந்திரன் இன்னும் என்ன கேடு சூழ்வானே?....முயற்சி வெற்றி தரவில்லையெனின் மூடனும் வாளாவிருப்பானே? (கருணாகரத்தொண்டைமான் வர) வா அப்பா!

கருணா: (கைகுவித்து வணங்கி) வணக்கம் இளவரசே! என் ஒருவாறு வாட்டமாயிருக்கிறீர்கள்?

குலோத்: வாட்டமா? வாழ்க்கையின் ஆட்டம்!

கருணா: என்ன கூறுகிறீர்கள்?

குலோத்: ஒருவருடைய சார்பில் வாழ்வோனுக்கு எப்போதும் குறைக்குக் குறையிருக்குமா? அம்மான் விருப்பு! அம்மான் மகன் வெறுப்பு!

கருணா: (துடிப்புடன்) அங்ஙனம் ஏதாவது நடந்ததோ !

குலோத்: (நகைப்புடன்) நேற்றிரவு அதிராஜேந்திரன் என் பாலில் நஞ்சைக் கலந்தான் !

கருணா: (சினத்துடன்) ஏன் அவ் வெண்ணம்?

குலோத்: அவனுக்கே அவன்மேல் நம்பிக்கையில்லை போலும்! இந்நாடு தனக்குக் கிடைக்காது என எண்ணியிருப்பான். எனக்குத்தான் கிடைக்குமென்றும் ஏதாவது பட்டிருக்கவேண்டும். எப்படியோ கொலைக்கு வழி தேடினன் !

கருணா: (சினத்துடன்) புதரிற் படுத்துறங்கும் புலியை வாலைப் பிடித்திழுக்கும் மடையன் அவனே! இள

வரசே! இப்போதே எளியேனுக்கு விடையளியுங்கள். அவனைச் சின்னாபின்ன மாக்கிவிட்டு வருகிறேன். சேய்மையிலிருக்குந் தீவினையை அண்மையிலேயே அழைக்கிறான்!

குலோத்: (நகைத்து) ஏன் இப்படிப் பதைக்கிறாய்! இக்கோழையைக் கொன்று உன் வாளைக் கறைப்படுத்த வேண்டும்? இவ்வேலையில் நாம் ஈடுபடலாமா? மேலும் 'எமனறியாமல் உயிர்போகுமா?'' இன்னும் பார்ப்போமே! (ஒருபுறம் மதுராந்தகி வருகிறாள்.)

கருணா: என் உள்ளம் பதறுகிறது. எனினும், தங்கள் விருப்பப்படி நடக்கிறேன். அதோ தங்கள் அம்மான் மகளார் வருகிறார். நான் செல்கிறேன்.

குலோத்: போய்வா, கருணாகரா! ஒன்றையும் வெளியிடாதே.

கருணா: தங்கள் ஆணை. (செல்கிறான். குலோத்துங்கன் மதுராந்தகியைப் பாராதவன் போல் உலாவுகிறான். மதுராந்தகி எதிரே வருகிறாள்.)

மதுராந்: அத்தான்!

குலோத்: (தலைநிமிர்ந்து) யார்! மதுராந்தகியா? வா! ஏது இவ்வளவு தூரம்?

மதுராந்: (வருத்தத்துடன்) என்னமோ போல் வரவேற்கிறீர்களே! என்மேல் என்ன வருத்தம்?

குலோத்: (புன் முறுவலுடன்) வா, இப்படி இரு. உன் மேல் ஒரு வருத்தமும் இல்லை. (இருவரும் புல்தரையில் அமர்தல்) என் ஊழ்வினையின்மேல் வருத்தம்!

மதுராங் : (கண்ணீர் கலங்க) அத்தான்! இரவு என்ன நடந்தது? கமலை என்னென்னவோ கூறினுள் இப்போது. அதைக் கேட்டதும் ஓடிவந்தேன். கேட்டதிலிருந்து என் உயிர் துடிக்கிறது! என் தமையனுரும் இதைக் கேட்டுப் பரிவுற்ருர்.

குலோத் : (வியப்புடன்) கமலை என்ன இயம்பினுள்?

மதுராங் : உங்கள் வாயால் உரைக்கமாட்டீர்களா? உங்கள் பாலில் ஓர் பாம்பு வாயை வைத்ததாம்! அப்பாலைப் பருகிய பூனை இறந்துவிட்டதாம்! இதைக் கமலை கண்ணுற் கண்டாளாம்! உங்களுக்குந் தெரியுமாமே!....உங்கள் வாயாற் கேட்கலாமென ஓடிவந்தேன். நீங்கள் கூறினுற்ருன் என் மனம் ஆறுதலடையும்.

குலோத் : உன் அண்ணனும் இதைக் கேட்டானு?

மதுராங் : ஆமாம். அவர்கூட மிகவும் வருந்தினுர்!

குலோத் : இதை ஏன் அவள் எல்லோருக்குங் கூறினுள்? இது ஒரு கெடுதியா?

மதுராங் : இது கெடுதியில்லையா! அவள் அதைப் பார்க்காவிடின்?

குலோத் : 'குளிருங் காய்ச்சலுங் கூட்டோடு போயிருக்கும்!

மதுராங் : (முகம் வாடி) என்ன சொன்னீர்கள்? ஏன் இன்று ஒரு போக்காயிருக்கிறீர்கள்? தங்கள் உயிர் மேலும் வெறுப்புண்டாக உற்றதென்னே?

குலோத் : (நகைத்து) ஒன்றுமில்லை! இதற்காக நீ வருந்தலாமா? இரவு நிகழ்ந்ததை எண்ணினுல் இனி இங்கே

இருத்தல் இனிதன்றெனை எண்ணும்படி நேர்கிறது! பாலிற் பாம்பு வாயை வைத்தது சாலவும் ஒரு தெய்வ ஆணையெனச் சாற்றலாமன்றோ? ஆகையாற், சற்று வெறுப்பாக இருந்தேன். (வருத்தமாக) அறிவுக் குறையால் உன் மென்மையான உள்ள மலரை வாட்டிவிட்டேன்! மன்னித்துக்கொள்!.......நான் இனி வேங்கி நாட்டிற்குச் செல்கிறேன்.......கடைமுறையாக உன்னிடம் இப்போதே உற்ற விடைபெற்றுக்கொள்கிறேன்.

மதுராங்: (கண்ணீர் வடிய அவன் கைகளைப்பற்றி) அத்தான்!

குலோத்: (துக்கத்துடன் அவள் கண்ணீரைக் கையால் துடைத்து) மதுராந்தகி! ஏன் வருந்துகிறாய்? உந்தையின் ஆதரவினும் உன் அன்பினும் உற்ற நிழலில் இந்த அரண்மனையில் ஒரு குறையுமின்றி ஒதுங்கியிருந்தேன். இனியுமிருக்க இசைந்திலதென்னுளம். நான் எந்நாளிலாவது வேங்கியை நணுக வேண்டியவன்தானே? இந்நாளே சென்றால் எந்தைக் கோரினிய துணையாயிருப்பேன்.

மதுராங்: (மேலும் கண்ணீர் வர) எப்படிக் கூறினும் ஆடவர்கள் உள்ளம் அசையாக் கருங்கல்லாகத்தான் இருக்கும்போலிருக்கிறதே !

குலோத்: என் அங்ஙனம் கூறுகிறாய்?

மதுராங்: எளியாளொருத்தியிருப்பதை மறந்தீர்களே!

குலோத்: மறந்தேனா?.......உன்னை மறப்பினும் உன் அன்பை மறக்கவொல்லுமோ? இருப்பினும் நான் இங்கிருந்தென் செய்வேன்? என்றாவது செல்லு மியல்பினன்தானே!

மதுராங்: அதை நான் மறுக்கவில்லை!........தாய் தந்தைய ரற்ற தமியேன் (முகத்தைத் தாழ்த்திக் கொண்டு) தங் களையே உயிர்த்துணைவராக ஒப்பியுள்ளேன். என்னை யும் உடன் அழைத்துச் செல்லுங்கள்.

குலோத்: (புன்முறுவலுடன் அவள் முகத்தை நிமிர்த்தி) நன்று! மணமாகாத உன்னை அழைத்தேகலாமா? மேலும்........

மதுராங்: (நாணத்துடன்) மேலும் என்ன?

குலோத்: உன் சிற்றப்பாவும் அண்ணுவும் என்ன எண் ணியுளரோ ?

மதுராங்: (தலையைத் தாழ்த்தி) எனக்கு இந்த உரிமை யில்லையா?........நாணம்விட்டு நவில்கிறேன்........(நாணத் துடன்) தங்களையன்றி வேறு யாரையும் மணம் புரி யேன்.

குலோத்: (மகிழ்ச்சியுடன்) உன் கருத்து அதுவானல் நான் மிகவும் நல்லூழ் பெற்றேனனேன். உன் காதல் பெற்ற எனக்கு உம்பர் நாடும் வேண்டாம். இவ்வுலகை யிழந்தாலும் உன்னையிழக்க ஒவ்வேன். உன் உளத்தை யறியவே யிதுகாறும் உன்னை வீணே சோதித்தேன்! மன்னிப்பாய்.

மதுராங்: (நாணத்துடன்) ஒருபோதும் மன்னிக்கமாட் டேன். என் உள்ளச் சிறையில் நன்ருகத் தங்களை அடைத்துவிட்டேன்.

குலோத்: (நகைத்து) நான் முன்பே உன்னைச் சிறை செய்தேனென்னுள்ளத்தில்! நீ என்னை எங்ஙனம் சிறை செய்வாய் ?

மதுராந் : அது என்னவோ அறியேன். ஆனால், என்னுள்ளத்தில் தங்களைப் பார்க்கலாம்.

குலோத் : உண்மையாக இருக்கலாம்! ஏனெனில் இனி நாம் இருவரல்லேம். ஒரே உயிர்! ஒரே உள்ளம்! ஒருவரே! இருவராயிருந்தாலன்றோ சோதனை? வா செல்வோம். (செல்கிறார்கள்.)

---

## காட்சி 7

**இடம் :** வீரவேள் மாளிகையில் ஓர் அறை.

**காலம் :** முற்பகல் (வீரவேள் உலாவிக் கொண்டிருக்கிறான்.)

வீரவேள் : (தனிமை) என்ன கொடுமை! உயிரொன்றும் உடல் இரண்டுமாகப் பழகுகிறார்கள். பொருளொன்று குறுக்கே வரின் இருளொன்றிப் பிரிகிறார்கள்! அரசின் காதலால் அத்தை மகனையே அதிராஜேந்திரன் அழிக்க முயல்கிறான்........நாம் நவில்வது நாராசம்போல் அவன் காதிற்படுகிறது!........அதிகனே அனைத்துக்கும் அடிப்படை!........அவன் ஒழிந்தால்தான் ஆக்கம் அதிராஜேந்திரனுக்கு!........அவர்களைப் பிரிக்க யாராலமையும்? நாம் விலகுவதே நல்லது. (விமலை வந்து பின்புறம் நிற்கிறாள்) 'பேயோடு பழகுறினும் பிரிவது அரிதரிது" என்பார்கள். அதற்குக் காரணம் பிரிந்தால் வரும் இடையூறுகளாய்த்தான் இருக்கும்........இவர்கள் கூட்டுறவால் என் உள்ளம் அடையும் குழப்பம் கூறவியலாதே!

விமலை : (பின்புறம் இருந்தே) கனவிலும் பிதற்றல் காண்கிறதே!

வீரவேள் : (திடுக்கிட்டுத் திரும்பி) யார்? விமலையா? என்ன கூறினை?

விமலை : நானென்றும் விளம்பவில்லையே! உங்கள் உள்ளக் கலக்கத்தின் ஒரு பகுதி யிது!

வீரவேள் : ஏதோ பிதற்றியதாக இயம்பினையே!

விமலை : ஒன்றுமில்லை; உணவருந்த வாருங்கள்.

வீரவேள் : கூறினலன்றிக் கொள்ளேன் உணவு!

விமலை : இது ஏது வம்பாய் விட்டதே! நினைவில் உள்ளது கனவில் வராதா? கலக்கம் மிகுமேல் கனவிலும் பிதற்றலாம்!

வீரவேள் : பிதிரென்னத்திற்குப் பெரிதாக இப்போது? விளம்பு விளக்கமாக!

விமலை : உறக்கத்தில் அதிராஜேந்திரரைப் பற்றி ஏதோ அலட்டிக் கொண்டீர்கள். அது நினைவில் இல்லை. அதிருக்கட்டும். இப்போது உணவுக்கு வர இயலாதா? இன்னும் ஏதாவது தனியே பேசிக்கொண்டிருக்க எண்ணமா? நான் செல்கிறேன். அரசியல் மந்திரம் அடுப்பூதும் பேதைகட்கேன்?

வீரவேள் : நல்ல அரசியல்! நயமறியாப் புல்லியர் நாட்டம்!

விமலை : இப்போதாவது அறிந்தீர்களே!

வீரவேள் : உண்மையே! இதுவரையில் அறியாதது அறிவீனமே! 'விறல் மந்திரி மதி'யுடைய உன்னிடம் உள்ளதைக் கூருமல் இருப்பேனு? இந்த இளவரசன் நட்பை இனியாவது விடவேண்டும். ஆனல், விடுவது எப்படி? நல்வழியொன்று நவில்க!

விமலை: இறுதியில் என்னையேயா வினவுகிறீர்கள்? நான் என்ன அரசியலை அறிவேன்? அரிசி யியல் மட்டும் அறிவேன். 'பெண்புத்தி பின்புத்தி!' 'பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்' என்பார்கள். 'தையல் சொற் கேளேல்' என்பதைத் தையலொருத்தியே சாற்றியுள் ளாள்.

வீரவேள்: (நகைத்து) நீயும் ஒரு தையல்தானே? அந் தத் தையல் கூறியதை அமைத்துக் கொள்ளும் நான் இந்தத் தையல் கூறுவதையும் ஏற்றுக் கொள்ளத் தானே வேண்டும்? நீயோ பேதை? எனக்குக் கலையாத உணர்வைத்தரும் கலைமகள் நீ! வீர வுணர்வை விளைக் கும் வீரக் கொற்றவையும் நீ! தேடாத செல்வத் திரு மகளும் நீ!

விமலை: (அவன் வாயை மூடி) போதும் உங்கள் புக ழுரை! எப்போதாவது இக் கோளாறு ஏற்படுகிறது உங்களுக்கு. வாருங்கள் இப்படி அமர்வோம். (இருவ ரும் அங்குள்ள இருக்கைகளில் அமர்கின்றனர்) நெரு நல் இரவு நிகழ்ந்தது தெரியுமா தங்களுக்கு?

வீரவேள்: என்ன அது?

விமலை: இன்னும் அறியீர்களா? குலோத்துங்கர் பரு கற்கு வைத்திருந்த பாலிற் பாம்பு ஒன்று வாயைவைத் துவிட்டதாம். அதை ஒரு பூனைக்கு வார்த்தார்களாம்! இறந்துவிட்டதாம்!

வீரவேள்: (நடுக்கத்துடன்) குலோத்துங்கர்?

விமலை: குலோத்துங்கர் அதைப் பருகவில்லை. கமலை அப்பாம்பைப் பார்த்து விட்டுக் குலோத்துங்கருக்குக் கூறினாள்.

வீரவேள் : கமலேயா பார்த்தாள் ? அவள் ஏன் அங்குச் சென்ருள் ?

விமலே : இது என்ன விஞ? நான்தான் அவளே அங்கு அனுப்பினேன். நீங்கள் முந்திய நாளிரவு கனவிலே பிதற்றியதிலிருந்து குலோத்துங்கருக்கு ஏதாவது நேரு மென நினைத்தனுப்பினேன்.

வீரவேள் : (நன்றியறிதலோடு) பார்த்தாயா! நான் வழிபடு தெய்வம் நீ என்பதை வாய்மை யாக்கிவைத்தாய்! அந்தப் பாம்பு வாயை வைத்ததைக் கமலே பார்த்ததே நல்லதாய்விட்டது!

விமலே : பாம்பு வாயை வைக்கும்போது பார்க்கவில்லே. கையை வைக்கும்போதே கண்டாள்!

வீரவேள் : கையையா! என்ன கூறுகிருய் நீ? எப்பாம்பு கையை வைக்கும்?

விமலே : அதிராஜேந்திரப் பாம்பு!

வீரவேள் : (சினத்துடன்) அதிராஜேந்திரஞ? பாலில் நஞ்சைக் கலந்தாஞ? மக்கட்பதா! விமலா! நான் மட்டு மன்று; இந்நாடு முழுதும் நீங்கள் செய்த நன்றிக்குக் கைம்மாறு அறியாது! குற்றமின்றிக் குலோத்துங்கர் தப்பினரே, அதுவே போதும். அஃதிருக்கட்டும். பின் ஏன் இப்பாம்புக் கதை?

விமலே : உண்மையை மறைக்கக் கமலே கட்டிக் கதைத் தாள்.

வீரவேள் : இதனே அறிவார் யார்? இளவரசிக்குத் தெரியுமா?

விமலை: இளவரசிக்கும் பாம்புக் கதைதான் தெரியும்.

வீரவேள்: நல்லது! விளக்கமாய்க் கூறும்படி வேண்டுகிறேன்.

விமலை: (நகைத்து) வேண்டினால் ஈண்டு ஈண்டாது. இனி அவர்களோடு சேராமலிருக்க வேண்டும் என்ற உறுதி மொழியின்மேல் மட்டும் கூறமுடியும்.

வீரவேள்: (நகைத்து) அப்படியே, ஆணைப்படி நடக்கிறேன். இன்னும் என்ன வேண்டினும் இதோ அளிக்கிறேன்.

விமலை: அங்ஙனம் கூறுங்கள். அவர்களோடு இழையாமல் இருப்பதுடன் விலகியும் இருக்கக் கூடாது.

வீரவேள்: அங்ஙனமே ஆகுக! அதிராஜேந்திரன் செயலை இனியாவது எடுத்துச்சொல்.

விமலை: உண்ண வாருங்கள்; உரைக்கிறேன். காலம் போக்குதல் சாலவுந் தகாது.

வீரவேள்: (நகைத்து) பார்த்தனையா! நீ கூறிய வண்ணமே நான் நடக்கிறேன்! உன் விருப்பம் என் விருப்பம்.

(இருவரும் உள்ளே செல்கிறார்கள்)

---

## காட்சி 8

**இடம் :** வீரராஜேந்திரன் அரண்மனை.

**காலம் :** மாலை. வீரராஜேந்திரன் வீற்றிருக்கிருன். அதிரா ஜேந்திரன் அருகில் பணிவுடன் நிற்கிருன்.

**வீரராஜேந்திரன் :** குழந்தாய்! இதுகாறும் சோழர்குடிக் குச் சோர்வென்பதே தோன்றவில்லை. மேலும், பிற மன்னர் முடிகள் தம் அடியில் வணங்கவே வாழ்வு பெற்றிருந்தனர். குடிகள் தம் கொற்றமிகுங் குரிசிலைத் தந்தையாகவே கொண்டனர். வானம் மழைத்துளி மறப்பினும் ஞாலம் பசியினும் பிணியினும் நலியினும் மன்னரையே மக்கள் பழிப்பர். அவ்வாறு நம் குடி இதுவரையிற் பழிபெற வில்லை. 'அரசனெவ்வழி அவ் வழி குடிகள்' என்பதனுல் நம் நடத்தை நாட்டினுள் ளோர் நடத்தைக்கு முன் மாதிரியானது. அரசனுக்குக் குடிகள் உயிர். குடிகளுக்கு அரசன் உடல். இவற்றை யெல்லாம் நாங்கள் என்றும் இனிதே நினைந்து செய லாற்றி வந்தோம். ஆனுல், உன் போக்கு எங்கள் நிலை யை இனி மாற்றிவிடும் போலிருக்கிறது. 'உன் நட்பும் செயலும் ஒன்றுக்கும் பற்ருதவை; மிகக் கீழ்த்தரமா னவை' என அறிகிறேம். அப்படித்தானே?

**அதிராஜேந் :** (வாய் திறவாமல் நிற்கிருன்.)

**வீரராஜேந் :** நன்று! சென்றதை மறந்து விடுவோம். இனியாகினும் நல்வழியில் நடத்தல் வேண்டும். என்ன!

**அதிராஜேந் :** (பணிவுடன்) ஆணைப்படி நடக்கிறேன்.

**வீரராஜேந் :** நல்ல பாம்பு அழகாக இருக்கிறது. ஆனுல், அது அளிப்பது நஞ்சமே! யாழ் வளைந்திருக்கிறது.

எனினும், இன்னோசையை எழுப்புகிறது! கெட்ட வழியிலேதான் கிளரும் நம் உள்ளம். அவ்வழியை அணி பெற வகுத்துரைப்பர் அவ்வழி செல்வோர். எனினும், அவ்வழியை அணுகலாகாது. தீயவரும் தீயவழியும் தூயவர்கள் தொடரலாகாதவை. ஏனெனில், நம் நண்பரைக் கொண்டே நம்மை மதிப்பர். விளங்குகிறதா?

அதிராஜேந். விளங்குகிறது.

வீரராஜேந்: நம் குலோத்துங்கனைப் பார். வனப்பினும் உயர்ந்த சீர்த்தியுடையான்! மார்பினும் அகன்ற கல்வியுடையான்! தோளினும் உயர்ந்த கொற்றமுடையான்! காலைக் கதிரவனெனக் காண்கிறான்! (குலோத்துங்கன் பரபரப்புடன் வருகிறான். அவனைக் கண்ட அதிராஜேந்திரன் முகத்தை ஒருபுறமாகத் திருப்புகிறான். எனினும், உடல் நடுங்குகிறது) வா குலோத்துங்கா! என்ன பதறுகிறாய்?

குலோத்துங்கன்: (நடுக்கத்துடன் வணங்கி) இந்தத் திருமுகத்தைப் பாருங்கள்! தந்தை உடல் நலமின்றி யிருக்கிறாராம்!

(கண் கலங்குகிறது. திருமுகத்தைக் கொடுக்கிறான்)

வீரராஜேந்: (திருமுகத்தைப் படித்துக் கொண்டே) அடடா! அங்ஙனமேல் காலையில் அதிவிரைவிற் புறப்படு.......போகும்போது துணைக்குக் கருணாகரனையும் மதுராந்தகனையும்....

குலோத்துங்: அவர்களும் வருகிறார்கள்.

வீரராஜேந்: நன்று. குழந்தாய்! கலங்காதே! வருவது வந்தே தீரும். இறைவன் உனக்கு ஒரு குறையும் ஏற்படுத்த மாட்டான்!

## காட்சி 9

**இடம் :** கங்கை கொண்ட சோழபுரத்தில் அதிராஜேந்திரன் அரண்மனை.

**காலம் :** அதே நாள் முன் இரவு. அதிராஜேந்திரனும் அதிகனும் வீற்றிருக்கின்றனர். அவர்களெதிரில் பொற்கிண்ணங்களில் மது நிரப்பப்பட்டிருக்கின்றது.

அதிகன் : ஏன் வாளா விருக்கின்றீர்கள். இது உயர்ந்த மது. நானே அருகிலிருந்து செய்வித்தேன். நீங்கள் கேட்டதில்லையா தொப்பியை?

அதிராஜேந் : (ஒரு கிண்ணத்தை எடுத்து மோந்து பார்க்கிறான்) ஓ! இது தொப்பியா? அரிசியாற் செய்த கள் தானே!

அதிகன் : ஆம் ஆம்.

அதிராஜேந் : இன்று மாலை அரசர் என்னைக் கூப்பிட்டு அறிவுரை கூறிக் கொண்டிருந்தார்.

அதிகன் : என்ன அறிவுரையோ?

அதிராஜேந் : (நகைத்துக் கொண்டு)தெரியாதா உமக்கு? வழக்கம்போல்.

அதிகன் : நன்னெறியிற் செல்கவென்றுதானே?

அதிராஜேந் : ஆமாம். அப்போது குலோத்துங்கனைப் பற்றியும் புகழ்ந்து கூறினர்.

அதிகன் : அப்புறம்?

அதிராஜேந் : குலோத்துங்கன் தந்தை மிகவும் நோயாக இருக்கிறாராம். நாளைக் காலை அவரைப் பார்க்கக் குலோத்துங்கனும் அவன் நண்பர்களும் செல்கின்றனர்.

அதிகன் : அப்படியா ? அதற்கு நாமென்ன செய்ய வேண்டும்.

அதிராஜேந் : என்ன செய்யவேண்டுமா ? அவன் வேங்கி நாட்டிற்குச் செல்லுமுன் விண்ணுலகிற்குச் செலுத்த வேண்டும்!

(காவலன் வர)

அதிகன் : அடே! என்ன வேண்டு முனக்கு ? (காவலன் கும்பிட்டு நடுங்கி நிற்கிறான்)

அதிராஜேந் : நீ என்ன ஊமையனா? ஏன் பேச்சவிந்து நிற்கிறாய் ?

காவலன் : (கும்பிட்டு) மன்னிக்கணுங்க! யாரோ ஒரு சாமியார்....

அதிராஜேந்: அடேய்! எந்தச் சாமியாரையும் இங்கே விடாதே! விட்டால் உன் தோலை உரித்து விடுவேன்!

காவலன் : (கும்பிட்டு) என்ன சொன்னாலும் அவுரு போமாட்டேங்கராருங்கோ !

அதிராஜேந் : சரி, முட்டாள் பயலே! போய்வரச்சொல். வேறுயாரையும் உள்ளே விடாதே. விட்டால் தொலைந்தாய்.

(காவலன் செல்கிறான்)

அதிகரே! இந்த மதுவை அந்தப் பக்கம் மறைத்திடும். (அதிகன் மறைக்கிறான். ஒரு தாடிச் சாமியார் வருகிறார்)

அதிராஜேந் : } அடிகள் வருகை அடியேங் குடிக்கு நன்று.
அதிகன் : } (கைகுவித்தல்)

அடிகள் : (கையை எடுத்து ஆசிகூறி) வெற்றியுடன் வாழ்க! உங்களில் இளவரசர் யார் ?

அதிராஜேந் : (பணிவுடன்) இந்த இருக்கையில் இருங்கள். நானே இளவரசன்! என்ன வேண்டும்? (சாமியார் அமர்கிறார்.)

அடிகள் : (அமர்ந்து) நல்லது! இவர் யார் ?

அதிராஜேந் : இவர் என் நண்பர். பெயர் அதிகர்.

அடிகள் : ஓ! அதிகமான பெயர் பெற்றவரா! நல்ல வள்ளலோ ?

அதிகன் : அடிகளுக்கு வள்ளல்கள் வேண்டும்போலிருக்கிறதே !

அதிராஜேந் : பின் யார் வேண்டும்? அவர் பரதேசியார் தாமே !

அடிகள் : (நகைத்து) உண்மையே. இவ்வுடம்பு இந்தத் தேசியில்லை.

அதிராஜேந் : அடிகளின் சொந்தவூர் எதுவோ ?

அடிகள் : இதன் சொந்தவூரா? கருவூர்.

அதிகன் : என்ன? கருவூரா? அது இந்தச் சோழநாட்டில்தானே இருக்கிறது ?

அடிகள் : (நகைத்து) இந்த ஊரைக் கூறவில்லை. அன்னையின் கருவாகிய ஊரைக் கூறுகிறது இந்த வாய்.

அதிகன் : தங்கள் வாய் எல்லாங் கூறும்போலிருக்கிறதே! இந்தச் சாமியார் நல்ல குறும்பர் போலிருக்கிறதே !

அடிகள் : அதிகர் எம்மை அதிகமாக நினைக்கிறார்? நாம் ஒரு துறவியே. குறும்பரல்லேம். குறும்பராயின் ஒரு குறுநாடு வேண்டும் ஆள்வதற்கு.

அதிகன் : (அதிராஜேந்திரனை நோக்கி) ஏது இவரை வாய்ப் பேச்சில் வெல்ல வகையில்லையே.

அதிராஜேந் : துறவிகள் அப்படித்தான் இருப்பார்கள். (சாமியாரை நோக்கி) தாங்கள் அடியேன் குடிசையை நாடிவந்த வேலை என்னவோ ?

அடிகள் : யாம் வடக்கிலிருந்து வருகிறோம். இரட்டபாடியில் தங்கள் நண்பர் ஜயசிங்கரைப் பார்த்தோம். அவர் மூலமாகத் தங்களை அறிந்து வந்தோம்.

அதிராஜேந் : (புன்முறுவலுடன்) சால மகிழ்ச்சி ! ஜெயசிங்கர் நலமா ?

அடிகள் : நலமே. ஆனால், மதுவின் மயக்கமொன்றே வாட்டுகிறது.

அதிராஜேந் : (நகைத்து) இருக்கலாம். தாங்கள் அவரை எப்படி அறிவீர்கள் ?

அடிகள் : (புன்முறுவலுடன்) எப்படி யறிவதாவது ? அவர் வேறு நாம் வேறா? ஒன்றாகவே பிறந்து வளர்ந்தோம்?

அதிராஜேந் : (மகிழ்ந்து) உழுவலன்பர் போலிருக்கிறதே! இத்தகைய அடிகள் எங்குடிக்கு..........

அடிகள் : (நகைத்து) அடிகள் உங்கள் குடிக்கு மிகவும் சிறந்ததோ? இப்பீடத்தின் அடியிலிருக்கும் கள்ளின் மேல் அத்துணை விருப்பமாயின் எடுத்துப் பருகுங்கள்;

அதிகன் : துறவியென்றிருந்தோமே, நல்ல குடியர்போல் காணப்படுகிறாரே !

அடிகள் : உண்மையே கூறினீர்கள். நாம் பிறந்த குடி நல்ல உயர்ந்த குடியே.

அதிராஜேந் : எங்களைக் குடியரென்றீர்கள்; தங்களைக் குடிப்பிறந்தோராக்கிக் கொண்டீர்கள். போகட்டும். பெரியோர் கூறுவதைப் பணிவுடன் ஏற்றுக் கொள்கிறோம். தாங்கள் வந்த வேலையை முடித்துக்கொண்டு செல்லுங்கள்.

அடிகள் : நாம் குமரியைக் காணச் செல்கிறோம். தங்களிடம் இருக்கும் மதுவையுங் காணவந்தோம்.

அதிராஜேந் : (வியப்புடன்) உண்மையில் அதற்காகவா வந்தீர்கள் ?

அடிகள் : யாம் எப்போதும் உண்மையே கூறுவோம். தங்களிடம் மது இல்லையே?

அதிராஜேந் : அப்படியானல், அதிகரே ! அக்கிண்ணங்களை எடுத்து வையும். (அதிகன் எடுத்து வைக்கிறான்.) ஒரு கிண்ணத்தை யெடுத்து அடிகளிடம் கொடும். (அவ்வாறே கொடுக்கிறான். மற்ற இருவரும் ஒவ்வொரு கிண்ணங்களை எடுத்துப் பருகுகிறார்கள்.)

அடிகள் : (மதுவைப் பருகிக்கொண்டே) நாம் விரும்பி வந்த மது இஃதன்று. இளவரசருடன் பிறந்த மதுவையே விரும்பி வந்தோம்.

அதிராஜேந் : (வியப்புடன்) என்னுடன் பிறந்த மதுவா ?

அடிகள் : ஆம் அரசே! தங்களுடன் பிறந்த மதுராந்தகியைத் தாங்கள் மதுவென அழைப்பதில்லையா ?

அதிராஜேந் : (சினத்துடன்) என்ன கூறினீர் ? நாவை அடக்கிப் பேசும். நீர் என்ன போலித் துறவியோ ?

அடிகள் : (புன்முறுவலுடன்) நாம் போலித்துறவிதான். எனினும், இளவரசர் தம் தங்கை மதுராந்தகியை

நாம் மணக்கவேண்டிய முயற்சி செய்வதாகக் கூறியதை மறந்தனரா என்பதே என் வினு.

அதிராஜேந் : எப்போது கூறினேன் ? கூறியதற்குச் சான்று ?

அடிகள் : (தாடி மீசையைக் கலைத்துக் கொண்டே) ஜெயசிங்கனையே கேளுங்கள் ; சொல்வான்.

அதிராஜேந் : (வியப்புடன்) ஏமாந்து விட்டேனே! ஜெய சிங்கர் நடிப்பில்வெகுதிறமையாளர் போல்இருக்கிறதே!

அதிகன் : எல்லா வகையிலும் அவர் ஜெயசிங்கரே.

அதிராஜேந் : உம்மை நினைத்துக் கொண்டேயிருந்தேன். நீரும் வந்தீர். (மதுவைப் பருகிக்கொண்டே) இன்னும் கொஞ்சம் மதுவைப் பருகும்! அதிகரே நீரும் ஒருகை பாரும்! (எல்லோரும் குடிக்கிருர்கள்)

ஜெயசிங் : என்னை எதற்காக எண்ணினீர் ?

அதிராஜேந் : குலோத்துங்கன் தன் தந்தையைப் பார்க்கக் காலையில் புறப்படுகிருன்.

ஜெயசிங் : உடன் செல்வோர் உளரோ ?

அதிராஜேந் : கருணுகரனும் மதுராந்தகனும் செல்கின்றனர்.

ஜெயசிங் : எங்களுக்கும் எதிரிதானே அவன். என்றுற் கூடிய வரையிற் கண்காணித்துக் கொள்கிறேன். மதுராந்தகியின் மனமென்ன ?

அதிராஜேந் : அத்தை மகனிருக்கும் வரையிற் சித்தந் திரும்பாள். இருவரும் ஒன்ருகவே பழகினவர்கள் பாரும் !

ஜேயசிங் : (உறுதியான உள்ளத்துடன்) அங்ஙனமேற் குலோத்துங்கன் ஒழிந்தவனென்றே உறுதி செய்யும். ஆனல், அவள் உள்ளம்?

அதிராஜேந் : குலோத்துங்கன் ஒழிந்தாற் றிரும்பலாம்! அவ்வாறு செய்வது என் பொறுப்பு.

ஜேயசிங் : நன்றியுடையேன் உம் உழுவலன்பிற்கு! இதோ செல்கிறேன் வேண்டிய முயற்சியை வினையறிந்து செய்ய.

அதிகன் : எங்ஙனம் முயல்வீர் ?

ஜேயசிங் : 'சொல்லாமலே பெரியர்' என்பது நினைவில் உள்ளதா ? என்னுடன் துணையாக ஆறு வீரர்கள் வந்துளார்கள். அவர்களை அழைத்துக்கொண்டு பாலாற்றங்கரையிலுள்ள பள்ளத்தாக்கிற்குச் செல்கிறேன். எப்படியாவது முடித்து விடுகிறேன்.

அதிராஜேந் : மிகவும் நல்லது. ஆனல், வெளிப்படலாகாது.

ஜேயசிங் : 'கொள்ளைக்காரர் வழிபறி' என்றுதானே பரவும் ?

அதிராஜேந் : அப்படியா? மிகமிக நல்லது. இன்னும் சிறிது மது பருகிவிட்டுப் போம்.

ஜேயசிங் : வேண்டாம். 'அளவுக்கு மிஞ்சினல் அமுதமும் நஞ்சுதானே ?' செல்கிறேன்.

அதிராஜேந் : } சரி, போய்வாருங்கள். (போகிறன்)
அதிகன் : }

## காட்சி 10

**இடம் :** பாலாற்றங்கரைப் பள்ளத்தாக்கு.

**காலம் :** நடுப்பகல்.

ஜெயசிங்கன் ஆறு முரடர்களுடன் அமர்ந்திருக்கிறான். எல்லோரும் வழிபறிசெய்யும் மறவர்கள்போல உடையணிந்துள்ளனர். முரடர்கள் பெயர்: திண்டன், செங்கண்ணன், வேலன், செல்லன், வெள்ளையன், குமரன்.

ஜெயசிங் : நான் கூறுவதைக் கருத்துடன் காதுகொடுத்துக் கேளுங்கள். அவர்கள் வரும் நேரமாயிற்று. நான் போய் மறைந்து கொள்கிறேன். வருகிறவர்கள் பெரிய வீரர்களே. எனினும் சிறிதும் அஞ்சாமல் எதிர் பாராத வகையிற் சென்று தாக்குங்கள். துணிந்தவனுக்குத் துக்கமில்லை. ஆளுக்கு இருவராகத் தாக்கினால் ஒரே அடியில் தொலைந்து விடுவார்கள். தவறினால் ஒன்றும் முடியாது. என்ன ?

செங்கண் : (கும்பிட்டு) ஆவுட்டுங்க. (ஜெயசிங்கன் செல்கிறான்)

வேலன் : (வெறுப்புடன்) ஏண்டா திண்டா! நம்ப ராசா வாட்டம் தூங்கறவன் தொடையிலே கவுறு திரிக்கிறவங்க இந்த லோவத்திலேயே இருக்கமாட்டாங்கடா!

திண்டன் : அது பெரிய எடத்து சேதி அப்பா! நமக்கேண்டா அந்தப் பேச்செல்லாம்! நம்பளெ வடையெ துண்ணச் சொன்னாங்களா? இத்தினிண்ணு எண்ணச் சொன்னாங்களா ?

வேலன் : போடா எருமக்கடா ! ஒங்கிட்டியும் ஒரு சேதி சொல்றனே! எம் புத்தியைப் பாரு! டே வெள்ளையா ! நீ சொல்ரு. எங்கியாவது பதுங்கியிருந்து குத்தலாமாடா ?

வெள்ளையன் : பின்னே என்னடா பண்றது ஒத்துக்கிட்டதுக்கு அப்புறம் ?

செங்கண் : சீ! நீ ரொம்ப வெள்ளைடா ! பதுங்கிக்கிட்டுருந்து குத்தறது ரொம்பத் தப்பு. என்னுமோ அவருண்டே ஒத்துக்கிட்டமேண்ணு பாக்குறேண்டா !

செல்லன் : இந்த நெனப்பு ஏண்டாண்ணே முதல்லியே இல்லாத போச்சி?

குமரன் : நானு சொல்லலாமாண்ணு பாத்தேண்டா ! பெரியவுங்கெல்லாம் பேசாதிக்கிருங்களே, தெரியாதியாருப்பாங்குண்ணு உட்டுட்டேண்டா! இப்போ என்னடா பண்றது ?

வேலன் : பண்றதுடா பானையுஞ் சட்டியும்! இருந்தாலும் நம்பளாட்டம் மடையனுவ ஒருத்தருமே யிக்கமாட்டாங்கடா !

திண்டன் : இப்போமட்டும் என்னடா முளுவிப் போச்சி? பேசாமே ரட்டபாடிக்குப் பூடுவோண்டா !

வெள்ளை : அது உண்ட வூட்டுக்கு ரண்டவம் பண்றதில்லியாடா ?

குமரன் : கூழுக்கும் ஆசெ மீசைக்கும் ஆசெடா ஒனக்கு!

வேலன் : நீங்க எதுவோண்ணாலும் பண்ணிக்கிங்கடா ! நாமட்டும் நேரா நிண்ணுதாண்டா சண்டே போடப் போறேன்.

சேங் : அதாண்டா சரி. மூண்டனுக்கு ரண்டாளுதா னேடா! பாக்கலாண்டா ஒருகை.

வெள்ளை: நீ தாண்டா நூத்துக்கு ஒரு ஆம்புளே. வேலா! நீ சொல்றபடி செஞ்சுட்டா எல்லாத்துக்கும் நல்லது.

செல்லன் : நானும் ஒத்துக்குறேண்டா! ஆனஒண்ணு.

குமரன் : என்னுடாது?

செல்லன் : நாம்பல்லாம் செத்துப்பூட்டா நம்ப பொண் டாட்டி புள்ளங்க கெதி என்னடா?

வேலன் : அதாம்பா விதி!

செல்லன் : என்ன விதிடா? அவுங்க சுவப்படறதுக்கு நாம்ப ஏண்டா உசுரெக் கொடுக்குணும்?

வேலன் : என்னண்ணே பண்றது? உரல்லே தலெயெக் குடுத்துட்டு உலக்கக்கிப் பயந்தா முடியுதா? கடவு ளேண்ணு நுழைவோண்டா!

சேங் : (காது கொடுத்துக் கேட்டு) அதோ யாரோ வராங்கபோலேருக்குதடா! எடுத்துக்குங்கடா ஈட் டியே! மறியுங்கடா வளியெ!

மற்றவர்கள் : அப்படியே! (வழியைமறித்து நிற்கிறார்கள். குலோத்துங்கனும் மதுராந்தகனும் கருணாகரனும் வருகிறார்கள். ஆறு முரடர்களும் எதிர்த்துத் தாக்கு கிறார்கள்.)

குலோத்துங்கன் : அடேய்! வீணாக என் இறக்க வந்தீர் கள்? நீங்கள் யார்?

சேங் : நாங்க யாரானஎன்ன? உங்களை உசிரோடே விடப் போறதே யில்லெ.

கருணு : புற்றிலிருக்கும் பாம்பு விதி கிழிந்தால் வெளியே வந்து மனிதர்களிடம் அடிபட்டுச் சாகிறது ! (போர் நடக்கிறது. போரில் முரடர் அறுவரும் பிணமாக வீழ்கிறார்கள்.)

குலோத் : என்ன கோழை வேலை பார்த்தீர்களா ? இது அதிராஜேந்திரன் வேலையாகத்தான் இருக்கவேண்டும்.

கருணு : ஆமாம்! சோழர் மரபில் இக் கோழை தோன்ற வேண்டுமா ?

மதுராந் : ஒவ்வொரு நொடியிலும் கோழை அஞ்சி அஞ்சிச் செத்துக்கொண்டே யிருப்பான் என்பார்கள். அதிராஜேந்திரர் எப்போது இந்த வேலை தொடங்கினாரோ அப்போதே இறந்தார்! இனி அவர் வீரராவது எப்படி? (செல்கிறார்கள். ஜெயசிங்கன் வருகிறான்)

ஜெயசிங் : என்ன முட்டாள் வேலை! சற்றும் ஆராய்ச்சியின்றி இந்த மூடர்களை நம்பி இதைத் தொட்டேனே! ........நல்ல காலம்! நம்மை அவர்கள் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் உயிர் தப்பாது. நாயை அடிப்பது போலன்றோ அடித்துப் போட்டிருப்பார்கள் ?....அது வரைக்கும் என்பெயர் வெளியாகவில்லை! மதுராந்தகியை அடைய வேறு வழிதான் செய்யவேண்டும். இனி அதிராஜேந்திரன் முகத்தில் விழிக்க முடியாது !
(போகிறான்)

---

## காட்சி 11

**இடம் :** வேங்கியில் அரசரரண்மனை.

இராஜ ராஜ நரேந்திரன் படுக்கையில் படுத்திருக்கிறான்.

**காலம் :** இரவு.

குலோத்துங்கன் தந்தையின் அருகில் அமர்ந்திருக்கிறான்.

விஜயாதித்தன், கருணாகரன், மதுராந்தகன் ஆகிய மூவரும் தனித்தனிப் பீடங்களில் அமர்ந்திருக்கின்றனர்.

இராஜராஜ நரேந் : (மெலிந்த குரலில்) குலோத்துங்கா! என் அருமைச் செல்வமே! வருந்தாதே! உலகமே ஒரு நாடகமேடை. நான் புனைந்திருந்த புனைவினைக் களையப் போகிறேன். எல்லோரும் இங்ஙனமே எடுத்தெறிந்தே குவார்கள். நாம் எத்துணையோ பிறப்புக்கள் எடுத்துளோம். ஒழிந்த பிறப்புக்களில் நம் உறவின் உண்மை என்னவோ? இனிவரும் பிறப்புக்களிலும் எப்படியென எண்ணவியலோம்! ஆகையால், இந்த இரண்டு நாளைய உறவை எண்ணி ஏங்காதே........நீ என்னைப்போலச் சிற்றரசனாக இராமல் முடிமன்னனாக—மன்னர் மன்னனாக வாழ்வாயென வாழ்த்துகிறேன். நம் குடிப் பெருமை அழியும்படிக் குறை செயலைக் கொள்ளாதே!

குலோத் : (கண்ணீர் வடிய) குறை செயலைக் கொள்ள மாட்டேன். தாங்கள் இவ்வுலகக் கவலையின்றிப் பேரின்ப வீட்டிலே உள்ளத்தைச் செலுத்துங்கள்........ ஆனால்....ஆனால்....தங்கள் பிரிவை எப்படிப் பொறுப்பேன்?(விம்முகிறான். மற்றையவரும் வருந்துகிறார்கள்)

இராஜ : குழந்தாய்! (கண்ணீரைத் துடைத்து) என்ன இது! பேதைகளைப்போல் வருந்துகிறாயே! என் பிரிவின் வருத்தம் காலம் போகப் போகத் தணிந்துவிடும். காலம் எதையும் மாற்றும் ஆற்றலுடையது. உலக இயலே அப்படி! (விஜயாதித்தனைப் பார்த்து) தம்பி! விஜயாதித்தா! உடன்பிறப்பே சிறந்த தோள்வலியென்

யதை நீ வாழ்க்கையில் செய்து காட்டினாய். நாமிருவரும் நீண்ட காலம் பிரியாமலிருந்தோம். நம் செல்வன் குலோத்துங்கனைக் கவனித்துக்கொள். நம் வேங்கி அன்னையைப் பிறர் கைப்பற்றாமல் பார்த்துக் கொள்.

விஜயாதித் : (துக்கத்துடன்) அண்ணா ! அடியேன் என் கடமையை இதுவரையிற் செய்தேன். இனியும் அப்படியே. தாங்கள் எவ்விதக் கவலையும் படவேண்டாம். எப்பிறப்பிலும் நான் தங்கள் துணைவனாக இருக்க இறைவன் அருள்புரிவானாக! (கை கூப்புதல்)

இராஜ : (தடுமாற்ற மொழிகளால்) குலோத்துங்கா ! விஜயாதித்தா! தாய் நாட்டைப் பார்த்துக் கொள்ளுங்கள். இறைவா! இனிப் பிறவாமை வேண்டும். பிறந்தால் வேங்கியன்னையின் வயிற்றிலே பிறக்கவேண்டும். (ஆவி பிரிகிறது)

குலோத் : ஆ தந்தையே ! (மூர்ச்சிக்கிறான்)

---

## காட்சி 12

**இடம் :** கங்கை கொண்ட சோழபுரம்.

**காலம் :** காலை.

வீர ராஜேந்திரன் உலாவிக் கொண்டிருக்கிறான்.

வீரராஜேந் : (தனிமை) வேங்கி நாட்டின் அரசர் நிலை விளங்க வில்லையே ! நாம் கண்ட கனவு உண்மையானால் ........அவர் இனிப் பிழைப்பது அரிது........அப்புறம் குலோத்துங்கன் அந்த நாட்டிலேயே........குலோத்துங்

கன் நல்ல அரசனுவான். அவன் சிறந்த வீரன். நல்ல ஒழுக்கமுடையவன். நம் அதிராஜேந்திரனும் அரசர் மரபின் அழகிய கொழுந்துதான்! சோழர் குலச் சுடர் மணிதான்! கல்லெல்லாம் மாணிக்கக் கல்லானுல் அப்புறம் அமையாதது என்ன! புலியின் மரபில் வந்த பூனை அவன்! முரடன்! நல்லொழுக்கம் இல்லாதவன்! பெருந்தன்மை மருந்துக்கும் வகையற்றவன் ! அவன் எப்படி இந்நாட்டை ஆள்வான்? மந்தியின் கையில் மலர் மாலை தான்! (துக்கத்துடன்) அந்தோ ! சோழர் மரபு இனி என்ன ஆகும் ? அந்த விக்கிரமாதித்தன்—மேலைச் சாளுக்கியன்—எப்போதெப்போதென்று காத்திருக்கிருன். அதிராஜேந்திரன் கையில் சோழமங்கை அகப்பட்டவுடன் விக்கிரமாதித்தன் பூனை கிளியைக் கவர்வதுபோற் பொருக்கெனப் பிடித்துக் கொள்வானே !

(ஒரு காவலன் ஓலை கொண்டுவருகிருன்)

என்னடா அது?

காவலன் : (கைகூப்பி) அரசர் வாழ்க! வேங்கிநாட்டுத் தூதன் ஒருவன் இதைக் கொண்டுவந்தான். (கொடுக்கிருன்)

வீரராஜேந் : (வாங்கிப் படித்து) அடடா! வேங்கிமன்னர் விண்ணுலகை மேவினரா ! (காவலனைப் பார்த்து) அந்தத் தூதுவனைப் போகச் சொல். (காவலன் போகிருன்) இனி விரைவில் வேங்கிநாடு செல்லவேண்டும். அதிராஜேந்திரன் ஆட்சியில் இந்நாடு சிலநாள் இருக்கட்டும். (பார்ப்போம்)

---

## காட்சி 13

**இடம் :** இரட்டபாடி.

**காலம் :** காலை.

சாளுக்கிய விக்கிரமாதித்தன், ஜெயசிங்கன், சாமுண்டராயன். (ஆசனங்களில் அமர்ந்திருக்கிறார்கள்.)

விக்கிர : ஜெயசிங்கா! ஒற்றர்கள் உரைத்ததைக் கேட்டனையா?

ஜெயசிங் : ஆம் அண்ணா! இராஜராஜநரேந்திரன் இறந்தது உண்மை.

விக்கிர : அப்படியானால் இதுதான் நமக்கு நற்காலம். இது தப்பினால் இனி எப்போதும் இத்தகைய வாய்ப்பு வாய்க்காது. (சினத்துடன்) சோழர்கள் அந்தக் கீழைச் சாளுக்கியரைக் கைப்படுத்திக்கொண்டு நம்மை எப்பாடு படுத்தினர்! வேங்கியைப் பிடுங்கி விட்டாற் சோழர்களின் கொதிப்பு அடங்கும்! என்ன தண்டநாயகரே!

சாமுண்டராயன் : (எழுந்து) தாங்கள் கூறுவது சரி. சோழர்களை ஒடுக்க இதுதான் காலம்! "கொக்கொக்க கூம்பும் பருவத்து, மற்றதன்—குத் தொக்க சீர்த்த விடத்து.—" என்றார் வள்ளுவர்.

ஜெயசிங் : ஆம், வள்ளுவர் வாக்கு விலைபிலா மாணிக்கம்.

விக்கிர : நூலாராய்ச்சி அப்புறம்! இப்போது வெற்றி வேண்டும். (பல்லைக் கடித்து) எங்கள் மரபை ஒடுக்கிக் கொண்டே வருகிற சோழர் குடியைக் கசக்கிப் பிழிய வேண்டும்!

சாமுண் : நான் பட்டபாடு சிறிதா? அந்த வீர ராஜேந்திரனை எண்ணும்போது என்னுளம் எப்படிக் குமுறுகிறது தெரியுமா? அவனைக்கண்டால் நான் ஒரு பெண் போலாகிவிடுகிறேனே ! ஆ ஆ! என்ன இழிவு! அதைப் போக்க அகப்பட்டது அரிய காலம்!

விக்கிர : எப்போது புறப்படுவது ?

சாமுண்ட : இப்போதுதான் ! ஏன் காலம் போக்க வேண்டும் ?

விக்கிர : யாவர் புறப்படுவோர் ?

சாமுண்ட : நானே பழி தீர்க்க வேங்கியின்மேல் விரைந்து செல்கிறேன் !

ஜேயசிங் : (நகைத்து) வேங்கிநாட்டின் மேலா ? ஆங்கு ஏன் ?

விக்கிர : வேங்கியைக் கைப்பற்றி விட்டாற் பாங்கறியாச் சோழர்களைப் பழிதீர்க்க முனையலாம்! இதுவரையில் அதுதானே பேசினோம்? என்னமோ வினவுகிறாயே !

ஜேயசிங் : மன்னிக்க வேண்டும். உங்கள் ஆராய்ச்சியின் முடிவு பயனற்றது.

விக்கிர : ஏன் ?

ஜேயசிங் : மைத்துனன் இறந்ததற்கு வந்திருப்பான் வீரராஜேந்திரன்.

விக்கிர : (கவலையுடன்) உம்.

ஜேயசிங் : குலோத்துங்கன் வெலற்கரிய வீரன். அவன் நண்பர்கள் பொருவினையறிந்த கருணாகரனும் சதுரப் பாடுமிக்க மதுராந்தகனும் இவ்வுலகை வெல்லும் இளஞ்

சிங்கங்கள். எல்லோரும் இப்போதுளர் அங்கே. ஆகையாற் போதல் பொருந்தாது.

விக்கிர: ஆம், நீ கூறுவதும் கொள்ளத்தக்கதே.

சாமுண்ட: எனினும், இளவரசர் காலங் கருதவில்லை. அவர்கள் துக்கத்தினுற் சோர்வுற்றிருப்பர். போர் முயற்சிக்குப் போதிய காலங் கொடாமற் போய்ப் பொருதாற் போதும். "பகல் வெல்லுங் கூகையைக் காக்கை, இகல்—வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது".

ஜெயசிங்: அண்ணு! ஒரு விண்ணப்பம். தண்ட நாயகர் அவர் விருப்பின் வண்ணம் வேங்கிநாட்டின் மேற் செல்லட்டும். நான் காவிரி வளநாட்டைக் கடிதிற் கைப் பற்றுகிறேன்.

விக்கிர: உன் விருப்பின்படிப் பொன்னி நாட்டின் மேற் போ. நாங்களிருவரும் வேங்கியை ஏங்கும்படிச் செய்கிறோம்.

ஜெயசிங்: (வணக்கத்துடன்) மகிழ்ச்சி.

---

## காட்சி 14

**இடம்:** வேங்கியில் அரண்மனை.
**காலம்:** மாலை.

வீரராஜேந்திரனும் விஜயாதித்தனும் உரையாடல்.

வீரராஜேந்: எல்லாம் இனிதே முடியும். குலோத்துங்கன் எக்குறையுமின்றி இந்நாட்டை ஆளட்டும். நான் சோழ நாட்டிற்குச் செல்கிறேன்.

விஜயாதித் : தங்கள் கருத்துப்படியே செய்யுங்கள். (காவலன் வர) என்னடா ?

காவலன் : (கைகூப்பி) ஒற்றரையா வந்திருக்காங்க.

விஜயாதித் : வரச் சொல். (காவலன் செல்கிறுன்) இரட்டபாடியின் பக்கமிருந்துதான் வரவேண்டும். (ஒற்றன் வருகிறுன்)
என்ன ஒற்றரே! அமருங்கள்.

ஒற்றன் : (கைகூப்பி) வணக்கம் அரசே! விக்கிரமாதித்தர் சாமுண்டராயரைப் படைத் தலைவராகக்கொண்டு இந்நாட்டின்மேற் போருக்குப் புறப்படுகிருர். (அமர்கிறுன்)

விஜயாதித் : எண்ணிய வண்ணமே புண்ணியம் வந்தது.

வீரராஜேந் : கெடுமதியாளன் கெடுவதற்குச் சிறிது மையமில்லை.

விஜயாதித் : எம் அண்ணல் விண்ணுலகேகவும் மண்ணின்மேல் வந்தது காதல் அம் மதிகேடனுக்கு !

வீரராஜேந் : நாமெல்லாம் பெண்களா. என்ன ! அந்தப் புல்லன் விக்கிரமாதித்தனுக்குப் பெண்ணையுங் கொடுத்து மண்ணையாளும் வாழ்வுங் கொடுத்தால் விண்ணையாள விழைகிறுன் போலும் !

ஒற்றன் : ஜெயசிங்கர் மற்ருெரு படையுடன் காவிரி நாட்டிற் கால்வைக்கக் கருதியுள்ளார்.

வீரராஜேந் : (பல்லைக் கடித்து) அப்படியா ! என்ன துணிவு ! அடேய் காவலா ! (காவலன் ஓடி வருகிறுன்) குலோத்துங்கரைக் கூப்பிட்டு வா.

காவலன் : (கைகூப்பி) ஆணைப்படி. (செல்கிறுன்)

விஜயாதித்: நல்ல காலம் பார்த்தனன் அப்புல்லன்!

வீரராஜேந்: அவர்கள் இரட்டபாடியை விட்டுப் புறப் படுமுன் திரட்டிய படையுடன் சென்று தாக்கவேண் டும். (குலோத்துங்கன் வர) குலோத்துங்கா! வா, அமர் இப்படி. (குலோத்துங்கன் இருவரையும் வணங்கி இருக்கையில் அமர்தல்) அமர் தொடுக்கப் போகிருனும் அந்த விக்கிரமாதித்தன்!

குலோத்: (நகைத்து) எவனுவது பழம்புண் ஆறுமுன் படையெடுப்பானே?

வீரராஜேந்: ஜெயசிங்கன் மற்றொரு படையுடன் கங்கை கொண்ட சோழபுரத்திற் கால்வைக்கக் கருதிச் செல்கி ருனும்!

குலோத்: (சினத்துடன்) என்ன என்ன! துன்னலன் நினைவு!

வீரராஜேந்: இன்னலடைவதுதான்! என்னவாயினும் என்ன! கருணகரனையும் மதுராந்தகனையும் கடும்படை யுடன் காவிரி நாட்டுக்கனுப்பு. நாங்கள் இரட்டபாடி யானை எதிர்கொள்கிருேம்.

குலோத்: தங்கள் விருப்பப்படி நடக்கிறேன்.......நான் போருக்குப் போனல் என்ன?

வீரராஜேந்: இன்னும் சிறிது காலம்வரை ஏகல் தகாது. எங்களுக்குத் தான் என்ன வேலை?

குலோத்: தங்கள் ஆணைப்படியே நடந்து கொள்கிறேன்.

---

## காட்சி 15

**இடம் :** கங்கைகொண்ட சோழபுரத்தில் அதிராஜேந்திரன் அரண்மனை.

**காலம் :** மாலை.

அதிராஜேந்திரன் அதிகன்—இருவரும் ஆசனங்களில் அமர்ந்திருக்கின்றனர். எதிரில் மது நிரம்பிய பொற்கிண்ணங்கள். பெண்கள் நடனம் புரிகின்றனர். இருவரும் மதுவைப் பருகிக்கொண்டே பார்த்துக் களிக்கிறார்கள். நாட்டியம் முடிந்ததும் பெண்கள் பரிசு பெற்றுச் செல்கின்றனர். இருவரும் குடித்துக்கொண்டே பேசுகின்றனர்.

அதிகன் : ஆ! என் களிப்புக்கு எல்லையேயில்லை.

அதிராஜேந் : நாட்டியத்தின் களிப்பா? கள்ளின் களிப்பா?

அதிகன் : (வெறுப்புடன்) நாட்டியமா ? அதனால் என்ன களிப்போ? மது நமது மனத்துள் மதுரத்தை வாரிச் சொரிகிறது ! நரம்புகளில் ஒரு முறுக்கு ! உள்ளத்தில் ஓர் உவகை ! கண்களில் ஒரு காட்சி ! உடம்புக்கொரு தெம்பு! கையையும் காலையும் ஆட்டுவதால் ஆடுகிறவர்களுக்கு வேணுமெனில் அழகிய தோற்றமும் விழுமிய உடல் நலமும் உண்டாகலாம்.

அதிராஜேந் : போதுமையா போதும் ! நாட்டியம் ஒரு சிறந்த கலை. கண்ணுக்குண்டாகும் இன்பம் கருத்துக்கு முண்டு. போகட்டும், இப்படியே நம் காலம் களிப்புடன் கழிந்தால் நல்லது.

அதிகன் : நடந்தால் எனக்கூறுவானேன்? நடக்கத்தான் போகிறது........ஒன்றுக்கும் சிந்தனை வேண்டாம்.

அதிராஜேந் : சிந்தனை ஒன்றுமில்லை........அந்தப் பயல் வீரவேள் எங்குப் போனன்?........ஒன்றுமே தெரியாதா ?

அதிகன் : (குடித்துக்கொண்டு) குடியாத வீடு விடியாது. அந்த வீரவேள்........கோழைப் பயல்........குலோத்துங்கரிடம் குறையாத அன்பு வைத்திருக்கிறன். எங்கேயாவது மறைந்திருப்பான் மண்ணுங்கட்டி.

அதிராஜேந் : அவன் கிடக்கிறன். (குடித்துக்கொண்டே) ஆமாம். அந்தக் குலோத்துங்கன் இன்னும் ஒழியவில்லையே!. ஜெயசிங்கன் பெயருக்குத்தான் போலிருக்கிறது! வீரமில்லாத வீணன் !

அதிகன் : உண்மை ! எல்லாருங் கோழைகள் ! நானும் நீங்களுந்தான் அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்கள் !

அதிராஜேந் : (எழுந்து அதிகனைத் தட்டிக் கொடுத்து) பலே ! அப்படிச் சொல்லு ! (நகைக்கிறன்) இந்தச் சோழநாடு இப்போது நம் கையில்! என்ன புரிகிறதா? நாம் என்ன செய்தாலும் செய்யலாம்! நாமே முடிமன்னர். (நகைக்கிறன்)

அதிகன் : (நகைத்துக் கொண்டே) ஒரு காகமுங் குறுக்கே ஓடாது. இந்தச் சோழநாட்டை ஆள நமக்கு வேண்டிய உற்ற பெருந்துணை இந்த வீரந்தரும் கள்ளே! இதைப் பருகினல் எமனையும் ஏனென்று கேட்கலாம் !

அதிராஜேந் : அப்படிக் கூறு! நாம் இந்த நாட்டை ஆள்கிறேம்! இந்தக் கள் நம்மை ஆள்கிறது! இதுவே நம் வழிபடு தெய்வம் !

அதிகன் : ஆகையால், நமக்குக் காவிரியைப்போல வற்றக் கள்ளூற்று வேண்டும். அதற்குத்தான் வகை செய்ய வேண்டும்.

அதிராஜேந் : (நகைத்து) ஏன் அவ்வளவு கவலே? காவிரி யின் பக்கத்திலேயே போய்க் குடியிருந்து விடுவோமே! வேண்டியபோது குடித்தால் போயிற்று! காவிரியைப் போல வற்ருத பேராறு மற்ருென்றில்லே. "வான் பொய்ப்பினுந் தான் பொய்யா—மலேத்தலேய கடற் காவிரி ''........நல்ல ஆராய்ச்சிதான்!

(காவலன் வருகிருன்)

ஏண்டா குடிகாரப் பயலே! ஏன் உள்ளே வந்தாய்? ........உம்........போடா கழுதை!

காவலன் : (நடுக்கத்துடன்) கும்பிட்டு) ஜெயசிங்கருண் டேருந்து ஒரு ஆள் வந்திருக்காங்கள்.

அதிராஜேந் : என்னடா! ஜெயசிங்கரண்டை யிருந்தாடா?

காவலன் : ஆமாங்கள்.

அதிராஜேந் : என்னுக் கள்ளடா?

காவலன் : (கும்பிட்டு) கள்ளில்லிங்கள்! ஆள் ஓலே கொண்டு வந்திருக்காங்கள்.

அதிராஜேந் : பின்னே ஏண்டா நிற்கிருய்? போய் வாங்கி வாடா!

(காவலன் கும்பிட்டுப் போகிருன்)

அதிகன் : ஜெயசிங்கர் ஜெயமான செய்திதான் அனுப்பி யிருப்பார்.

(காவலன் ஓலே கொண்டு வருகிருன்)

அதிராஜேந் : அடேய்! அவனே அங்கேயே இருக்கச் சொல்.

(ஓலேயை வாங்கிக்கொண்டு) நீயும் போ.

காவலன் : (கும்பிட்டு) அப்படியேங்கள் (போகிருன்)

அதிராஜேந் : (ஓலையைப் படிக்கிறான். குடிமயக்கந் தெளிகிறது) அதிகா! இந்த ஓலையைப் படித்துப் பார். எல்லாம் எப்படியோ முடியும்போலிருக்கிறதே! (ஓலையைக் கொடுக்கிறான்)

அதிகன் : (படித்து விட்டு) என்ன முட்டாள்தனமான ஓலை !

அதிராஜேந் : அது என்ன ஓலையோ? நாம் செய்யவேண்டிய வேலையே தெரியவேண்டும்.

அதிகன் : என்ன செய்யவேண்டுமென எண்ணுகிறீர்கள்?

அதிராஜேந் : ஓலையிற் கண்டபடி அந்த நேரத்தில்........

அதிகன் : மறை வழியைத் திறந்துவிட வேண்டுமோ ?

அதிராஜேந் : பின் என்ன செய்வது ?

அதிகன் : என்ன செய்வதா? மதுராந்தகி யம்மையாரைச் சாளுக்கியன் திருட்டுத் தனமாக எடுத்துச் செல்வதா இனிய வழி? அவ்வழிக்கு அரசர் பெருமானின் அரிய துணை வேண்டுமா ?

அதிராஜேந் : (சிந்தனையுடன்) உண்மை உண்மை ! அதிகா நீ என் கண்களை மறைத்திருந்த மாசினை மாற்றிவிட்டாய். திருட்டுத்தனமாக வேற்றாள் நுழைய விட்டிட மாட்டேன். சோழர் குலக்கொடியைச் சாளுக்கியன் தாவிப்பறிக்கச் சதிசெய்யேன்! என்றாற் சோழர் குலம் களங்க முறலாகாது. முடியாதென முடங்கலில் எழுதி விடுகிறேன்.

அதிகன் : அப்படியே எழுதுங்கள். (அதிராஜேந்திரன் ஓலை யெழுதுகிறான்.) அடேய் காவலா! அந்தத் தூதனை அழை. (தூதன் வர)

அதிராஜேந் : (ஓலையைக் கொடுத்து) போருக்கு எதிர் பார்ப்பதாகப் புகல்.

தூதன் : (வணங்கி) அப்படியே. (செல்கிருன்)

அதிராஜேந் : இனி வீரவேலேச் சிறைப்படுத்தி விட்டுப் போருக்கு வேண்டிய முயற்சியைப் புரி.

அதிகன் : அப்படியே. போய்வருகிறேன் (போகிருன்)

அதிராஜேந் : (உலாவிக் கொண்டே) என்ன செய்வதென ஒன்றும் புரியவில்லே! ஜெயசிங்கனே எதிர்த்து நிற்க யாரால் இயலும் ?........அதிகன் குடியிலும் சூதிலுந்தான் அதிகன்! அதிராஜேந்திரன் போரென்ருல் அலறும் உளம் படைத்தவன்! அதிராஜேந்திரா! உன்ருல் இந்தச் சோழநாட்டை ஆளமுடியாது !....... என்ன கூறுகிறேன்........வீரராஜேந்திர சோழதேவர் மகனுகியும் வீரமின்றி வீழ்வதோ? எப்படியும் இந்தச் சோழநாட்டை ஆள முயல்வேன். அம் முயற்சியில் வீழினும் நல்லதே.

---

## காட்சி 16

**இடம் :** கங்கைகொண்ட சோழபுரம் ; மதுராந்தகியின் அந்தப்புரம்.

**காலம் :** இரவு. (மதுராந்தகியும் விமலேயும் உரையாடல்)

விமலே : உன் தமயனுர் இப்போது.......

மதுராந் : ஏன் தயங்குகிருய் ? தப்பான நெறியிற் செல்கிருர்.

விமலே : ஆமாம். மேலும் என் காதலரைத் தேடித் திரிகிருர்கள் ?

மதுராந் : ஏன் ?

விமலை : சிறைப்படுத்த வேண்டுமாம் !

மதுராந் : இவர்கள் போக்குக்கு அவர் ஒத்து வர வில்லையா ?

விமலை : எப்படி ஒத்து வருவார் ?

மதுராந் : என் சிற்றப்பா வருவதற்குள் இன்னும் என்ன நடக்குமோ? எப்போதும் குடியும் கூத்தும் !

விமலை : குடிகள் வெறுப்பு கொஞ்சமா ? வாய்திறந்து கூறவும் வகையில்லையே! (வேலைக்காரி ஓடி வருகிறாள்)

மதுராந் : என்னடி ?

வேலைக்காரி : இளவரசர் வருகிறாரம்மா! (விமலை எழுந்து மற்றோர் அறைக்குள் மறைகிறாள். மதுராந்தகி எழுந்து உலாவுகிறாள். அதிராஜேந்திரன் வருகிறான்.)

மதுராந் : வாருங்கள் அண்ணா! அமருங்கள்.

அதிராஜேந் : (அமர்ந்து கொண்டே) நீயும் அமர். ஆவதும் அழிவதும் அரிவையராலே என்பதை அறிகிறேன் இப்போது !

மதுராந் : (அமர்ந்து) அது எப்படி அண்ணா ? பெண்கள் எதற்கும் பற்றாத பேதைகளென்றும் ஆடவர்களின் ஆதரவாலேயே வாழ முடியும் என்றும் எழுதி வைத்திருக்கிறீர்கள். அப்படியே நடத்தியும் வருகிறீர்கள். உண்மை அப்படி உருவாக இருக்க ஏதோ இயம்புகிறீர்களே !

அதிராஜேந் : அவர்கள் அவ்வாறு எழுதியிருப்பதும் அதை நடத்திக் காட்டுவதாக நீ கூறுவதும் பொய். நான் நவில்வது நல்ல உண்மை.

UNIVERSITY EXTENSION LI

மதுராந் : எப்படி ?

அதிராஜேந் : (ஒருபுறம் நோக்கிக் கொண்டு) உன்னால் உணர்ந்தேன்! இந்த நாட்டின் ஆக்கமும் அழிவும் உன் கையில் உள்ளது.

மதுராந் : ஓ!

அதிராஜேந் : நீ சற்று மனந்திரும்பினால் அந்த ஜெய சிங்கனால் இந்நாட்டுக்கு வரும் இந்த அழிவைத் தடுக்க இயலும். இல்லையேல்........

மதுராந் : இல்லையேல் இந்நாடு இடருறுமோ? ஏனண்ணா! உங்களைப்போன்ற ஒப்பற்ற வீரர்கள் பலருளர் இந் நாட்டில். அந்த ஜயசிங்கனென்ன? வேறு யார்தான் எப்படி எட்டி அடிவைக்க முடியும்? மூடன்! முதலில் தங்களை இனியமொழியாற் கேட்டான்! இப்போது அச்சுறுத்துகிறானோ?

அதிராஜேந் : ஜயசிங்கனைப்பற்றிச் சற்றும் அறியாய் நீ. வீரமென்பது துணிவுதான். அத்துணிவு அவனிடம் இருப்பதுபோல் எவரிடமும் இல்லை. நினைத்ததை முடிப்பதில் நிகரற்றவன்!

மதுராந் : (இகழ்ச்சியாக நகைத்து) அங்ஙனமானால், ஜய சிங்கனைப் போன்றவர்களிடம் உங்களைப் போன்றவர் கள் நாட்டை ஒப்பித்துவிட்டு எங்களைப்போல் புடவை யுடுத்திக்கொண்டுபோய் மூலையில் முக்காடிட்டு முடங்க வேண்டியதுதானே! அதற்கு இப் பேதைப் பெண் செய்வதென்ன?

அதிராஜேந் : (தலை குனிந்து) நீ அவனை மணந்து கொண் டால்........

மதுராந் : (சினத்துடன்) நான் அவனை மணந்து கொண்டால் மட்டும் என்ன நன்மை? சாளுக்கியன் வீரம் தகர்க்க முடியாததென்றால் அவன் அருளால்தானே நீங்கள் இந்நாட்டை ஆள முடியும்? அவன் இறைகொடு என்றால் கொடுக்கவேண்டும். இன்றேல் அவனே ஆள்கிறான்! எங்ஙனமேனும் ஆளவலியற்றவரிடம் அகப்பட்ட நாடு அல்லலுறு மென்பதில் ஐயமேது?

அதிராஜேந் : வலியவன் பகை கூடாதென்பதை நீ மனத்துக் கொள்ளவில்லையே!

மதுராந் : (நகைத்து) சோழர்களிடம் பன்முறை தோல்வியுற்ற தூய தறுகண்மையாளன் அந்தச் சாளுக்கியனென்பதை அறிவேன். ஓர் சிற்றோலை நம் தந்தையார்க்கு ஒட்டிவிடுங்கள். அவர் வருவதற்குள் அந்த வீரன் வந்து விட்டால் நானே வாளேந்திப் போர் புரிகிறேன். (வேலைக்காரி வருகிறாள்) என்ன?

வேலைக் : இளவரசரைத் தேடிக்கொண்டு அரண்மனைக் காவலர் வந்திருக்கிறார்.

அதிராஜேந் : வரச் சொல். (வேலைக்காரி செல்கிறாள்) என்ன இருந்தாலும் நீ இப்போதைய நிலையை எண்ணவில்லை மதுராந்தகி! (வேலைக்காரன் வருகிறான்) என்னடா?

காவலன் : (கை கூப்பி) உங்களைப் பார்க்கணும்னு கருணாகரரும் மதுராந்தகரும் வந்திருக்காங்கள்.

அதிராஜேந் : இதோ வருகிறேன் நீ போ.

காவலன் : (கைகூப்பி) அப்படியேங்கள். (செல்கிறான்)

அதிராஜேந் : நான் வருகிறேன். இன்னும் சிறிது சிந்தனை செய். (போகிறான்)

மதுராந் : (தனியே) இத்தகைய அண்ணாவால் ஏது நன்மை கிட்டும் எனக்கு? இனி இதை நம் அத்தானுக்கு எழுதினால் என்ன? (விமலை வர) ஏனடி விமலா! என்னடி வழியிதற்கு?

விமலை : அண்ணாவின் விருப்பப்படியே நடந்துகொள்வது நலம் என்று நினைக்கிறேன். போரென்றால் நாட்டிற்குப் பொல்லாங்குதானே?

மதுராந் : (சினத்துடன்) நீ கூடவா இப்படிச் சொல்கிறாய்? அந்த ஜயசிங்கனை மணக்கும்படி நேர்ந்தால் உயிரையே இழப்பேன். புலி எங்காவது கலைமானை மணக்குமா?

விமலை : (புன்முறுவலுடன்) நல்லது மதுராந்தகி! உன் எண்ணம் முடிய இறைவனருள் பெருகட்டும்.

---

## காட்சி 17

**இடம்:** வேங்கியிற் குலோத்துங்கன் அரண்மனை.
**காலம்:** மாலை. குலோத்துங்கன் உலவுகிறான்.

குலோத்துங் : (தனிமை) அரசாட்சியென்பது பெருஞ் சுமையாக இருக்குமென எண்ணுகிறேன். மழையை நோக்கி வாழும் பயிரைப் போலவே குடிகள் அரசை நோக்கி வாழ்கிறார்கள். அரசன் குடிகட்குச் செய்ய வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. கல்விக் கூடங்கள் கட்டவேண்டும். கற்ற அறிஞர்களைக் கொண்டு குடிகளுக்கு நல்லறிவு புகட்டவேண்டும். பயிரிட வேண்டிய முறைகளைக் கற்பித்து நீர்வளம் படுத்திக் கொடுக்கவேண்டும். இவைபோன்ற வேறு

நலன்களையும் இயற்ற வேண்டிய அரசன் எப்போதும் போர் செய்ய வேண்டியிருந்தால் என் செய்வது? (புலவர் வருகிறார்) வாரும் கவியரசே! அமர்வீராக (இருவரும் அமர்தல்)

ஜெயங் : அரசே! என்ன சிந்தனை?

குலோத் : உள்ளக் கலக்கந்தான்! எப்போதும் போரா? எவ்வளவு இடுக்கண்கள்!

ஜெயங் : "இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்." —
என்றார் வள்ளுவர்

குலோத் : உண்மையே.

ஜெயங் : 'போரெனிற் புகலும் புரிகழல் மறவர்' ஆக இருக்கவேண்டும்.

குலோத் : இஃதும் உண்மையே! எனினும், ஒரு அரசன் போரிலேயே நோக்கமாக இருந்தால் குடிகளின் நலன் குறைபடுமே!

ஜெயங் : அதிகமான் என்னும் வள்ளல் ஓர் அரசனே. எனினும் அவன் போர்க் கருவிகள் எப்போதும் கொல்லன் உலைக்களத்திலேயே குடியிருக்குமாம்! மேலும், தன் முயற்சியால் வருவதையே ஒரு வீரன் விரும்புவானெனத் தாங்கள் முன்னொருமுறை மொழிந்தீர்கள்.

குலோத் : ஆமாம்.

ஜெயங் : ஆகையால், தாங்கள் இளமையிலேயே பல நாடுகளையும் வென்று கைப்பற்றி ஒரு குடை நிழலில் ஆளவேண்டுமென்பது என் அவா.

குலோத் : (மகிழ்ச்சியுடன்) நன்று நன்று ! புலவர் மணியே ! தங்களைப்போன்ற உயர்ந்த நண்பரை அடைந்த எனக்கு என்ன குறை? (காவலன் வருகிறான்) என்ன ?

காவலன் : (கைகுவித்து) அரசர் பெருமான் வாழ்க ! போர்க்களத்திலிருந்து ஒரு வீரன் வந்திருக்கிறான்.

குலோத் : (பரபரப்புடன்) வரச்சொல் ! வரச்சொல் !! (காவலன் செல்கிறான்) நல்ல நிகழ்ச்சியே கொண்டுவர வேண்டும்! (வீரன் வருதல்) வா வீரனே! போர் எப்படி?

வீரன் : (கைகுவித்து) அரசர் பெருமானுக்கு வெற்றி ! வெற்றி !!

குலோத் : அப்படிக் கூறு. இதோ ஒரு மணிமாலை !

ஜெயங் : இதோ மற்றொரு முத்துமாலை ! (வீரன் இரண்டையும் வணங்கி வாங்கி அணிகிறான்)

குலோத் : கூறு நம் வெற்றி வரலாற்றை !

வீரன் : அரசர் பெருமான் வாழ்க! எப்படிக் கூறுவேன் அப்போரின் சிறப்பை? மெய்சிலிர்க்கும்படியான வீரப் போர் ! தங்கள் அம்மான் காட்டிய வீரச் செயலைக் கண்டு நாங்கள் செயலற்று நின்று விட்டோம் ! அப்போது அவரைக் கூற்றுவனும் கண்கொண்டு நோக்கக் குலைவான் ! அந்தக் கொடிய சாமுண்டராயன் ஒரே வீச்சில் மண்ணைக் கவ்வினான் !

குலோத் : ஆகா! ஒழிந்தானா அவன்? அப்புறம்?

வீரன் : தங்கள் சிற்றப்பாவும் இதுவரை நாங்கள் காணாத பெரும் போராற்றினர்.

குலோத் : அப்படியா ? போர் வீரர்கள் ?

வீரன் : போர் வீரர்களா ? (பெருமூச்சு விடுகிருன்) பல வீரர்களின் போர்த்திறமையை நினைத்தால் எனக்கென்னமோ பொருமையாக இருக்கிறது !

ஜெயங் : அந்த வீரத்தை நாங்கள் கேட்கலாகாதா ?

வீரன் : கேளுங்கள் ஐயா ! சொல்லும் பேருவது எனக்குக் கிடைக்கட்டும். ஒரு வீரன் பாருங்கள். ஒரு வேலை யானையின்மீது பாய்ச்சினன். அது நன்ருகத் தாக்கிப் பறிக்க வியலாமற் சிக்கிக்கொண்டது! அந்த யானையோ தாக்குதலைப் பொருமற் பிளிறிக்கொண்டு தன் பக்கத்துப் படைகளையே மிதித்துக்கொண்டு திரும்பி யோடியது ! எவ்வளவு தடுத்தும் நிற்கவில்லை.

குலோத் : நன்று ! நன்று !! அப்புறம் அந்த வீரன் ?

வீரன் : அதைத்தானே கூறவந்தேன் ! அவ்வீரன் கை வேலைக் களிற்றுடன் போக்கிவிட்டதால் வேறு வேலில்லையே யென வருந்தியவனுகி அங்குமிங்கும் நோக்கினன். அக்காலை அவன் மார்பில் ஓர் சிறு வேல் பாய்ந்திருந்ததைக் கண்டு மகிழ்ந்து அதைப் பற்றி பிழுத்து ஆரவாரித்துப் போர்முனையிற் புகுந்தான். அரசே! அக் காட்சியை நினைந்தால் உள்ளம் சிலிர்க்கிறது !

ஜெயங்கோண்டார் :
குலோத்துங்கன் :
} என்ன வீரம் ! என்ன வீரம் !!

ஜெயங் : "கைவேல் களிற்ருெடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்" —என்ற வள்ளுவர்
வாய் மொழிக்கு இலக்கியம் இவன் !

வீரன் : ஆம் ! அதைத்தான் நானும் கூறுகிறேன். அவ

னைப் போன்ற வீரன் நம் நாட்டிற்காக உயிர் கொடுத்து போது........

குலோத் : (துக்கத்துடன்) என்ன ! அவன் இறந்தானு?

வீரன் : ஆம் அரசே! (கண்ணீர் கலங்க) அவன் மார்பிற் பட்ட விழுப்புண் பெரியதாகையால் உடனே இறந்து விட்டான் ! இறக்கும்போதும் அவன் செய்த அருஞ் செயலை என்னென்பேன் ! எதிரியின் படையில் ஒரு வீரனை வீழ்த்திவிட்டுத்தான் தானும் வீழ்ந்தான் !

ஜெயங் :<br>குலோத் : } ஆ ! ஆ !!

வீரன் : வீழ்ந்த அவ் வீரனைச் சுற்றி நின்று நாங்களெல் லோரும் வீரவாழ்த்துக் கூறினோம் ! அவன் அழகிய புன்முறுவலுடன் வீரநாடு மேவினன் !

குலோத் : (கண் கலங்க) அவ்வீரனுக்கு நாம் வீரக்கல் நட்டு வழிபடவேண்டும்.

ஜெயங் : அதுதான் நன்று! தங்களைப் போன்ற அரசர்க் குப் போர் செய்யப் போதரும் வீரர்கள் பொய்யுடம்பு வீழினும் புகழுடம்பு பெற்றுப் பொன்று வாழ்விற் புகுவார்கள்.

குலோத் : விக்கிரமாதித்தன் போர் ?

வீரன் : அவர் தங்கள் அம்மானோடு போர் செய்து சோர்ந்து நின்றார். அவரை ஒன்றும் செய்யாமல் அனுப்பிவிட்டார் தங்கள் அம்மான் !

குலோத் : நன்று ! நீ ஏன் உன்னைக் குறைத்துக் கூறிக் கொண்டாய்? நீ எதும் போர் புரிய வில்லையா ?

வீரன் : இல்லை அரசே ! போர் செய்தேன். இதோ பாருங்கள் (மார்பைத் திறந்து காட்டுகிறான். கட்டுக் கட்டியிருக்கிறது) மார்பிற் புண்ணும் மலரென அணியாகப் பெற்றேன் ! எனினும் நாட்டுக்காக உயிர்விடும் பேறு பெற்றேனில்லையே !

குலோத் : அதற்காக வருந்தலாமா ? உன்னால் நம் நாட்டுக்கு வேறு நன்மையுங் கிடைக்கலாம். சோழர் பெருமானும் என் சிற்றப்பாவும் எப்போது வருவார்கள் ?

வீரன் : வரும் நேரந்தான் ஆகிறது. வெற்றியை விளம்ப என்னை முன்னால் அனுப்பினார்கள்.

குலோத் : அப்படியானால் அவர்களை வரவேற்போம். நண்பரே ! வீரமாதுடன் வரும் அவர்களுக்கு வீர வாழ்த்துப் பாடுவோம்.

ஜெயங் : அப்படியே.

---

## காட்சி 18

**இடம் :** கங்கை கொண்ட சோழபுரம் ; அதிராஜேந்திரன் அரண்மனை.

**காலம் :** பகல்.

அதிராஜேந்திரன் தனிமையாக உலாவுகிறான்.

அதிராஜேந் : (தனக்குத்தானே வருத்தத்துடன்) போரில் ஜெயசிங்கன் தோல்வியடைந்தது உண்மையே. எனினும், வெற்றியடைந்தவன் யானில்லையே ! ஜயசிங்க

னிடம் நான் தோல்வியுற நேர்ந்தபோது வந்து ஜயசிங் கனைத் தாக்கித் தோல்வியடையச் செய்தான்! அப் போது வீரர்களெல்லோரும் கருணாகரனைப் புகழ்ந்தார் கள். நானும் மானமின்றிப் புகழ்ந்தேன். போர் முனையிற் கருணாகரன் புன்முறுவலுடன் விளையாடுவது போற் காணப்படுகிறானே தவிர சிறிதாவது சினம் அடைகிறானா? கரும்பை முறிக்கும் கடகளிறெனவே போரைக் கடந்து செல்கிறான்! அந்த ஜெயசிங்கன் அலறி விட்டானே! ஆகா! என்ன போர்! எனினும் என்னுளம் கருணாகரனை வெறுக்கிறது!............எப்படி வெறுக்காம லிருக்க முடியும்? கருணாகரன் வெற்றி யெனிற் குலோத்துங்கன் வெற்றியே!............அங்கும் என் அருமை அத்தான் விக்கிரமாதித்தரே தோல்வி யடைந்தாராம்!........இனி எப்படி நான் இந் நாட்டைக் குலோத்துங்கன் கைப்பற்றாமற் காக்க முடியும்!........ இல்லை. ஏதாவது வழி காணவேண்டும். நல்ல வேளை யாக வீரவேள் சிறையிலிருக்கிறான். அவன் சிறையி லிருப்பது யாருக்குந் தெரியாது. அவன் வெளியில் இருந்தால் நம் வேலை ஒன்றும் நடவாது!........சிறையி லிருப்பதை நம் தந்தை அறிந்தால் யாவும் அழியும்! ........ஏன் என்னுளம் இப்படி யேங்குகிறது?

என்னே அரசாட்சியின் காதல்! மாமனும் மருமக னும் போர் புரிவதாம் நாட்டை நயந்து! மாமனால் மருமகன் போரிற் பொன்றினால், மகள் வாழ்வு மண்ணா வது தானே? ஒருபக்கம் தமக்கை மகன்! ஒரு சார்பில் மருமகன்! அவர்கள் பங்காளிகள்! அவர்கள் போரில் இவர் ஏன் தலையிடவேண்டும்?.......தமக்கை பிள்ளையை அரண்மனையிலேயே வளர்த்து ஆளவும் வகையாற்றலாம்!

பெண்ணை மணந்த மருமகன் பேதுற அவனோடு வினை செய்து வெற்றி பெறலாம்! இன்னும் என்ன நடக்கிறதோ? பார்ப்போம்.

---

## காட்சி 19

**இடம்;** வேங்கியில் அரண்மனை.

**காலம்;** காலை.

வீரராஜேந்திரன், குலோத்துங்கன், விஜயாதித்தன், ஜெயங்கொண்டார் ஆகிய நால்வரும் வீற்றிருக்கின்றனர்.

வீரராஜேந்திரன்: விஜயாதித்தரே! எல்லாம் எவ்வண்ணமோ வெற்றிகரமாகவே விளைந்தன. இனியும் அப்படியே நடக்க இறைவன் அருளெய்துமாக.

விஜயாதித்: இனியும் எனில்?

வீரராஜேந்: இனி நடக்கும் போரிலுமென்றுதானிசைத்தேன்.

விஜயாதித்; இனியும் போரா?

குலோத்; ஆம் சிற்றப்பா! சக்கரக்கோட்ட மண்டலத்தான் தாராவர்ஷன் இறையிறுக்க இசையவில்லையாம்! ஆகையால். அந்த நாட்டின்மேல் போருக்கெழ வேண்டும்.

விஜயாதித்: (மகிழ்வுடன்) நன்று, நான் செல்கிறேன்.

குலோத்: முன் நிகழ்ந்த போருக்குத்தான் நீங்கள் சென்றீர்களே! இப்போருக்கு என்னை அனுப்புங்கள்.

வீரராஜேந் : ஆம். கருணாகரத் தொண்டைமான் மதுராந்தகன் ஆகிய இருவருடன் நீதான் செல்லவேண்டும். உன் சிற்றப்பா உனக்குப் பிரதிநிதியாக இருந்து வேங்கியை ஆளட்டும்.

குலோத் : (மிகவும் மகிழ்ச்சியோடு) என்ன கூறுகிறீர்கள் சிற்றப்பா !

விஜயாதித் : (புன்முறுவலுடன்) உன் அம்மான் கட்டளையை மீற முடியுமா ?

வீரராஜேந் : (நகைத்து) கட்டளையாவது ? வேண்டுகோளன்றோ ?

விஜயாதித் : தங்கள் ஆணைக்கு மறுமொழியில்லை அரசே!

ஜெயங் : அரசர் பெருமான் அடியேனுக்கு இடும் ஆணையென்னவோ ? வில்லும் அம்பும் வாளும் உலாவுமிடத்தில்........

குலோத் : சொல்லும் அன்பும் கேளுமாக உள்ள உமக்கு இடமில்லையென்று எண்ணுகிறீர் ?

ஜெயங் : (புன்முறுவலுடன்) ஆம் அரசே !

வீரராஜேந் : உமக்கேன் வில்லும் அம்பும் வேலும் வாளும்? எமக்குப் பகைவரிருப்பது இயற்கை. உமக்குப் பைகவர் உறுதலுண்டோ ?

ஜெயங் : உண்மையே! இந்த எளிய புலவனால் யாருக்கு என்ன இடையூறு நேரப் போகிறது? நேர்வதாலன்றோ பகை ?

குலோத் : அங்ஙனமன்று புலவரே ! திருவள்ளுவர்,
"வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை"

என்று ஆணையிட்டிருப்பதை ஆராய்வோர் புலவர்களிடம் எவ்விதத்தும் புன்மை புரியார்.

ஜெயங் : என்ன இயம்புவேன் இங்ஙனம் கூறினால்? புலவர்களைப் போற்றுதாரின்றேற் புலவர்களுக்குப் புகழேது? ஆகையால், புலமைக் கொடிபடரக் கொள் கொம்பாகவுள்ள தங்களைப்போன்ற அரசர்களாலேயே எங்கட்குப் பெருமை! விலைமதிப்பற்ற மாணிக்கமேயானாலும் மதிப்பறியார் கையிற்படின் வெறுங்கல்லாகவேதான் காணப்படும்! வள்ளல் அதிகமான் மாண்டபோது ஔவை கூறியதை நினைத்துப் பாருங்கள்!

வீரராஜேந் : என்ன அது?

குலோத் : மிக அரிய பொன்னுரை அது மாமா! நம் புலவர் பெருமானே நவிலட்டும் அதை.

ஜெயங் : வள்ளல் அதிகமான் மாண்புமிக்க போரில் மாண்டான். அவன் பிரிவால் வருந்திய ஔவையார், "அதிகமான் திரு நிறத்தியங்கிய வேல் இரப்போர் கையிற்பட்டதுடன் தேர்ந்த மொழிகளையுடைய புலவர் நாவிலும் பட்டது. ஆகையால் இனிப் பாடுவோரும் பாடுவோருக் கொன்றீவோருமிலர்" என்று கூறினர். இதிலிருந்து புலவர்களுக்கு வள்ளல்கள் இருந்தால்தான் மதிப்பு என்று தெரிகிறது.

வீரராஜேந் : அரசர்கள் எவ்வளவு சிறந்தவர்களாக இருப்பினும் அவர்கள் இசையைப் பரப்பப் புலவர்கள் வேண்டியிருக்கின்றனர். இன்றேற் பயன் என்ன? ஒரு தமிழரசன் தான் பகைவர்களை வெல்லாவிட்டால் தன் நாட்டைப் புலவர்கள் பாடாது விடட்டும் என்கி

ருன். ஆகவே, புலவர் பாடும் புகழுடையோராக இருப்பதுதான் அரசர்களுக்குத் தகுதி. புலவரே! நீர் எங்கள் புகழாக இருக்கிறீர். (புலவர் புன்முறுவல் செய்கிருர்) குலோத்துங்கா! விரைவிற் போர் முயற்சி செய்க.

குலோத் : தங்கள் ஆணைப்படி நடக்கிறேன். என் வேண்டுகோளையும் ஏற்றுக்கொள்ளுங்கள்.

வீரராஜேந் : உன் வேண்டுகோளா? அது என்ன ?

குலோத் : நான் பெயருக்குத்தான் இந் நாட்டவனுக இருக்கிறேன். பிறந்து வளர்ந்தது சோழநாட்டிலே தான். தாங்களே எளியேனுக்குத் தந்தையும் ஆசிரியருமாக அமர்ந்து எறும்பை யானையாக்குவது போலாக்கியுள்ளீர்கள். ஆகையால், நான் மிகவும் நன்றியறிதலுள்ளவனுக நடக்க வேண்டியுள்ளேன்.

வீரராஜேந் : (அன்புடன்) என்ன கூறுகிருய் என் அருமைக் குழந்தாய்! என் மகனைவிடப் பன்மடங்கு மேலாக உன்னை விரும்பி வளர்த்தேன். அதற்குக் காரணம் உன் மேலான குணங்களேயாகும்.

குலோத் : புகழ்ச்சி வேண்டாம் மாமா! நான் கூறவந்தது வேறென்றுமில்லை. தங்களைப் பிரிய வேண்டுமென நினைத்தவுடன் உள்ளத்தில் ஒரே குழப்பமாக உள்ளது. அதற்குக் காரணம் அறியேன். (கண்ணீர் விடுதல்)

வீரராஜேந் : (கண்ணீர் வாரத் தழுவிக்கொண்டு) ஆம். என் அப்பனே! எனக்கும் அவ்வண்ணமே இருக்கிறது! ஆனாலும், வீரர்களாகிய நாம் பிரிவுக்கஞ்சலாமா? எப்போதும் இறப்பென்பது இருக்கிறது! வருந்தாதே. (மற்றிருவரும் கண் கலங்குகின்றனர்.)

குலோத் : எனக்காக ஏதும் அஞ்சேன். தங்கள் உடம்பைக் கவலையுடன் பார்த்துக் கொள்ளவேண்டும். அதற்கு என் நண்பர் ஜெயங்கொண்டாரைத் தங்களுடனிருக்க அருள் புரியவேண்டும்.

வீரராஜேந் : அங்ஙனமே ஆகட்டும்.

ஜெயங் : (எழுந்து) நான் பெற்ற பேறு.

---

## காட்சி 20

**இடம் :** இரட்டபாடியில் ஜெயசிங்கன் அரண்மனையைச் சார்ந்த பொழில்.

**காலம் :** மாலை.

ஜெயசிங்கன் உலாவுகிறான்.

ஜெயசிங் : (தனிமை) அஆ! என்ன மானமிழந்த வாழ்க்கை! "மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்னார் —உயிர் நீப்பர் மானம் வரின்" என்றார் வள்ளுவர்.... இது ஒரு மானக் கேடா? வெற்றியுந் தோல்வியும் இரவும் பகலும் போல மாறி மாறி வரும் என்பார்களே! அரசர்கள் ஒருமுறை தோல்வியடைந்தால் சோர்வடையாமல் மேலும் மேலும் முயல வேண்டுமன்றோ? இன்னொரு முறை பார்ப்போம். (சினத்துடன்) எப்படியும் அக் கருணாகரனை மருளும்படிச் செய்கிறேன். கருணாகரா! தப்பிவிட்டோமென மனப்பால் குடியாதே! கருணாகரன்! கனவிலுங் கருணாகரன்! கனவில் மட்டுமா? நனவிலும் எங்கும் கருணாகரன் தோற்றம்!

எத்துணை முறை போர் செய்யப் புகினும் சரி! எப்படி யாவது கருணாகரக் களையைக் களைவேன்.

இவ்வளவிற்கும் அடிப்படையானது எது? தோல்வி வரினும் வெற்றிவரினுஞ் சோர்விலாது துளையச் செய்வது எது? காதல்! உலகத்தில் இக் காதலின் ஒப்பற்ற செயலை உரைப்பது எப்படி? மலரினும் மெல்லிய வடிவம்! ஆனாற், கல்லினுங் கடிய உள்ளம்! ஒரு பெண்ணின் காதலா நம்மை வெம்மையுறச் செய்வது? பெயரைப் பார்! மதுராந்தகியாம்! மதுராந்தகி! அஆ! என்ன இனிய அழகிய அரிவை! அவளை நினைக்கும் நெஞ்சம் நினையாது வேறொன்றை! அவள்மேற் காதலால் என் உள்ளம் நிறைந்து வழிகிறது. அவள் நினைவு வரின் வேறொரு நினைவு வருவதில்லை. மதுராந்தகி! என்னே உன் இறுமாப்பு! குலோத்துங்கனையே கொழுநனாகக் கொண்டாய்! அவன் உன்னை என்போற் காதலிக்கமாட்டானென்பது உறுதி. நீ நினையாவிடினும் நான் உன்னை நயக்கிறேன்! வியக்கிறேன்! உலகமே இப்படித்தானோ? ஆம். மலர் நம்மை விரும்புகிறதா? ஆனால், நாம் விரும்புகிறோம். மலர் வண்டை விரும்புகிறதா? ஆனால், வண்டு மலரை விரும்புகிறது. நிலவின் இனிய கதிரினை நெஞ்சுற விரும்புகிறோம் நாம். ஆனால், நிலவு நம்மை விரும்புகிறதா? இதுதான் உலகியல்!

மதுரம்-இனிமை. அந்தகம்-குருடு. இனிமையுங் குருடுமே மதுராந்தகம். மதுராந்தகியின் தோற்றம் இனிமை. ஆனால், உள்ளம் இருண்டது. சிறிதேனும் அருளின் ஒளியே அவ்வுள்ளத்தில் அணுகவில்லையே! எனினும், என் உள்ளக்கோயில் உருவமாக நாட்டப்

பெற்ற மதுராந்தகியை எப்படியேனும் குடிகொள்ள உயிர் கொடுப்பேன்!

மதுராந்தகி! உனக்கென என்னால் ஒன்றொன்ருக எடுக்கப்பெற்று அழகாகக் கட்டப்பெற்ற காதல் மாலையைக் காலால் உந்தித் தள்ளுகிருய்! எனினும் அவ்வாறு நீ உந்தி வீசும் பேற்றினையாவது என் மலர்மாலை பெற்றதேயென மகிழ்கிறேன். இனியும் ஒரு முறை முயல்கிறேன்.

---

## காட்சி 21

**இடம்:** சக்கரக் கோட்ட மண்டலத்தைச் சார்ந்த ஒரு காட்டிலுள்ள பாசறை.

**காலம்:** நள்ளிரவு.

குலோத்துங்கன் தன் விடுதியில் உலாவுகிருன்.

குலோத்: (தனிமை) தாராவர்ஷன்! முட்டாள்தனமாகப் போரினைத் தொட்டான். எண்ணற்ற வீரர் மண்ணின் மடிந்தனர்! இனியாவது திறை கொடுக்க வருவானே? வீணிலே இந்த யானைகளும் மெய்யுளம் படைத்த வீரர்களும் வீழ்கின்றனர்! உயிரை வளர்க்கும் பயிர் நிறை விளை புலன்கள் உருத்தெரியாமல் ஒழிகின்றன! நறு நிழலும் உறு சுவைதரு கனிகளும் மணமலர்களும் நிறைந்து கதிரவனொளி யூடறுத்துச் செல்லாத பைம்பொழில்கள் பல நாசமாகின்றன! அன்னங்கள் உறையும் நன்னிற மலர்ப் பொய்கைகள் அழகிழந்தன! மக்களுள்ளம் அமைதியை யிழந்தது! வறுமை மலர்ந்து மர

ணம் கனிகிறது ! அடடா ! போர் புரிவதனுற் புன்மையே தவிர நன்மையில்லை!.......எனினும் என் செய்வது! அந்தப் புல்லியன் இறைப்பொருளை யிறுத்திருந்தா லேன்வருகிறது இப் போர்?.......வெற்றியை விழையும் உள்ளம் படர இடமாவது போர்தானே ! போர்! போர்!! நம் வீரர்களின் மந்திரமிதுவே ! போரென்றுற் போதுமென்கிருர்கள். உணவும் உடையும் உறக்கமும் போர் போரென்றுதான் புகலுகின்றன அவர்களுக்கு!.......துறவிக்குத்தான் உள்ள அமைதி தோன்றவேண்டும். அரசனுக்கு ஆட்சியைப் பரப்புவதில் ஆவல்வேண்டும். மலருக்கு மணமும் கதிரவனுக்கு ஒளியும் திங்களுக்குத் தன்மையும்போல அரசனுக்கு ஆட்சி அழகுதரும். ஆகையாற் பல நாடுகளையும் வெல்வதில் ஆர்வமெனக் குண்டாவதுதான் நன்று. (காவலன் வருகிருன்) ஏன் ?

காவலன் : (வணங்கி) மதுராந்தகர் வந்திருக்கிருர்.

குலோத் : வரச் சொல்.

காவலன் : (வணங்கி) ஆணைப்படி. (செல்கிருன்)

குலோத் : ஏது மதுராந்தகருக்கும் வரவில்லையோ உறக்கம்! (மதுராந்தகர் வர) வாரும் மதுராந்தகரே ! இப்படி அமரும்.

மதுராங் : (வணங்கி) அரசர்பெருமான் வாழ்க! (அமர்ந்து) இந்நேரம் வரை உறக்கமின்றி யிருக்கிறீர்களே! நள்ளிரவாய் விட்டதே !

குலோத் : (புன்முறுவலுடன்) ஒன்றும் இல்லை. நீர் ஏன் உறங்காம லிருக்கிறீர்? (தன் இருக்கையில் அமர்கிருன்)

மதுராந் : உறங்கிக் கொண்டுதான் இருந்தேன். வெளியில் நீர் கழிக்க எழுந்து வந்தேன். தங்கள் விடுதியில் வெளிச்சந் தெரிந்தது. பார்த்துச் செல்லலாமென வந்தேன்.

குலோத் : போரைப்பற்றிய எண்ணந்தான் உறக்கத்தை ஓட்டியது ! போரினல் நாட்டின் அழகு நாசமாகிறதே என்று அடிக்கடி அலமருகிறதென்னகம்.

மதுராந் : (நகைத்து) தங்கள் அருள் நிறைந்த உள்ளம் அப்படித்தான் நினைக்கும்! போர் முடிந்தவுடன் சீர் பெறும் இந் நாடு. துறவிகளுக்குத் தோன்றவேண்டிய அறவுள்ளம் அரசர்களுக்காகாது என்பது எளியேனெண்ணம். அடங்காதாரை அடக்கி, ஆளுமிடத்தைப் பெருக்கியே வாழவேண்டும் அரசர்கள்.

குலோத் : உண்மையே! நானும் அப்படித்தான் நினைத்தேன். எனினும் அடிக்கடி ஏனே இந்நினைவே உண்டாகிறது! மதுராந்தகரே! ஒன்று உம்மைக் கேட்க வேண்டும். அடிக்கடி என் இடத்தோள் துடிக்கிறது இன்று மாலையிலிருந்து ! அது ஏன் ?

மதுராந் : (முகம் வாடி) இது நல்லதில்லை யென்பார்கள் அரசே! ஆனல், நம் போரின் போக்கு வெற்றியைத் தான் அறிவிக்கிறது. வேறு ஏதாவது........

குலோத் : வேறு ஏதாவதுதான் நேரவேண்டும். அது கங்கைகொண்ட சோழபுரத்திலா, வேங்கியிலாஎன்பது தான் விளங்கவேண்டும்.

மதுராந் : அடியேன் விண்ணப்பமென்னவெனில் எது வருமோ எனப் பின் வருவதை யெண்ணி வருந்தலாகா

தென்பதுதான். இந்த எண்ணம் நம் வினைமுயற்சிக் கிடையூறுதானே ஒழிய வேறு நன்மை விளைவிக்காது. சென்று வருகிறேன். தங்கள் துயில் கெடுகிறது.

குலோத் : உண்மையே உரைத்தீர். சென்று வாரும். (மதுராந்தகன் செல்கிறான்) கங்கைகொண்ட சோழபுர நினைவு வரிற் கவின் நிறைந்த பூங்கொடியாம் மதுராந்தகியின் நினைவு வருகிறது. சோழநாட்டுப் பொய்கையிலே தோன்றிய தூய தனித் தாமரை மலர் அத் தோகையாள். என் உள்ளத்தை இன்ப வடிவாக்கும் இனிய அமுதம் இவ் வேந்திழையாள், என் வாழ்க்கை வானத்திலே அழகிய ஒளி வீசும் 'பால்வீதி' அப் பாவையாள் ! அவளையே என் வாழ்வின் துணையாக ஊழ்வினை அமைப்பதாக.

---

## காட்சி 22

**இடம் :** கங்கைகொண்ட சோழபுரம், அதிராஜேந்திரன் அரண்மனையில் ஓர் அறை.

**காலம் :** இரவு.

அதிராஜேந்திரன் துக்க உடையுடன் நிற்கிறான். விளக்கு ஒன்று மங்கலாக எரிகிறது.

அதிராஜேந் : (துக்கத்துடன் தனக்குத் தானே) என்ன வாழ்விது! 'வாழ்வாவது மாயம்' என்றனர் மதி நிறைந்தோர். என் அருமைத் தந்தையார்—வீரர் தலைவர்—சோழர்பெருமான்—இப் பொய்யுடலை விட்டு நீங்கி வாழ்வை மாயம் என்று காட்டினர். யானோ, சோழர்

குடியிற் பிறந்தும் தோன்றலாவதற்குரிய தூய வினையின்றி வாழ்வை மாயம் என வரைந்தறிந்தேன்! இதுவரை இவ் வாட்சிக்காக எண்ணிச் செய்தவை என்ன! இப்போது இயலும் மாறுதல் என்ன!

சோழர் குடியிற் றோன்றினேன். ஆளுந் திறனின்றி ஆட்சியை அந்தச் சாளுக்கியனுக் காக்கிவிட்டு அடிமை வாழ்வில் அமையலானேன்........இது எனக்குமட்டுமா இழிவு! இதுவரையிற் சோழர்கள் அடைந்த இணையற்ற புகழுக்கெல்லாம் சாவுமணியன்றோ? கூடாது, இம்முறை பெருந்தவறு.

என்ன கூறுகிறேன்? இறக்குந் தருணத்தில் எந்தை கூறியதை எங்ஙனம் இயற்றாமல் இருப்பேன்? "தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை"........எப்படிச் செய்வேன்........எந்தையே! என்னசெய்து விட்டீர்கள்! (உலாவுகிறான்.)

ஆம் அவர் செய்தது சரிதானே! முற்றிலுஞ் சரியே! (நிற்கிறான்) இந் நாட்டை ஆளத் தகுதியில்லாதவனா? தகுதியில்லாதவன் தான்! எப்படியாயினும் நானே எப்படிக் குலோத்துங்கனுக்கு முடிசூட்டுவேன்? (உலாவுகிறான் விளக்கைத் தூண்டுகிறான்) விளக்கே! உன்னிடம் நெய் இருக்குமளவுந்தானே எரிவாய்! நெய் வற்றினால்? போகட்டும்....இந்த அறையின் இருட்டை மட்டும் நீக்கினாயே ஒழிய என் உள்ள இருட்டை ஒழிக்கவில்லையே!........நீ எப்படி இந்தக் காற்றினால் ஆடுகிறாயோ அப்படியே நான் தீவினையால் ஆடுகிறேன்! ஆனால், என்னை ஆட்டும் தீவினை மிகப் பெரிது! சூறாவளி! என்னை அழித்துவிடும்!

இதுதான் சரி! குலோத்துங்கன் மதுராந்தகியை மணந்து நன்றாக இந் நாட்டை ஆளட்டும். முழுமனத்துடன் நான் அவனை வாழ்த்துகிறேன். ஆனால், அவன் முடிசூடும்போது உடனிருக்க என்னுள்ளம் ஒப்பவில்லை. அதற்குத் துணை புரியும் உற்ற நண்பன் (உறையிலிருந்து ஒரு கட்டாரியை எடுக்கிறான்) இக் கட்டாரியே!........ ஆ! என் அருமைக் கட்டாரியே! நீயே உற்ற நண்பன்! குடியும் சூதும் கொடியோர் நட்புங் கொண்டிருந்தேனானாலும் நான் உன் தலைவன்! ஆகையால், என்னைக் கோழையாக்காமல் இத் தீய வுடலிலிருந்து தூய உயிரை எடுத்துவிடு. இறைவா! என் மறவினைகளை மன்னிப்பாய்! (கட்டாரியால் குத்திக் கொள்கிறான். இதைத் தற்செயலாய் அங்கு வந்த ஜெயங்கொண்டார் காண்கிறார். ஓடிவந்து அவனைத் தாங்கிக் கீழே விடுகிறார்; கட்டாரியைப் பிடுங்குகிறார்.)

ஜெயங் : (துக்கத்துடன்) என்ன செய்துவிட்டீர்! தற்கொலை பாவமன்றோ? அடடா! இதையா நான் காணவேண்டும்! (கண்ணீர் விடல்)

அதிராஜேந் : (புன்முறுவலுடன்) கவியரசே! கட்டாரியைப் பிடுங்கி விட்டதனால் பிழைத்துக் கொள்ளமாட்டேன். குலோத்துங்கனுக்கு முடிசூட்டும் போது என் உளம் நிறைந்த ஆசியைக் கூறுங்கள். என்னை மன்னிக்கச் சொல்லுங்கள். நீர் முன்னொருநாள் குலோத்துங்கனே இந்நாட்டை ஆள்வானெனக் கூறினீர்! (புலவர் விம்முகிறார்.) அதை நான் புதர் மறைவிலிருந்து கேட்டேன். ஆகையால், குலோத்துங்கனைக் கொல்ல இருமுறை........அவன் அறிவான்....மன்னிப்பான்........ வீரவேள்....பாதாள அறையில்....அவன் நல்லவன்....

குற்றம்....அற்றவன்....விடுவியுங்கள். (தலைசாய்கிறது. விளக்கும் காற்றில் அணைகிறது.)

ஜெயங்கொண் : (துக்கத்துடன்) ஐயோ! தீயவரென நினைக்கப்பட்ட அதிராஜேந்திரர் தூயவரானார்! வீரரும் ஆனார்! அரசரும் பிரிந்தார்! இவரும் பிரிந்தார்! இருவர் ஆவியும் பிரிந்தன! சோழர் மரபோ மெலிந்தது!........ ........தமிழ் நாடே! உன்நிலை என்ன? (விம்முகிறார்) சோழர் பெருமக்கள் முடிமன்னராய்த் தாம் ஆண்ட நின்னைப் பிறர் ஆளவிட்டு வாளாச் சென்றனர்! என்னே வாழ்வு! காலச் சுழலின் போக்குக் கருத்துக் கெட்டவில்லையே!

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"—என்பதைக் காண்கிறேன் இதோ!

---

## காட்சி 23

**இடம் :** கங்கை கொண்ட சோழபுரம்: மதுராந்தகியின் அந்தப்புரம்.

**காலம் :** காலை.

மதுராந்தகி துக்க உடையுடன் வீற்றிருக்கிறாள். ஜெயங்கொண்டார் சிந்தனையுடன் அமர்ந்திருக்கிறார்.

மதுராந் : (துக்கத்துடன்) எதிர்பாராத இடுக்கண்கள்! எனக்கு அன்னையும் அப்பனும் ஆகி ஆதரித்த சிற்றப்பா இறந்தார்!........சோழர் குலத்தூணின் தொடர்பை இந்நாடு இழந்தது! என் அண்ணாவும் நான் புண்ணுகும் வண்ணம் பொன்றினார்.

ஜெயங்: சென்றதை நினைந்து தியங்குவதேன் அம்மா! தங்கள் தமயனார் தம்பால் இருந்த குறைகளெல்லாம் நீங்க வீரவாழ்வு பெற்றார். தந்தையார் தம் வேலையை முடித்துக் கொண்டு தளராத பேரின்ப வாழ்வைப் பெற்றார். எத்தனையோ அரசர்கள் இவ்வுலகை ஆண்டனர்! கடற்கரை மணலை யெண்ணினும் அக் காவலர்களை எண்ணமுடியாது! அந்த அரசர்களெல்லாம் தாம் ஆண்ட நிலவுலகத்தை மற்றோரிடம் விட்டுவிட்டே சென்றனர்! தங்கள் வீரத் தந்தையார் ஊனுடம்பு வீழினும் புகழுடம்பு பொன்றாமல் என்றும் மக்களுள்ளத்தில் நின்று நிலவுவார். தாங்களும் அவ்வாறு நிலவற்குரிய நிலைபெற்ற அறங்களைச் செய்து சோழர் மரபின் தூய்மையைக் காக்கவேண்டுமே யொழிய வருந்துவதால் வருவதென்ன?

மதுராங்: அத்தானும் அருகிலில்லையே!

ஜெயங்: அத்தான் தாராவர்ஷனை வெற்றிகொண்டதாக இப்போது ஒரு வீரன் வந்து சொன்னான். தங்கள் ஆணைப்படி வீரவேளைச் சிறையிலிருந்து விடுவித்துவிட்டேன். அவர் தம் வீட்டிற்குச் சென்று வருவதாக விளம்பினார். அவர் வந்ததும் சக்கரக் கோட்ட மண்டலத்திற்கு அனுப்புவோம். உடனே வேறெங்கும் போருக்குச் செல்லாமல் வந்து விடுவார். அவர் வந்தால் தங்கள் கவலை தணிந்து விடும். (காவலன் வருகிறான்) என்ன அப்பா!

காவலன்: (வணங்கி) வீரவேள் வந்திருக்கிறார்.

ஜெயங்: அழைத்து வா (செல்கிறான் வீரவேள் வருகிறான்)

மதுராங் : வாரும் ஐயா! இப்படி அமரும். என் சிற்றப்பாவும் அண்ணவும் இந்த ஆட்சியை நீத்துப் பேரின்பத்தை அடைந்தனர். நம்புலவர் பெருமான் நவில்வதைக் கேட்டுக் கொண்டு என் அத்தானிடம் போய் வாரும்.

வீரவேள் : (அமர்ந்து துக்கத்துடன்) தங்கள் ஆணைப்படி அரசியே! எங்களைத் தம் அருமைக் குழந்தையென ஆதரித்து வந்த பேரரசர்—கல்விக் கடல்—வீரர் தலைவர்—எங்களை வருந்தவிட்டுப் போனது மாளா வருத்தமாக இருக்கிறது. இனி நாங்கள் எங்ஙனம் வாழ்வோம்? எங்கள் நலமறிந்துதவும் நல்ல வள்ளலை இழந்தோம்! (கண்ணீர் விடுதல்)

ஜெயங் : வருந்தாதீர் ஐயா! துக்கத்தைப் பொறுத்துக் கொண்டு துணிவுடன் சக்கரக் கோட்ட மண்டலம் வரையிற் சென்று குலோத்துங்கரிடம் அரசியார் அளிக்கும் ஓலையை அளித்து அவர் வருந்தாவகை தேற்றிப் போரை நிறுத்தி அழைத்துவரவேண்டுவது தங்கள் கடமை.

வீரவேள் : அங்ஙனமே செய்கிறேன். ஆ! குலோத்துங்கர் எப்படித் தம் அம்மான் பிரிவை ஆற்றுவாரோ! (மதுராந்தகி ஓலையை அளிக்கிறாள். வீரவேள் வாங்கிக் கொண்டு வணங்கிச் செல்கிறான்.)

ஜெயங் : அம்மையே! விசயாதித்தருக்கு அவரை வரும் வண்ணம் வேண்டி ஒரு ஓலை எழுத வேண்டும். இரட்டபாடிக்கும் இந்நிகழ்ச்சியை அறிவித்தல் கடமையென எண்ணுகிறேன்.

மதுராந் : அங்ஙனமே செய்யுங்கள். குடிகளுக்கும் பறை யறைந்து தெரிவிக்கச் செய்யுங்கள். இனி என் அத்தானே அரசரெனபதைச் சிற்றரசர்களுக்குந் தெரிவி யுங்கள்.

ஜெயங் : அப்படியே ஆகட்டும்.

---

## காட்சி 24

**இடம்** . கங்கை கொண்ட சோழபுரம்: மதுராந்தகியின் அந்தப்புரம்.

**காலம்** : நடுப்பகல்.

மதுராந்தகி ஓர் பீடத்தில் அமர்ந்திருக்கிறாள். வேலைக் காரி வருகிறாள்.

மதுராந் : என்னடி?

வேலைக் : யாரோ ஒரு துறவி வந்திருக்கிறார் அம்மா!

மதுராந் : அழைத்து வா. (வேலைக்காரி சென்று அழைத்து வருகிறாள்) அடிகள் வரவேண்டும் (வணங்கு கிறாள். துறவி ஆசி கூறுகிறார்) இந்தப் பீடத்தில் அம ருங்கள். தாங்கள் யாரோ?

துறவி : எமக்கென்று ஊரேது? நாடேது? "யாதும் ஊரே! யாவருங் கேளிர்!" துறவு என்பது தமக்கென ஒன்றையும் வைத்துக் கொள்ளாமையே. என் சுற்றம், என் பொருள், என் இடம் என நினையாமல் தனக் குரிய எல்லாவற்றையும் பிறர்க்குரிமை யாக்குவோனே

துறவி. எல்லா வுயிரையும் தன்னுயிர்போல எண்ணு வோனே துறவி. பற்றை நீக்குதலென்பது எல்லோரை யும் வெறுத்துக் காட்டுக்குச் சென்று கடுந்தவம் புரிவ தென்பதன்று. ஒருயிரையும் விரும்பாதவன் தன்னை மட்டும் விரும்புதல் தன்னலமேயாகும். தன்னலமுடை யோன் எங்ஙனம் தவம்புரிந்து தளராதபேரின்பத்தை அடையமுடியும் ?

மதுராங்: 'பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்' என்கிறார் களே?

துறவி: தன்னலப் பற்றையே பற்றெனப் பகர்வர். வருந் தும் பிறவுயிர்க்கு மனமிரங்கி யுதவாதவன் இறைவ னருளை யெக்காலும் பெறமுடியாது. தன்னலமுடை யோன் பிறர் நலம் பேணுதல் இயலாதென்பதற்குத் தான் பற்றறுக்குமாறு பகர்ந்தனர் பெரியோர்.

மதுராங்: உண்மையே உரைத்தீர்கள். தாங்கள் வந்த வேலை யென்னவென அறிவிக்க வேண்டுகிறேன்.

துறவி: வாளா வந்தேன். நீ இந்நாட்டு இளவரசியென இசைத்தனர்.

மதுராங்: ஆம் அடிகளே!

துறவி: நாம் குலோத்துங்கரை அறிவோம். அவரைத் தேடியே இங்குவந்தோம். பாவம்! அவர்தம் தந்தை யார் அமரருலகை அடைந்தார். இந் நாட்டரசரும் எம்மை அறிவார். அவரும் வானுலகை யடைந்தா ராம்! வீரர் திலகம் வீரராஜேந்திரர் ! குலோத்துங்கர் எங்கோ போருக்குச் சென்றனரென இங்குவந்த பின்

னர் அறிந்தோம். அவருக்குப் போர்ப்பித்தே மிகுதியு முண்டு.

மதுராந்: ஆடவர்கட்குப் போர் விருப்பமே சீர்தரும் பெருமை. என் அத்தான் அவ்வாறிருப்பது மகிழ்ச் சியை யளிக்கிறது.

துறவி: நீ உலக மறியாத பெண். ஆகவே, இதைச் சிறப் பாகக் கூறுகிறாய். வீரமெனினும், கலையெனினும் விருப்பமுடன் அவற்றிடையே மூழ்கிக் கிடப்போர் சாலச் சிறந்தவரே யானாலும் அவர்கட்கு வேறொன்றி லும் விருப்பமே யிராது. அவர்களைக் காதலிக்கும் பெண்களும் வாளா வருந்த நேரும். தங்களைத் தங்கள் கணவர் விரும்பவில்லையேயென வெதும்புவர். குலோத் துங்கர் இதற்கு விலக்கானவரல்லர். பாவம்! இவர்கள் எங்ஙனம் மகளிர் அழகில் மனஞ்சென்று காதலிப்பர்?

மதுராந்: (முகம் வாடி) தாங்கள் கூறுவதும் உண்மையா யிருக்கலாம். எனினும், என் அத்தான் அத்தகைய ரல்லர் என நான் அறிவேன்.

துறவி: (நகைத்து) "பெண்ணறி வென்பது பெரும் பேதமைத்தே" என்பதை உன்னிடம் உண்மையாகக் காண்கிறேன். நீ அவரைக் காதலித்திருக்கிறாய் போலும்! அவர் போரைத்தான் காதலிப்பாரே ஒழிய உன்னைக் காதலிப்பதென்பது உறுது.

மதுராந்: தங்கள் கூற்றுப் பொருத்தமெனவே பேச்சள விற் பொருந்தினும் உலகியலின் உண்மை அங்ஙன மில்லை. அறிவிற் சிறந்த பெண்கள் வீரரையே காத

லித்து மகிழ்வுடன் வாழ்கின்றனர். மேலும், தாங்கள் துறவி!

துறவி: நான் துறவியாய்த்தான் இப்போது உள்ளேன். எனினும், என் வரலாறு வேறு!

மதுராங்: (ஆவலுடன்) கூறுங்கள்.

துறவி: என் கூற்றை நம்புவாயோ?

மதுராங்: நீங்கள் கூறிய பிறகுதானே அது தெரியும்?

துறவி: அதைப் பிறகு கூறுகிறேன். அதிராஜேந்திரர் யார்?

மதுராங்: என் தமயனார்.

துறவி: அவருக்கு உன்னைப் பற்றிய உரிமை யுண்டன்றோ?

மதுராங்: உடன்பிறந்தாருக்குரிய உரிமை யுண்டு.

துறவி: அவர் உன்னை ஒருவருக்குக் கொடுக்க விரும்பினரா?

மதுராங்: விரும்பினர்.

துறவி: யாருக்கோ?

மதுராங்: யாருக்காயினுமென்ன? மணம்புரிந்து கொள்வது மங்கையரின் மனத்தைப் பொறுத்தது.

துறவி: பிடிகொடாமற் பேசுகிறாய். பேதமையென்பது மாதர்க் கணிகலாமாயிருக்க அவர்கள் காதலரைத் தேர்ந்தெடுப்ப தெங்ஙனம்?

மதுராந்: காதலின் நேர்மையைக் காணீர் போலும்? அது ஊழின் வழியே செல்லும். காதலுக்குக் கண்ணில்லை. அதற்கு மாறாக நடப்பது மாண்பாகாது.

துறவி: நன்று கூறினை! ஆடவருக்கும் இது பொருந்துமன்றோ?

மதுராந்: (சிந்தனையுடன்) பொருந்துமென்றுதான் நினைக்கிறேன்.

துறவி: அப்படிக் கூறு, மதுராந்தகி! (துறவிவேடத்தை நீக்கி) இப்போது நான் யாரென்று நவில்கிறேன். நான்தான் ஜெயசிங்கன். உன்னை முழுமனத்துடன் காதலிப்பவன். (மதுராந்தகி அச்சத்துடன் எழுந்து வெளியே நோக்குகிறாள்) அஞ்சவேண்டாம் அரசியே! நீ கூறிய காதலின் போக்கினால் கலங்கி நிற்கிறேன். உன் தமயனிடம் பலமுறை வேண்டிக் கேட்கும்படி பகர்ந்தேன். நீ மறுப்பதாகவே அவன் கூறினான். இப்போது அவன் சோழர் மரபிற்குக் களங்கமில்லாமல் வீர வாழ்வு பெற்றான். இது என் பகைவர் நாடு. நீ என் பகைவன் மகள். எனினும், என் உள்ளம் உன்னைக் காதலிக்கிறது.

மதுராந்: (சினத்துடன்) என்ன துணிவு உமக்கு? என்னை மற்றைப் பேதைப் பெண்களைப்போல் மதித்துக் காதல் மொழியாற் கனிவுசெய்ய வந்தீரோ? போதும்! இனி எழுந்து செல்லும். செல்லாவிட்டாற் பொல்லாங்கு நேரும்.

ஜெயசிங்: என்ன செய்வாய்? சிறைப்படுத்துவாய். செய்துகொள்! என் உள்ளத்தை முன்பே சிறைப்

படுத்திவிட்டாய்! இப்போது இப்புல்லிய உடல்தானே சிறையுறும்! சற்று முன் நீ கூறிய காதலைப் பற்றி இப்போது பேசமாட்டாயா?

மதுராங்: அதை முன்பே கூறிவிட்டேன். இனி உம்முடன் ஒரு மொழியும் உரையேன். பொற்புடைய மங்கையரின் கற்பைப் பற்றி நீர் அறியீர் போலும்! அவர்கள் தாம் காதலித்தவரையே மணப்பர்; அவரையே தெய்வமென அமைத்துக்கொள்வர்.

ஜெயசிங்: காதலிக்கப்பட்டவர் காதலியாவிட்டால்?

மதுராங்: (வெறுப்புடன்) காதல் கைவராவிடிற் சாதலே மேற்கொள்வர். உள்ளத்திலே ஒருவர்க்கே யிடம்!

ஜெயசிங்: எனக்கும் அதே நிலைதானே? காரிகையே! நின் உள்ளத்திற் கனிவென்பது கிடையாதா? ஒருவன் உன்னைக் காதலித்துக் கைகூடாமல் இறப்பது சிறப்பா?

மதுராங்: விளக்கில் வந்து விழும் விட்டிலைக் கண்டு விளக்கு இரக்கங் காட்டி என்ன பயன்? ஜெயசிங்கரே! என் கருத்தை நன்ருய்க் கேட்டுக்கொள்ளும். என் அத்தானும் நானும் இளமை முதற் பழகினேம். ஒன்ருய் உண்டு வளர்ந்தோம். அவர் வேறு நான் வேறு ஆகாமல் ஒருயிர் ஈருடலாகப் பழகிவிட்டோம். என் உள்ள மலரில் அவரையே இருத்தி வழிபட்டு வருகிறேன். நீரும் நேர்மை யுடையவராளுல் என் காதலுக்கு இடையூறு செய்யாமல் விலகுவதே ஏற்புடைத்தாகும்.

ஜெயசிங்: நீ முன்னேயே காதலின் போக்கைப் பற்றிக் கூறிவிட்டாய். நான் உன்னை அடைவதானல் இப்போ

தாயினும் எப்போதாயினும் வலிந்துகொண்டு சென்று இரட்டபாடியில் சிறை வைத்து வசப்படுத்த முடியும். ஆனால், உனக்கு எவ்வித களங்கத்தையும் உண்டாக்க என் கருத்துச் செல்லாது. ஏனெனில், நான் உன்னைக் காதலிக்கிறேன். தன்னாற் காதலிக்கப்படும் பொருள் உயர்ந்ததாகவே இருக்கவேண்டுமென்று தக்கார் நினைவது இயற்கை. (கண்களில் நீர் ததும்ப) நீ விரும்பியவாறே நீ காதலித்தவனையே மணந்து கவினுடன் வாழ்வாயாக. என்னாற் காதலிக்கப்பெற்ற நீ எவ்வித இடையூறுமின்றி இருக்க என்னாலியன்றவற்றைச் செய்வேன். எப்போதாவது இடையூறு நேர்ந்தால் எனக்கு அறிவிப்பாயாக. இனி என் வாழ்வில் வேறொரு காதல் விளையாது. சென்று வருகிறேன். (துறவி வேடத்தை மறுபடியும் புனைந்துகொண்டு செல்கிறான்).

மதுராந்: (கண்ணீர் வர) இறைவா! இதுவோ நின் சோதனை? பாவம்! ஜெயசிங்கருடைய வாழ்வு என்னால் இடியுண்டதே! இப்பழி என்னைச் சாராதிருப்பதாக!

---

## காட்சி 25

**இடம்:** சக்கரக் கோட்ட மண்டலத்திற் பாசறையில் குலோத்துங்கன் விடுதி.

**காலம்:** மாலை.

குலோத்துங்கன் உலாவுகிறான்.

குலோத் : (தனியே) கங்கைகொண்ட சோழபுரம் போன வீரனைக் காணேமேயின்னும்! உள்ளங் கலங்குவது ஏன்? தாராவர்ஷனை வெற்றிகொண்டோம். மேலும் வெற்றியை அடையத்தகுந்த நிலையே நம் வீரப் படையிற் காணப்படுகிறது. அப்படியிருக்க ஏன் இக்கலக்கம்?.... கனவும் ஒன்றும் நன்ருயில்லையே! (காவலன் வருகிருன்) ஏன்?

காவலன் : (வணங்கி) அரசே! கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து தாங்கள் அனுப்பிய வீரனுடன் மற்றெருருவரும் வந்திருக்கிருர்.

குலோத் : வரச்சொல். (அவன் வணங்கிச் செல்கிருன்.) யாராயிருக்கலாம்? (வீரவேளும் வீரனும் வருகின்றனர்) ஓ! வீரவேளா! வாரும் ஐயா! இப்படி அமரும். ஏன் ஒருவாறு வாட்டமுற்றிருக்கிறீர்?

வீரவேள் : (துக்கத்துடன்) இதைப் படியுங்கள் (ஒரு ஓலையை நீட்டுகிருன்).

குலோத் : (நடுக்கத்துடன் வாங்கிப் பிரித்துக்கொண்டே) என்னவென்று தாங்களே கூறுங்கள்.

வீரவேள் : (கண்ணீர் கலங்க) தங்கள் அம்மான் நம்மை விட்டுப் பிரிந்தார் அரசே!

குலோத் : ஐயோ! (மூர்ச்சிக்கிருன். வீரவேளும் வீரனும் தாங்கிப் பிடிக்கிருர்கள். மூர்ச்சை தெளிவிக்கிருர்கள்.)

குலோத் : (தெளிந்து கண்களில் நீர் வடிய) அஆ! சோழர் பெருமான் மறைவதா? வீரம் மறைவதா? அந்தகனை அந்தக் கொடிய காலன் விளைவுக்குக் காரணமான விதையைத் தின்பதுபோல் வீரர் திலகத்தைப் பறித்

தான்! வீரச் சுவை போயிற்றே! வீரப் போர் வீழ்ந்ததே! கனவிலும் கண்டலறிக்கொண்டிருந்த அந்த எதிரிகள் இனி நனவிலும் நன்ருய் உலாவுவார்கள்!.... ....என் அருமை அம்மான்! என்னை வளர்த்துக் கலை பயிற்றி வீரனுக்கிவிட்ட பெரிய வள்ளல்! (விம்முகிருன்) எங்ஙனம் ஆறுவேன்? அவரை அருகிலிருந்து பார்க்கவும் இயலாமற் பிரிந்தகன்று வந்துவிட்டேனே! (விம்முதல்) என்ன போர் வேண்டியிருக்கிறது! உற்ருரையும் உடனிருந்து காண முடியாத உதவாக்கரை உனுத்தனுனேனே! (விம்முகிருன்.)

வீரவேள்: (குலோத்துங்கனைத் தழுவிக்கொண்டு) வருந்தாதீர்கள்! நம் அரசர் பெருமான் தம்வேலையைமுடித்துக் கொண்டு போய்விட்டார். நாமும் அப்படித்தானே? அவர் பிரிவுக்கு எவ்வளவு காலம் வருந்தினும் ஏற்கும். எனினும் என்ன நலன் வரும்? அவர் திரும்பி வரப் போவதில்லையே? வீரர்கள் இதற்கு வருந்தலாமா? தங்கள் அம்மான் மகளார் அளித்த ஓலையைப் பாருங்கள். அதிராஜேந்திரரும் தற்கொலை செய்துகொண்டார்.

குலோத்: (வியப்புடன்) என்?

வீரவேள்: அரசர் பெருமான் சோழநாட்டைத் தங்களிடம் ஒப்புவிக்கும்படிக் கூறி யுயிர் துறந்தனர். அவர் சொல்லை மீறவும் ஆகாமல் ஆட்சியைத் தங்களிடம் ஆக்கவும் ஆகாமல் தற்கொலை செய்துகொண்டார்.

குலோத்: (இரக்கத்துடன்) ஐயோ பாவம்! எனக்கு இது தெரிந்திருந்தால் அவனையே ஆள வகைசெய்து மிருப்

பேன். ஆட்சி எனக்கு வந்துவிடும் போலும் என எண்ணி எத்துணைக் கொடிய இடையூறுகள் செய்தனன் எனக்கு! இறுதியில் இப்படியா தற்கொலைசெய்து கொள்வது? கமலை யின்றேல் அப்போதே நான் நஞ்சால் நமனுலகை நாடியிருப்பேன்!

வீரவேள்: (பணிவுடன்) அனைத்தையும் அறிவேன். அடியேனும் அவர்களுடன் முதலிலமைந்திருந்தேன். பழி செய்ய நினைத்தனர். வழி விலகி வந்துவிட்டேன். என்னைச் சிறைப்படுத்தினர். இப்போதுதான் வெளி வந்தேன். என் பிழைகளை மன்னிக்க வேண்டும். (வணங்குதல்).

குலோத்: வருந்தாதீர் ஐயா! எல்லாம் ஊழ்வினையே! அவனசையாமல் அணுவும் அசையாது. (ஓலையைப் படிக்கிறான்) போரை நிறுத்திவிட்டுப் புறப்படவேண்டியதுதான். கருணாகரரிடம் அதற்குரிய முயற்சிகளை ஆற்றச் சொல்கிறேன்.

வீரவேள்: அதுதான் நன்று. வருவன வரட்டும் என்று துணியவே வேண்டும். அதிகனும் அன்றே நாட்டை விட்டு நழுவிவிட்டான்.

குலோத்: அப்படியா? அதிகனாற்றான் அதிராஜேந்திரன் கெட்டான். போகட்டும்! இனி ஏன் அப் பேச்சு?

## காட்சி 26

**இடம் :** கங்கை கொண்ட சோழபுரத்தில் அரண்மனைப் பூம் பொழில்.

**காலம் :** மாலை.

குலோத்துங்கன் ஒரு செடி மறைவிற் பசும் புற் றரையிற் படுத்திருப்பதை அறியாத மதுராந்தகி அங் குள்ள மேடை மீது வந்து அமர்கிருள்.

மதுராந் : (தனக்குத்தானே) 'காதலுக்குக் கண்ணில்லை' யென்பது கருத்தறிந்த உண்மைமொழி. என் சிற்றப் பாவும் அண்ணுவும் மறைந்து இன்னும் ஒரு திங்களே னும் ஓடவில்லை! இதற்குள் அது எங்கே எங்கேயென வந்துவிட்டதே! என் காதலர் வேங்கி நாட்டிற் கேகி யதிலிருந்து சுட்டது போதாதெனச் சூழ்ந்தது இப் போதும்! இக்காதலின் செயலை ஒன்றும் எண்ணத் திற் கெட்டுவதில்லை. அவரைக் காணுதபோது கொந் தளிக்கும். கொடிய நெருப்பெனச் சுடும். கண்ட வுடனே நாணத்தின் பின்னே மறைந்துகொள்ளும். வேறு எவற்றைப் பேசினுலுங் காதற் பேச்சே காண முடியாது. காணுதபோது சுடும்; கண்டாற் குளிர்ந் திருக்கும். இந்தக் காதலுக்கு இத்தகைய இடங் கொடுப்பது எது? உள்ளந்தான்.

இந்த உள்ளமும் எனக்கிப்போது எதிரி! 'தாமு டைய நெஞ்சந் துணையல் வழி' என்ன செய்ய வியலும்? அம்மம்மா! உட்பகைவெளிப்பகையைவிட உறக்கொடிது! இந்த உள்ளம் என்னோடு இல்லாமல் அவரோடு வேங்கி நாட்டிற்குச் சென்றது. அவர் வருந்தும்போது வருந்தி

யது; மகிழும்போது மகிழ்ந்தது; போர்க்களத்திலே பகைவர் படையைத் தாக்கும்போது ஊக்க மூட்டியது; அம்பிலும் வேலிலும் வாளிலும் நுழைந்து நுழைந்து அவருடன் சென்றது; அவர்மேற் படும் புண்களுக்கு மருந்திட்டது!........இவ்வளவும் இயற்றுமிவ்வேழையுளம் என்னை எண்ணியதா? அவர் நிலையை அறிவித்ததா? அவர் என்னை நினைப்பதை அழகாக அமர்ந்துரைக்கிறதா? இத்தகைய உள்ளத்தைத் துணையாகப் பெற்ற நான் மகிழ்வுடன் வாழ்வதெப்படி?

குலோத்துங்கன்; (செடி மறைவிலிருந்து எதிரில் வந்து) ஆமாம் மதுராந்தகி! (மதுராந்தகி நாணத்துடன் எழுந்து நிற்கிருள்) நீ கூறியது உண்மையே. என் உள்ளமும் என்னை அப்படியே அல்லற் படுத்துகிறது. வெளிப்பகைவரை யெல்லாம் புறங்காட்டி யோடச் செய்த நான் இவ்வுட்பகையை வெல்ல வல்லமையின்றி மயங்குகிறேன்.

மதுராங்: (கடைக்கண்ணுற் பார்த்துக்கொண்டே) நீங்களா உள்ளத்தை வெல்ல முடியாமல் மயங்குகிறீர்கள்! பொய்ம்மொழி யேனே? என்னை நினைக்கவாவது நேரமிருந்ததா தங்களுக்கு?

குலோத்: (அவள் கையைப் பற்றி) என்ன கூறினை? என் அப்பாவும் மாமாவும் இறந்த துக்கத்தின்போதும் உன்னை மறந்திலேனே! மேலும், மறந்தா லன்றோ நினைப்பது?

மதுராங்: (புன்முறுவலுடன்) பொய்! கற்ற கலையின் சிறப்பைக் காட்டிப் பேசுகிறீர்கள் போலும்!

குலோத்: பொய்யா? உண்மை யெனவுனக் குணர்த்து வுறுவழி யோர்கிலேன்! நீ எப்படி நினைத்தாலும் எங்ஙனம் தடுக்க வியலும்? ஆனால் போர்க்களத்திலே வீரர்களின் வாள் வீச்சிலும் வேல் வீச்சிலும் உன் கடைக்கண் வீச்சையே கண்டேன். வில் வளைவிலே உன் புருவத்தைக் கண்டேன். எங்கு நோக்கினும் வீரகொற்றவையாக நீயே என் கண்களுக்குத் தோன்றி வெற்றியைத் தந்தாய்.

மதுராங்: (முகத்தை ஒருபுறந் திருப்பிக்கொண்டு) போதும் புகழ்ச்சி! இம்மாதிரி புகழ்ந்து பேசத் தங்களுக்கு வெட்கமில்லையா? இப்போது கூறியது உண்மையானால் என்னை விட்டுப் பிரிவீர்களா?

குலோத்: என்ன கூறுகிறாய்? நானா உன்னை விட்டுப் பிரிந்தேன்? என் உள்ளத்தைக் கேள். அது இங்கேயே உன்னைச் சுற்றிக் கிடந்தது. இந்தப் பொய்யுடல் மட்டும் பிரிந்தோமென்ற பேருடன் சென்றிருந்தது.

மதுராங்: (நகைத்து) உங்கள் உள்ளத்தை நான் பார்க்கவுமில்லையே! அது ஒருக்கால் என் உள்ளத்தோடு ஓடிப்போயிருக்கும். போகட்டும். நீங்கள் வருவீர்களென நான் இங்கு எவ்வளவு காலம் காத்திருந்தேன் தெரியுமா?

குலோத்: (நகைத்து) வா இப்படி அமர்வோம். (மேடையின்மேல் இருவரும் அமர்கிறார்கள்) நீ வருவாய் என்று நான் எவ்வளவு காலங் காத்திருந்தேன் தெரியுமா?

மதுராங்: (நகைத்து) சொன்னதைச் சொல்லுங் கிளிப் பிள்ளை!

குலோத்: ஆமாம். நீ இங்கே வந்து இந்த மேடையின் மேல் அமர்ந்து என்னை வைததையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கிளிப் பிள்ளை நன்ருய் நவிலுமே! கேட்டுப்பார்.

மதுராங்: (சுற்றிலும் பார்த்து) எங்கே அந்தக் கிளிப் பிள்ளை ?

குலோத்: அது உன் கையிலேயே உள்ளது.

மதுராங்: பொய்! இப்படித்தான் உங்கள் ஏமாற்றப் பேச்செல்லாம்!

குலோத்: மெய்யாகவே உன்கையிலகப்பட்டு விழிக்கிறது! நீ அதன் இறகுகளையெல்லாம் பிய்த்துவிட்டாய்! அது இனிப் பறந்து போகாது.

மதுராங்: (நகைத்து) ஓ! நீங்களா அக்கிளிப் பிள்ளை ? அப்படியானல் நீங்கள் முன்பே வந்துவிட்டீர்களோ ?

குலோத்: ஆமாம். அந்தச் செடிமறைவிலிருந்தேன். நீ கூறியதையெல்லாம் உளங்குளிரக் கேட்டேன்.

மதுராங்: (வெட்கத்துடன்) இதை அறியாதுபோனேன்! பாருங்கள் பெண்களின் பேதைமையை! போகட்டும். நீங்கள் கிளிப் பிள்ளைதானே ?

குலோத்: ஆமாம்.

மதுராங்: அப்படியானல் இக்கிளிப் பிள்ளை நான் சொல்வதைச் சொல்லுமா ?

குலோத்: சொல்வதென்ன ? இக்கிளிப்பிள்ளை செய்யவும் செய்யுமே!

மதுராங் : (புன்முறுவலுடன்) அக்கிளியைக் கேட்கிறேன் : பைங்கிள்ளாய் ! நான் உன்னை இந்தச் சோழ நாட்டுப் பொற் கூட்டிலே அடைக்கப் போகிறேன். பேசாமலிருப்பாயா ?

குலோத் : (நகைத்து) அக்கிளி கூறுகிறது : பொற் பாவாய் ! நீ எக்கூட்டிலடைத்தாலும் இன்மொழிகளை இயம்பும்போதெல்லாம் அவற்றைத் திருப்பி இசைத்துக்கொண்டேதா னிருப்பேன்.

மதுராங் : (நகைத்து) அப்படியானால் இக்கிளி பொல்லாதது ! அது இருக்கட்டும். போர் முடிந்ததா ?

குலோத் : இன்னும் முடியவில்லையே. உன் ஆணை கண்டு அச்சமுடன் ஓடிவந்தேன்.

மதுராங் : (முகவாட்டத்துடன்) எப்போதும் போர் தானா ?

குலோத் : (நகைத்து) வெற்றித் திருவை அடையாதவன் வீணன்றானே ?

மதுராங் : அப்படியானால் ஏன் வந்தீர்கள்? அந்த வெற்றித் திருவையே மணந்துகொள்வது நல்லதாயிற்றே ! (எழுகிறாள்.)

குலோத் : (அவளைத் தடுத்து) என்ன அப்படிக் கூறுகிறாய் ? இந்தச் சோழ மங்கையின் ஊக்கத்தாலேயே அந்த வெற்றி மங்கையை அடைய முடியும் !

மதுராங் : அவ்வெற்றி மங்கை கிடைத்தால் இச்சோழ மங்கையின் இடமென்ன ?

குலோத்: இருவருக்கும் ஒரே இடந்தான். ஆனாற் சோழமங்கையின் பணிப்பெண்ணாக அவ்வெற்றி மங்கை யிருப்பாள்.

மதுராங்: ஓ! அப்படியானால் இவளுக்கு நீங்கள் உங்கள் உள்ளத்திற் பாதியிடந்தான் வைத்திருக்கிறீர்களா? பாதிக் காதலையா இப்படிப் புகழ்ந்தீர்கள்?

குலோத்: அடடா! என்ன மாறுபாடான எண்ணம்! என் உள்ளம் உனக்குப் பாதியிடங் கொடுத்ததா? பாதிக் காதலா? என் உள்ளம் நீயே! என் காதல் நீயே! அதாவது என் உள்ளம் வேறு நீ வேறு இல்லை! என் காதல் வேறு நீ வேறு இல்லை! போதுமா?

மதுராங்: (பிணக்குடன்) என்ன போதும்? வீண் பேச்சுத்தான். ஆடவர்களின் நிலையே இதுதான் என இப்போதுதான் அறிகிறேன். நாங்கள் எங்கள் உள்ளத்தை யெல்லாம் உங்கள் காதலால் நிரப்பி வைப்போம். அதற்குப் பிரதியாக நீங்கள் உங்கள் உள்ளத்தில் வீர வேட்கை, புகழ் வேட்கை முதலியவற்றுடன் இன்னும் என்னென்ன சேருமோ அவைகளையும் அடைத்து எங்கள் காதலையும் ஒரு மூலையில் அடைத்து வைப்பீர்கள். இது உண்மைதானே?

குலோத்: அப்பப்பா! உன்னை என்னவோ என எண்ணினேன்! இதைக் கேள். எங்கள் உள்ளத்தில் உங்கள் காதல் முளைத்தால் அதிலிருந்துதான் வீரமும் புகழுங் கொடையும் யாவும் அரும்பி மலரும். விளங்குகிறதா?

மதுராங்: (புன்முறுவலுடன்) விளங்குகிறது. எனினும், அரசர் பெருமானாகிய தாங்கள் இந்த அற்பப்பெண்ணு

டன் இவ்வளவு காலத்தை வீணாக்கலாகாது. வாருங்கள் செல்வோம்.

குலோத்: (நகைத்து) அற்பப் பெண்ணா நீ? அற்புத ஆரணங்கல்லையோ? உன் ஆணையைச் சிறிதும் மீறேன். நம்மை இடையூறின்றிக் கூட்டிய இறைவன் வாழ்க. (இருவரும் கைகூப்பி இறைவனை வணங்கல்)

---

## காட்சி 27

**இடம்:** கங்கை கொண்ட சோழபுரம், அவைக்களம்.

**காலம்:** காலை.

(குலோத்துங்கனும் மதுராந்தகியும் உயர்ந்த மணிகளிழைத்த பொற்பீடங்களில் அமர்ந்திருக்கின்றனர். மதுராந்தகியின் மருங்கில் விமலையும் கமலையும் அமர்ந்துள்ளனர். ஜெயங்கொண்டார், விஜயாதித்தன், கருணாகரன், மதுராந்தகன், வீரவேள் ஆகியவர்களும் நாட்டிலுள்ள பெருங்குடி வேளிரும் வணிகரும் நிறைந்திருக்கின்றனர். யாவரும் அவரவர்க்குரிய இருக்கையில் இருக்கின்றனர்.)

ஜெயங்கொண்டார்: (எழுந்து) இப்பேரவையிலுள்ள யாவர்க்கும் என் வணக்கம். இன்று எனக்கு ஒரு நன்னாள்! எனக்கு மட்டுமன்று; இந்நாட்டிற்கே நன்னாள்! எனக்கு நன்னாளென ஏன் கூறினேனெனில் இப்பேரவையில் எவ்வளவோ பெரியார்களிருக்க, இந்நாட்டின் அரசியார் என்னை இந்த மங்கலத்தை இயம்பும்படிக் கூறியதைக் கொண்டுதான் கூறினேன். காலஞ் சென்ற நம்

அரசர் பெருமான் ஆணைப்படி நம் அரசியார் இந்தச் சோழ மண்டலத்தையும் தம்மையும் வீரர் திலகமும் பேரறிஞருமாகிய குலோத்துங்கப் பெருமானுக்குக் கொடுக்க இசைந்துள்ளார். இப்பொறுப்பை ஏற்று நடத்த வெட்கப்பட்டுத் தற்கொலை செய்துகொண்ட அதிராஜேந்திரரும் மனம் விரும்பி இதனை ஆதரிப்பதாக இயம்பியுள்ளார். அவர் அருவமாக இருந்து ஆசி கூறுவாரென நம்புகிறேன். ஆகவே, உங்கள் விருப்பத்தை விளம்பும் வண்ணம் வேண்டிக் கொள்கிறேன். (அமர்தல்)

ஒரு பெருங்குடிவேள்: (எழுந்து) இந்தப் பேரவையினர் தம் தலைவராக இணையற்ற வீரமணியான குலோத்துங்கரை ஏற்க முழு மனத்துடன் இணங்குகின்றனர். பெரு மகிழ்ச்சியுங் கொள்கின்றனர். மேலும் நம் இந்நாட்டுச் செல்வ அரசிளங்குமரியான மதுராந்தகியம்மையாரே இந்நாட்டுக் கரசியராகவும் அமைந்தது கொண்டு தங்கள் மகிழ்ச்சிக் கெல்லையில்லையென எண்ணுகின்றனர். (அமர்தல்)

ஒரு பெருக்குடிவணிகர்: (எழுந்து) இப் பேரவையினரின் சார்பாக நான் இதை முழுமனத்துடன் ஆதரிக்கிறேன். (அமர்கிறார்)

ஜெயங்கொண்டார்: (எழுந்து) அங்ஙனமானால் விஜயாதித்தரைக் குலோத்துங்கருக்கு முடிசூட்டும் வண்ணம் உங்கள் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன் (அமர்கிறார்.)

கருணாகரன்: (எழுந்து) நான் இதை ஆதரிக்கிறேன். (அமர்கிறான்)

விஜயாதித்: (எழுந்து திருமணி முடியைக் கையிலெடுத்து) இப் பெரும்பணியை எனக்களித்த இப்

பேரவைக்கு என் வணக்கம் உரியதாகுக. (முடியைக் குலோத்துங்கனுக்குச் சூட்டுதல்) வேங்கிமங்கையையும் சோழமங்கையையும் வீரமங்கையையும் மணந்த குலோத்துங்கர் எம் அருமைத் திருமருமகளார் மதுராந்தகி யம்மையாரையும் மணந்து நீண்டநாள்வாழ்வாராக. (மதுராந்தகியின் கையைக் குலோத்துங்கன் கையில் வைத்தல்)

எல்லோரும்: குலோத்துங்கர் வாழ்க! மதுராந்தகி யம்மையார் வாழ்க! சோழமண்டலம் வாழ்க! தமிழ்நாடு வாழ்க! செந்தமிழ் வாழ்க! (மலர் மாரி தூவுகின்றனர்)

குலோத்: (எழுந்து கைகுவித்து) எமக்கு இப்பணியை அளித்த உங்களுக்கு எம் நன்றி. நாம் உங்கள் காவலை இன்றுமுதல் மேற்கொள்கிறோம். எம்மைத் தனியாக எண்ணுமல் உங்களில் ஒருவனாக எண்ணவேண்டும். உங்கள் நலத்தையன்றி வேறொன்றையும் உன்னுகிலேம். உங்கள் அன்பே எமக்கு இறையாகும். இந்த ஆட்சியை நடத்துவதில் உங்கள் எல்லோருக்கும் பங்குண்டு. நாம் உங்கள் ஏவலாளேயொழிய வேறு அல்லேம். நல்லதென நீங்கள் நாடுவதை நடத்தக் கடமை பூண்டுளேம். இறைவன் நமக்குத் துணைபுரிவாராக. (அமர்கிறான். எல்லோரும் அரசனுக்குரிய மரியாதையைச் செய்கின்றனர்.)

தமிழ் வாழ்க!

UNIVERSITY EXTENSION LIBRARY
7 DEC 1961